செம்மணி

நிலம் 2 துகள் 90 வள்ளுவர் ஆண்டு 2052, 09 - 15 சித்திரை 2022 வாரமலர் பக்கங்கள் 20 விலை ரூபா 50/-



# கொன்று புதைக்கப்பட்ட பெண்ணின் சடலம் அரியாலையிலிருந்து வெள்ளியன்று மீட்பு

## கடனை திருப்பிக் கேட்கச் சென்றபோது கொடூரம்

கொடுத்த கடனைத் திருப்பிக் கேட்கச் சென்ற சமயம் கொல்லப்பட்டார் என்று சந்தேகிக்கப்படும் குடும்பப் பெண்ணின் சடலம் அரியாலை மணியந்தோட்டத்தில் வெள்ளிக்கிழமை காவல்துறையினரால் தோண்டி எடுக்கப்பட்டது. கொல்லப்பட்ட பெண் பயணித்த மோட்டார் சைக்கிளும் புதைக்கப்பட்ட இடத்திலிருந்து மீட்கப்பட்டது.

மணியந்தோட்டம் உதயபுரம் கிராமத்தைச் சேர்ந்தவர் பிரதீபன் ஜெசிந்தா. வயது 42. சித்திரை மாதம் முதலாம் நாள் முதல் அவர் காணாமற் போயிருந்தார். காவல்துறையினரிடம் அது குறித்து

பக்கம் 02

# கோட்டா பதவி விலகாவிட்டால் அவர் மீது குற்றவியல் தீர்மானம்

## கொண்டுவரக் கேட்கிறது ஜேவிபி

அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ச பதவி விலகாவிட்டால் அவருக்கு எதிராக குற்றவியல் தீர்மானம் ஒன்றைக் (இம்பீச்மென்ட்) கொண்டு வந்து அவரைப் பதவி விலக்கவேண்டும். அவ்வாறே இந்த ஆட்சியின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்து அதனையும் அதிகாரத்திலிருந்து அகற்றவேண்டும். இந்த இரண்டுக்குமே ஜே.வி.பி. ஆதவரளிக்கும்.

இவ்வாறு தெரிவித்தார் ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித கேரத். நாடாளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை உரையாற்றிய அவர், அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ச பதவி விலகாமல் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பது தொடர்பில் பேசுவது அர்த்தமற்றது என்றார்.

அரசியல் சிக்கல் நிலையைத் தீர்க்காமல் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண முடியாது என்றார் ஆணித்தரமாக. நாட்டு மக்கள் அனைவரும் அரச தலைவர் பதவி விலகவேண்டும் என்று வலியுறுத்திவரும் நிலையில் அதைச் செய்யாமல் பொருளாதார நெருக்கடிக்கான தீர்வு குறித்துப் பேசுவதில் பயனில்லை, அதேபோன்று இந்த ஆட்சியும் மிக மோசமாக நடந்துகொள்கிறது, அதனையும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மூலமாகத் தோற்கடிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

அரச தலைவர் மீதான குற்றவியல் தீர்மானத்துக்கும் ஆட்சிக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கும் ஜேவிபி ஆதரவளிக்கும் என்றார் அவர்.

பக்கம் 02

# இலங்கைக்கு உதவ விரும்பும் தமிழ்நாடு பிச்சைக்காரர்

இலங்கையின் பொருளாதார நெருக்கடியைப் பார்த்து தமிழ்நாட்டில் உள்ள பிச்சைக்காரர் ஒருவர் தான் பிச்சை எடுத்துச் சேர்த்து வைத்திருந்த பணத்தை தானமாக



வழங்கியுள்ளார். இந்திய மதிப்பில் 20 ஆயிரம் ரூபாவை அவர் தனது அன்பளிப்பாக மதுரை மாவட்ட ஆட்சியரிட் வழங்கினார்.

தூத்துக்குடி மாவட்டம் ஆலங்கினறு பகுதியைச் சேர்ந்தவர் பூல் பாண்டி. பிச்சை எடுத்து வந்தாலும் அந்தப் பணத்தை

பக்கம் 20

# நெருக்கடிக்குத் தீர்வு ஏதுமின்றியே நாடாளுமன்ற அமர்வு ஒத்திவைப்பு

நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கான வழிவகை எதனையும் முன்வைக்காமலேயே நாடாளுமன்ற அமர்வு எதிர்வரும் 19ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

நாடும் கடும் பொருளாதார நெருக்கடியில் சிக்கியிருக்கும் நிலையில் நாடாளுமன்றம் கூடியது. இன்றைய நிலை குறித்து ஆராயப்பட்டு பொருளாதார மீட்சிக்கான வழிவகைகள் கண்டறியப்படும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் அத்தகைய எந்தவொரு பயன்மிக்க முடிவும் இன்றி கூட்டத்தொடர் ஒத்திவைக்கப்பட்டது.

வெள்ளிக்கிழமை கூடிய நாடாளுமன்ற அலுவல்கள் குழு மீண்டும் 19ஆம் திகதி முதல் 22ஆம் திகதிவரை நாடாளுமன்றத்தைக் கூட்டுவது என்று தீர்மானித்தது. இந்த

பக்கம் 20

# இலங்கைத் தமிழர்களுக்கு உதவ வேண்டும் இந்தியா

### ஸ்டாலின் மத்திய அரசிடம் கோரிக்கை

இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட இலங்கை தமிழர்களுக்கு உதவ வேண்டும் என்று இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கரிடம் தொலைபேசி வாயிலாக தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பான தமிழக அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தமிழ்நாடு முதலமைச்சர்

பக்கம் 02

# மக்களுக்கு சேவையாற்றவே வந்தேன் அரசியல்வாதிகளுக்கல்ல - மத்திய வங்கி ஆளுநர்

நாட்டு மக்களுக்குச் சேவையாற்றவே வந்துள்ளேன், எந்த அரசியல்வாதிக்குமல்ல. இவ்வாறு தெரிவித்துள்ளார் மத்திய வங்கியின் புதிய ஆளுநர்.

பொருளாதார நெருக்கடியை அடுத்து மத்திய வங்கியின் ஆளுநராக இருந்தவரான அஜித் நிவாட் கப்ரால் பதவி விலகினார். அவரது இடத்திற்கு நந்தலால் வீரசிங்கவை



பக்கம் 02

# பன்னாட்டு நாணய நிதியத்துடன் பேச நிதி அமைச்சரை தேடுகிறது இலங்கை

அதிகரித்துவரும் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கான ஒரே வழியாக பன்னாட்டு நாணய நிதியத்துடன் பேச்சு நடத்த இலங்கை அரசு முயன்று வரும் நிலையில், அந்தப் பேச்சுக்களை நடத்துவதற்கான பொருத்தமான நிதி அமைச்சர் ஒருவரைத் தேடி வருகின்றது இலங்கை.

நிதி அமைச்சராக இருந்தவரான பசில் ராஜபக்ச தனது பதவியில் இருந்து கடந்த வார இறுதியில் விலகினார். பொருளாதாரப் பேரிடருக்குள் நாடு சிக்கிக் கொண்டதை அடுத்து அரச தலைவர் உள்ளிட்ட ஆட்சியாளர்களுக்கு எதிராக வலுத்துவரும் போராட்டங்களின் விளைவாக ஒட்டுமொத்த அமைச்சரவையும் பதவி விலகியபோது பசிலும் பதவியிலிருந்து விலகினார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அமைச்சரவை பதவி விலகியதைத் தொடர்ந்து திங்கட்கிழமை புதிய நிதி அமைச்சராக முன்னாள் நீதி அமைச்சர் அலி சப்ரி நியமிக்கப்பட்டார். எனினும் பதவியேற்றுக்கொண்ட 24 மணி நேரத்திற்குள்ளாக அவர் தனது நிதி அமைச்சர் பதவியைவிட்டு விலகுகிறார் என்று அறிவித்தார். அத்தோடு தேவைப்பட்டால் தேசியப் பட்டியல் மூலமான தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை விட்டு விலகவும் தான் தயாராக இருக்கிறார் என்றும் அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ச

பக்கம் 02

# செம்மண்

வாரப் பத்திரிகை
551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
மின்னஞ்சல்: shemman.redsoil@gmail.com
தொடர்பு எண்: 021 492 7781
உரிமை மற்றும் வெளியீடு: கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிட்
ஆசிரியர்: தே.பிரேமானந்த்




# அரச தலைவர் உடன் பதவி விலக வேண்டும்

பொருளாதார நெருக்கடியின் பாதிப்பைத் தாங்க முடியாமல் மக்கள் வீதிகளுக்கு இறங்கி ஒரு வாரத்திற்கும் மேலாகிவிட்டது. இலங்கை வீதிகளை மட்டுமன்றி உலக நாடுகள் பலவற்றின் வீதிகளிலும் "கோட்டா வீட்டுக்குப் போ" என்கிற குரல் ஓங்கி ஒலிக்கின்றது. என்றாலும் அந்தக் குரல்களுக்குத் தான் செவி சாய்க்கப் போவதில்லை என்பதை அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ச வெளிப்படுத்தியிருக்கிறார்.

இந்த ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள் எல்லாம் எதிர் கட்சிகளின் தூண்டுதலின் பேரில் அவர்களது ஆதரவாளர்களால் நடத்தப்படுபவை என்றும், தனக்கு வாக்களித்த 69 லட்சம் மக்களின் விருப்பத்துக்க மாறாகத் தான் பதவியிலிருந்து விலகிச் செல்லப்போவதில்லை என்றும் அவர் ஆணித்தரமாகத் தனது கருத்தைத் தெரிவித்திருக்கிறார்.

மக்கள் வீதிகளில் இறங்கி இரவு நேரங்களில் போராட்டங்களைத் தொடர்ந்தும் நடத்தி வருகின்றார்கள். வெள்ளிக்கிழமையும் தொடர்ந்து பகலிலும் இரவிலும் போராட்டங்கள் இடம்பெற்றன. போராட்டங்களைக் கட்டுப்படுத்த காவல்துறையினர் கண்ணீர்புகைக் குண்டுகளை வீசுவதும் நீரைப் பீய்ச்சியடிப்பதும்கூடத் தொடர் கதையாக நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. இருந்தாலும் இந்தப் போராட்டங்களுக்கு மதிப்புக் கொடுத்துப் பதவி விலகும் எண்ணம் அரச தலைவருக்கோ ஆட்சியாளர்களுக்கோ இருப்பதாகத் தெரியவில்லை.

அரச தலைவராகத் தான் தோற்றுவிட்டதை ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவம் இல்லாததன் காரணமாகவே கோட்டாபய ராஜபக்ச பதவியிலிருந்து மறுத்து வருகிறார். அவர் ஆட்சிக்கு வரும்போது மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் எவற்றையும் அவரால் நிறைவேற்ற முடியாத நிலை முற்றிலுமாக வந்த பின்னரும் தனது தோல்வியை ஒப்புக்கொள்ள அவருக்கு மனம்வரவில்லை.

ஒழுக்கமிக்க விழுமியமிக்க இளம் சமூகம் ஒன்றைக் கட்டியெழுப்புவேன் என்று வாக்குறுதியளித்துப் பதவிக்கு வந்த அவரால் இன்று வரலாற்றில் இல்லாத மிக மோசமான கெட்டவார்த்தைகளுடன் வீதியில் இறங்கும் ஒரு தலைமுறையைத்தான் வெளிப்படுத்த முடிந்துள்ளது. இதுவரைக்கும் எந்தவொரு ஆர்ப்பாட்டத்திலும் பயன்படுத்தப்படாத மோசமான வார்த்தைகளுடன் இளைஞர்களைத் தெருவிற்கு இறக்கியமைதான் அவரது ஆட்சியின் சாதனையாக இருக்கின்றது.

விவசாயத்தில் தன்னிறைவை எட்டுவோம் என்று கொடுத்த வாக்குறுதிக்குப் பதிலாக, சரியாகவோ முறையாகவோ திட்டமிடப்பட்டாத இயற்கை விவசாயக் கொள்கை மூலமாக இருந்த விவசாய உற்பத்தியையும் பாழக்கியதைத் தவிர அரச தலைவர் செய்தது ஒன்றுமில்லை.

கல்வியில் அபிவிருத்தி என்பதோ, கட்டுமான அபிவிருத்தி என்பதோ சாத்தியப்படக்கூடிய நிலையில் நாட்டின் பொருளாதாரத்தை அவர் வைத்திருக்கவில்லை என்பது இப்போது வெட்டவெளிச்சமாகிவிட்டது. சுபீட்சமான நாடு என்பதற்குப் பதிலாக இன்று ஒளியற்ற இருண்ட நாட்டையே அரச தலைவரால் வளர்த்தெடுக்க முடிந்துள்ளது.

இவ்வாறு ஒவ்வொரு விடயத்திலும் தோல்வியை மட்டுமே தழுவிய நிலையிலும் மக்கள் வீதிக்கு இறங்கிப் போராட்டம் நடத்தி வரும் நிலையிலும் பதவி விலக அரச தலைவர் மறுப்பது நியாயமற்றது. தனதும் தனது ஆட்சியினதும் தோல்வியை ஏற்றுக்கொண்டு உடனடியாகப் பதவி விலகி அவர் வழிவிடவேண்டும். அப்போதே இடைக்கால நிர்வாகம் ஒன்றின் மூலம் பொருளாதார நெருக்கடியிலிருந்து வெளிவருவதற்கான அடுத்த கட்ட நடவடிக்கையை நோக்கி நாடு முன்னகரமுடியும். இல்லையேல் நிலைமை மேலும் மோசமாகி நாடு அதளபாதாளத்திற்குள் விழுவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

இந்த நிலைமையை விளங்கிக்கொண்டு மக்கள் நலன் கருதி அரச தலைவர் உடனடியாகப் பதவி விலகவேண்டும். அதுவே அவர் இப்போதைக்கு நாட்டு மக்களுக்குச் செய்யக்கூடிய அதிகூடிய நன்மை.

## கொன்று...

முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது. மணியந்தோட்டப் பகுதியில் வசிக்கும் சிலருக்கு ஜெசிந்தா பணம் கடனாகக் கொடுத்திருந்தார். வட்டியோடு அதனை வசூலிக்கச் சென்ற பின்னரே அவர் காணாமற்போயிருந்தார் என்று காவல்துறை முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

கடன் வசூலிக்கச் சென்ற இடத்தில் ஏற்பட்ட கருத்து மோதலால் ஜெசிந்தா கொன்று புதைக்கப்பட்டார் என்கிற இரகசியத் தகவல் காவல்துறையினருக்குக் கிடைத்ததை அடுத்து மணியந்தோட்டம் 11ஆம் குறுக்குத் தெருவில் உள்ள ஒரு வீட்டினருகே தோண்டிப் பார்ப்பதற்கான அனுமதியை காவல்துறையினர் பெற்றிருந்தனர்.

வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் நீதிவான் மன்ற நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராசா முன்னிலையில் தோண்டல் பணி தொடங்கியது. சுமார் 6 அடி ஆழத்தில் பெண்ணின் சடலம் அழுகிய நிலையில் மீட்கப்பட்டது. சடலம் கிடைத்த இடத்துக்கு அருகில் மற்றொரு இடத்தில் புதைக்கப்பட்டுருந்த மோட்டார் சைக்கிளையும் காவல்துறையினர் மீட்டனர்.

குறித்த வீட்டில் வசித்த கணவன், மனைவி ஆகியோர் கைது செய்யப்பட்டனர். அவர்களுக்கு உதவிய குற்றச்சாட்டில் அவர்களது உறவினர் முறையான இளைஞர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

## இலங்கைத்...

மு.க.ஸ்டாலின், மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கரை தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு, இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக, பாதிக்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழர்களுக்கு உதவ வலியுறுத்தினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கரை நேற்று (07) தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு, இலங்கையில் தற்போது நிலவும் சூழ்நிலை குறித்து பேசினார்.

அப்போது, இலங்கையில் முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு தற்போது நிலவும் தீவிர பொருளாதார நெருக்கடியில் சிக்கி, வேதனையில் தவித்துக் கொண்டிருக்கும் இலங்கைத் தமிழர்கள் குறித்து தனது ஆழ்ந்த கவலையை தெரிவித்துக் கொண்ட முதலமைச்சர், இந்தச் சூழ்நிலையில், இலங்கையில் வசிக்கும், குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலும், தலைநகர் கொழும்பிலும் வசிக்கும் தமிழர்கள் மற்றும் மலையகத் தமிழர்களின் நலன் கருதி, தமிழ்நாடு அரசு அத்தியாவசிப் பொருட்களான அரிசி, பருப்பு மற்றும் உயிர் காக்கும் மருந்துகளை கப்பல் மூலம் தூத்துக்குடி துறைமுகம் வாயிலாக அனுப்புவதற்குத் தயாராக உள்ளதாகவும், மனிதாபிமான நோக்கில் அனுப்பப்படும் இத்தகைய பொருட்களை உணவின்றித் தவிக்கும் தமிழர்களுக்கு கொழும்பு மற்றும் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் தூதரகம் மூலம் விநியோகிக்க உரிய அனுமதியையும், ஏற்பாடுகளையும் செய்ய வேண்டுமென்றும் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சரைக் கேட்டுக் கொண்டார்.

இதுதொடர்பாக, இந்தியப் பிரதமரை கடந்த 31/03/2022 அன்று சந்தித்து, தான் முன்வைத்த கோரிக்கைகளை நினைவு கூர்ந்த முதலமைச்சர், அந்தக் கோரிக்கைகளை எல்லாம் உடனடியாக நிறைவேற்றிட வேண்டுமென்றும் அப்போது கேட்டுக் கொண்டார்.

அதேபோன்று, இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் அடிக்கடி தாக்கப்படுவது குறித்தும், கைது செய்யப்படுவது குறித்தும் தனது ஆழ்ந்த கவலையை மத்திய வெளியுறவுத் துறை அமைச்சரிடம் தெரிவித்துக் கொண்ட முதலமைச்சர், இலங்கைக் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு, இலங்கை சிறைகளில் வாடும் தமிழக மீனவர்கள் மற்றும் அவர்களது மீன்பிடிப் படகுகளை உடனடியாக விடுவித்திட மத்திய அரசு உரிய நடவடிக்கைகளை விரைந்து எடுத்திட வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

தமிழ்நாடு முதலமைச்சர் தெரிவித்த கோரிக்கைகள் தொடர்பாக, உரிய நடவடிக்கைகளை எடுப்பதாக மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர் உறுதி அளித்தார்." இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பன்னாட்டு...

வுக்கு கடிதம் எழுதினார்.பொருளாதார விவகாரத்தை முறையாகக் கையாளக்கூடிய பொருத்தமான ஒருவரை வெளியில் இருந்தாவது நாடாளுமன்றத்திற்குக் கொண்டு வந்து அவரை நிதி அமைச்சராக்குவதற்கு வசதியாகவே தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை விட்டுக்கொடுப்பதற்கும் அலி சப்ரி தயாராக இருந்தார்.

இருப்பினும் அவரது பதவி விலகலை அரச தலைவர் ஏற்றுக்கொள்ளவில்லை. அதாலேயே தான் நிதி அமைச்சராக நாடாளுமன்றத்தில் உரையாற்றுகின்றார் என்று அலி சப்ரி வெள்ளிக்கிழ தெரிவித்தார். இலங்கை தொடர்பாக பன்னாட்டு நாணய நிதியம் வெளியிட்ட அறிக்கை மீது நாடாளுமன்றத்தில் நடத்தப்பட்ட விவாத்தில் அவர் இந்தக் கருத்தை முன் வைத்தார்.

"நான் நிதி அமைச்சராக இன்று உரையாற்றுகின்றேன். அந்த நேரத்தில் இருந்த கோரிக்கைகளுக்கு அமைவாக அரச தலைவர் என்னை அந்தப் பதவிக்குத் தேர்ந்தெடுத்தார். ஆனால் இந்தப் பதவியைப் பொருத்தமான ஒருவருக்குக் கொடுக்கலாம் என்று பின்னர் நான் எண்ணினேன்" என்றார் அமைச்சர் அலி சப்ரி.

"ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட பன்னாட்டுச் சமூகம், தற்போதைய நிலையற்ற தன்மை நாட்டின் எதிர்காலத்திற்கு ஆபத்தானது என்று தெரிவித்திருக்கின்றது. நாம் இந்தப் பதவியை யாருக்கேனும் கொடுப்பதற்குத் தயாராக இருக்கின்றோம். ஆனால் எவராவது அதனைப் பெறுவதற்கு முன்வரவில்லை. நாட்டின் நன்மை கருதி நானே அந்தப் பதவியை ஏற்றுக்கொள்ள வேண்டியதாகிவிட்டது!" என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## மக்களுக்கு...

புதிய ஆளுநராக நியமித்தார் அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ச.

பதவியேற்றுக்கொண்டதை அடுத்து வெள்ளிக்கிழமை முதல் தடவையாக ஊடகவியலாளர்களைச் சந்தித்தார் ஆளுநர் நந்தலால். பொருளாதார நெருக்கடியின் வேகத்திற்கு ஒரு தடை போடும் வகையில் வங்கிகளில் சேமிப்புக்கு வழங்கப்பட்டு வந்த வட்டி வீதம் அதிகரிக்கப்படுவதாக அப்போது அவர் அறிவித்தார். தற்போது வழங்கப்பட்டுவரும் வட்டி வீதத்தின் இரு மடங்காக அந்த வட்டி வீதம் உயர்த்தப்படவுள்ளது.

மத்திய வங்கியை சுயாதீனமாக இயக்குவதற்குத் தான் எதிர்பார்த்துள்ளார் என்று ஆளுநர் அந்தச் சந்திப்பில் குறிப்பிட்டார். வெளித் தலையீடுகள் எது வும் இருக்காது என்கிற உறுதிமொழி அரச தலைவரால் தனக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தற்போதுள்ள நிலமை சவால் மிக்கது. அதிலிருந்து மீள நாம் உறுதியான முடிவுகளை எடுக்கவேண்டும். நிலமை சீராகுவதற்கு முன்பாக அது மேலும் மோசமாகும் என்பது எதிர்பார்க்கக்கூடியதே. இருந்தாலும் நிலமையின் வேகத்தைத் தணிப்பதற்கான தடைகளை நாம் ஏற்படுத்தவேண்டியிருக்கின்றது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ராஜபக்சக்கள் அகற்றப்படாமல் இலங்கைக்கு மீட்சி இல்லை



## கே.எஸ்.ஆர். பேட்டி

ச.ச.சிவசங்கர்

பொருளாதார நெருக்கடியில் நிலைகுலைந்திருக்கும் இலங்கை, அடுத்து அரசியல் தளத்திலும் பெரும் அதிர்வுகளை எதிர்கொள்கிறது. அடுத்தடுத்து வரும் பகீர் செய்திகளால் அதிர்ச்சியோடு இலங்கையை உற்றுநோக்குகின்றன உலக நாடுகள். தமிழ்ச் சமூகத்தைப் பொறுத்தவரை இது இரட்டைத் துயரம். என்ன நடக்கிறது அங்கே? இலங்கை விவகாரத்தில் நெடிய அவதானமும் கூர்ந்த பார்வையும் கொண்ட மூத்த வழக்குரைஞரும் திமுக மூத்த தலைவர்களில் ஒருவருமான கே.எஸ். ராதாகிருஷ்ணன் சமீபத்தில் இலங்கை சென்று வந்திருக்கிறார். அவருடன் எடுக்கப்பட்ட இந்தப் பேட்டி இலங்கை விவகாரத்தின் பல் வேறு பரிமாணங்களையும் புரிந்துகொள்ள உதவுகிறது.

**பிரபாகரன் காலத்தில் இருந்து பலமுறை இலங்கை சென்று வந்தவர் நீங்கள். உங்களுடைய சமீபத்திய பயணம் எப்படி இருந்தது?**

வேதனை! இது என்னுடைய எட்டாவது பயணம். பிரபாகரன் அங்கே களத்தில் இருந்த காலத்திலிருந்து சென்று வருகிறேன். உள்நாட்டுப் போரால் மோசமாக இலங்கை பாதிக்கப்பட்டிருந்த காலத்தில்கூட சென்றிருக்கிறேன். போருக்குப் பின்னரும் சென்று வந்திருக்கிறேன். இப்போது போல மக்கள் மோசமாக பாதிக்கப்பட்டதைக் கண்டதில்லை. ஆனால், நெடுநாள் நிர்வாகச் சீரழிவின் விளைவு இது. முக்கியமாக ராஜபக்ஷ குடும்பமே இதற்கான பெரும் காரணம்.

**மோசமான சூழல் என்றால், எதைச் சொல்கிறீர்கள்? கொஞ்சம் விவரிக்க முடியுமா?**

மக்கள் சாப்பாட்டுக்கே சிரமப்படுகிறார்கள். பிழைப்பு என்னவாகும். கையில் உள்ள சேமிப்புக் கரைந்தால் என்ன செய்வது; நாட்டின் எதிர்காலம் என்னவாகும்; இப்படி எல்லாம் ஏராளமான கேள்விகள்! முப்பது ரூபாய்க்கு விற்கும் பச்சை மிளகாய் இரண்டாயிரம் ரூபாய்க்கு விற்றால் மக்கள் என்னதான் செய்ய முடியும்? எல்லாப் பொருட்களின் விலையும் உச்சம் தொட்டிருக்கின்றன. அங்கர் பால்மா ஒரு கிலோ 1960 ரூபாய்க்கு விற்கிறது. பெட்ரோல் டீசலுக்குக் கடும் தட்டுப்பாடு. பார்த்த இடங்களில் எல்லாம் மக்கள் வரிசையில் நின்றார்கள். இரண்டு மணி நேரத்திற்கு மேல் காத்திருக்க வேண்டும் என்றார்கள். ஆசியாவிலேயே இலங்கையில்தான் அதிக அளவுக்குப் பணவீக்கம் நிலவுகிறது. பொருளாதாரம் நிலைகுலைந்திருப்பதால் வேலை வாய்ப்புகள் கேள்விக்குள்ளாகி இருக்கின்றன. அரசு மக்களின் கடும் எதிர்ப்பை எதிர்கொள்கிறது. பெருகும் போராட்டங்களுக்கு ஈடு கொடுக்க முடியவில்லை. சர்வதேச அளவில் இலங்கை எதிர்பார்க்கும் அளவுக்கு உதவிகள் கிடைக்கவில்லை. அதனால் கண்ணுக்கு எட்டியவரை குழப்பமும் கலக்கமுமே வெளிப்படுகின்றன.

**நெடுநாள் நிர்வாகச் சீர்கேடுகள் இதற்கு காரணம் என்று எப்படிச் சொல்கிறீர்கள்?**

இலங்கை சுயாதீனமாகச் செயல்படுவதற்கேற்ற பொருளாதாரத்தை இலங்கை ஆட்சியாளர்கள் உருவாக்கவில்லை. சுதந்திரம் அடையும் காலத்தில் ஒரு நாடு பெரும் திட்டமிடலை நோக்கி நகர வேண்டும். இலங்கையில் அது நடக்கவில்லை. 26 ஆண்டுகள் தொடர்ந்த உள்நாட்டு போர் சூழலை மேலும் மோசம் ஆக்கியது. போருக்குப் பின் இலங்கையின் சூழல் மாறும் என்று பலரும் நினைத்தார்கள். பல நாடுகளும் முதலீடுசெய்வதற்கு வாய்ப்பான கேந்திரமாக இலங்கையைப் பார்த்தன. ஆனால், பொருளாதார ரீதியாக ஒரு நாடு மேலெழுந்து வர அரசியல் உறுதிப்பாடும், சமூக நல்லிணக்கமும் முக்கியம். ஒரு பெரிய உள்நாட்டுப் போரிலிருந்து விடுபட்ட பிறகும்கூட இலங்கை ஆட்சியாளர்கள் திருந்தவில்லை. குறிப்பாக, சிங்கள இனவாதம் அதே மேலாதிக்கத்தைத் தொடர்ந்தது. ஏற்கெனவே போர்க் காலத்தில், ஊழலில் திளைத்ததில் ருசி கண்ட ராஜபக்ஷ குடும்பம், படைத்துறை ரீதியாகச் செலவழிப்பதைக் குறைக்கவில்லை. ஏனென்றால், பாதுகாப்புத் துறையில் ஊழல்களைக் கமுக்கமாகச் செய்யலாம் என்பது உலகப் போக்கு அல்லவா? ராஜபக்ஷ பதவியிலிருந்து அகற்றப்பட்ட பிறகும்கூட அடுத்து வந்த ஆட்சியாளர்களாலும் தேசிய வெறித் தீயிலிருந்து தப்ப முடியவில்லை. சரியாகச் சொல்வதானால், தேசியத்தின் பெயரிலான ஊழல் நிர்வாகம்தான் இலங்கையை இந்தச் சூழ்நிலைக்குத் தள்ளியுள்ளது.

**ஆனால், கொரோனாவுக்குப் பிறகுதானே இந்த நெருக்கடி?**

கொரோனா இவர்களது ஆட்சியின் அலங்கோலத்தை அம்பலப்படுத்தியுள்ளது. அப்படிதான் சொல்லவேண்டும். ஈஸ்டர் நாள் குண்டுவெடிப்புகளில் 253 பேர் உயிரிழந்தது உலக அளவில் சுற்றுலா பயணிகளைப் பீதியில் தள்ளியது. கொரோனா காலகட்டம் அந்த நாட்டின் பெரும் பொருளாதாரமான சுற்றுலா துறையை மூழ்கடித்தது. இதெல்லாம் உண்மை. ஆனால், கொரோனா உலகளாவிய சவால் என்பதை நீங்கள் மறந்துவிடக்கூடாது. நல்ல நிர்வாகிகளாக இருந்தால், அவர்கள் சங்கடத்திலிருந்து நாட்டை வெளியே கொண்டுவந்திருப்பார்கள்.

**இன்றைய நிலைமைக்கு மரபுவழி வேளாண்மையையும் ஒரு காரணமாகச் சொல்கிறார்கள். மரபுவழி வேளாண்மை தவறான முடிவா?**

இல்லை. அது நவீன உர - பூச்சிக்கொல்லி உற்பத்தியாளர் லாபியினுடைய பரப்புரை. இருக்கிற அமைப்பிலிருந்து புதிய ஒன்றை நோக்கிச் செல்லும்போது நிதான அணுகுமுறை அவசியம். மரபுவழி வேளாண்மையில் விளைச்சல் குறைவாக இருக்கும். அதற்கேற்ப உற்பத்தியைத் திட்டமிட்டு அமலாக்கியிருந்தால், இது பிரச்சினையாக இருக்காது. திடீரென ஒருநாளில் நவீன உர - பூச்சிக்கொல்லி அத்தனைக்கும் தடை விதித்த அடாவடியால்தான் இன்றைய சூழல் ஏற்பட்டது. அரசு இப்படித் தடையைக் கொண்டுவந்துவிட்டு, விளைச்சலில் பாதிப்புகள் ஏற்படுவதைக் கண்டு தடையை நீக்கியது. ஆனால், போதிய சேதாரம் ஏற்கெனவே நிகழ்ந்துவிட்டது. நெல் சாகுபடியில் 25%, தேயிலைச் சாகுபடியில் 35%, தென்னைச் சாகுபடியில் 30% அளவுக்கு விளைச்சல் குறைந்துவிட்டது. இப்படி ஏற்பட்ட உணவுத் தட்டுப்பாடானது அத்தியாவசியப் பொருட்கள் விலையை மேலும் கூட்டிவிட்டது.

**இந்த நிலைமைக்கு படைமயக்கலை ஒரு காரணமாகக் கூறுகிறீர்கள்; கொஞ்சம் விளக்கலாமா?**

போருக்குப் பின் இந்தியா உள்ளிட்ட பல தரப்புகளிலிருந்தும் ஏராளமான நிதி இலங்கையை வந்தடைந்தது. எல்லாம் தமிழர்கள் புனர்வாழ்வுக்காக அளிக்கப்பட்ட நிதி. இந்த நிதியை எல்லாம் ராணுவத்துக்கு மடைமாற்றியது இலங்கை அரசு. இந்தியா வழங்கிய பல நூறு கோடி ரூபாய் என்னவானது என்பதே ஓர் உதாரணம். தமிழர்களுக்கு 43,000 வீடுகள் கட்ட ரூ.1,300 கோடி கொடுத்தது மன்மோகன் சிங் அரசு. இதேபோல் பள்ளி மாணவர்களுக்கு சைக்கிள், விவசாயிகளுக்கு டிராக்டர், வவுனியாவில் மருத்துவமனை என்று பல வகையில் திட்டமிடப்பட்டது. அடுத்து வந்த மோடி அரசும்கூட உதவியது. இந்த நிதியெல்லாம் முறையாகச் செலவிடப்படவில்லை என்பதை என்கள ஆய்வில் அறிந்துகொண்டேன்.

போர் முடிந்து விடுதலைப் புலிகள் இயக்கம் முற்றிலும் அழித்தொழிக்கப்பட்ட பிறகும்கூட தமிழர்ப் பகுதிகளில் படைகள் நிறுத்தப்பட காரணம் என்ன? உள்நாட்டில் மட்டுமல்லாது, அயலக உறவிலும் படைத்துறை வியூகங்களுக்கே முக்கியத்துவம் கொடுத்தது இலங்கை. அப்படிதான் சீனாவோடு அளவுக்கு அதிகமான பிணைப்பை உருவாக்கிக்கொண்டது. இந்தியாவையும் மேற்கு நாடுகளையும் இதன் மூலம் பகைத்துக் கொண்டது. எல்லாமும் சேர்ந்துதான் இந்தச் சீரழிவிற்கு இலங்கையைத் தள்ளியுள்ளன.

**ராஜபக்ச சகோதரர்கள் அறிவித்த இலவச திட்டங்களும் இதற்கு ஒரு காரணமா?**

மக்கள் நலத் திட்டங்கள் காரணம் இல்லை; அது பொய். முன்யோசனை அற்ற வரி நீக்கங்கள்தான் காரணம். இதனால், அரசுக்கு வரும் வரி வருமானம் குறைந்தது.

**சரி, தமிழர்கள் எப்படி இருக்கிறார்கள்?**

இலங்கையின் வடக்கு கிழக்கு பகுதிகளான தெற்கு தென்புலம் அம்பாரை, மட்டக்களப்பு, திரிகோணமலை, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், யாழ்ப்பாணம், வவுனியா போன்ற பகுதிகளுக்கும், மலையகப் பகுதிகளான நுவரேலியா, கண்டி போன்ற இடங்களுக்கும் சென்றேன். எல்லா இடங்களிலுமே மக்கள் பரிதவிப்போடுதான் இருக்கிறார்கள்.

தமிழர்களைப் பொறுத்தவரை இரண்டு சிக்கல்கள். முதலாவது படைத்துறைமயம், எங்கு பார்த்தாலும் துப்பாக்கிகளோடு உலவும் படையினர். தமிழர்கள் நிலத்தை ஆக்கிரமித்து பெரிய கட்டடங்கள், முகாம்களைக் கட்டிக்கொண்டு தமிழர்களை அச்சத்திலேயே வைத்திருக்கின்றனர். இரண்டாவது, பொருளாதாரச் சிக்கல். ஏற்கெனவே போரில் அடிவாங்கிய சமூகம் இப்போது இந்தப் பொருளாதார நெருக்கடியால் மேலும் ஸ்தம்பித்து இருக்கிறது.

**மூளும் எதிர்ப்பு ராஜபக்சவை ஆட்சியிலிருந்து அகற்றுமா?**

அகற்ற வேண்டும். நாடாளுமன்றத்தில் ராஜபக்ச கட்சி வலுவான இடத்திலேயே இருந்தது. ஆனால், முதலில் கூட்டணி கலகலத்து, இப்போது கட்சிக்குள்ளேயுமே சலசலப்புகள் கேட்கின்றன. மூளும் மக்களின் எதிர்ப்பு எதிர்க்கட்சிகளுக்குப் புதிய பலத்தைத் தந்திருக்கிறது. கட்சியிலும் ஆட்சியிலும் முழு ஆதிக்கம் செலுத்தும்

# சிறைக்குள்...

51



தர்மராசா

## களுத்துறையில் அனுபவித்த ஒரு கோர இரவு

மட்டக்களப்புக்குச் செல்வது நடக்க முடியாமல் நாம் திருப்பி அனுப்பப்பட்டு விடுவோமோ என்கிற பதற்றத்தில் நாம் இருந்தோம். ஸ்கொட்டைத் தீர்மானிப்பவர்கள் படை அதிகாரிகள்தான் என்பதால் சிறை அதிகாரிகளின் குரல் அங்கு எடுபடுவது மிகக் குறைவு. ஆனாலும் தான் எப்படியும் எம்மை அனுப்பி வைப்பேன் என்று சில்வா ஜெயிலர் வாக்குறுதியளித்திருந்தார். அது நடப்பதற்கான வாய்ப்புக்கள் மிகக் குறைவாகவே இருந்தன.

சில்வா ஜெயிலர் தொடர்ந்து முயற்சித்தன் பயனாக 10 நிமிடத்துக்குள் எங்களை மட்டக்களப்புக்கு அனுப்பலாம் என்று பதில் கிடைத்தது. உடனே களுத்துறைச் சிறைச்சாலையில் நாம் ஒப்படைக்கப்பட்டோம். ஜெயிலர் சில்வா, "இப்ப சந்தோசம்தானே" என்று சொல்லிவிட்டு எம்மிடமிருந்து விடைபெற்றுச் சென்றார். அதன் பின்னர் அவரைச் சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைக்கவில்லை. கடமை என்பதற்கு அப்பால் மனிதாபிமானம் அவரிடம் இருந்தது. எங்கள் பத்துப்பேரையும் களுத்துறைச் சிறைச்சாலை மருத்துவமனையில் ஒரு பழைய அறைக்குள் வைத்துப் பூட்டினார்கள். வழமையாக எம்மைப் பூட்டி வைக்கும் 'ஏ' வார்ட்டில் களுத்துறைச் சிறையிலிருந்த அனைத்து முஸ்லிம் கைதிகளும் ஒன்றாக இருந்து நோன்பு பிடித்துக்கொண்டிருந்ததால் அங்கு எம்மைத் தங்க வைக்க முடியாதிருந்தது.

நாம் பூட்டப்பட்ட அறை முழுவதும் குப்பை போடப்பட்டிருந்தது. கழிப்பறை ஒன்றிருந்தது அதற்குக் கதவுகூட இல்லை. படுப்பதற்காகத் தரப்பட்ட பிளாஸ்ரிக் பாய் ஒன்றை வாசலில் மறைப்பாகத் தொங்கவிட்டு அதைக் கதவுபோல பயன்படுத்தினோம். மணம், அழுக்கு எல்லாவற்றையும்விட நுளம்புத் தொல்லையே அதிகம்.

சிறிய ஓடைபோல இருந்த அறை ஒன்றில் நான் படுத்தேன். ஆனால் எந்த வகையிலும் நித்திரை கொள்வதற்கு நுளம்புகள் அனுமதிக்கவில்லை. அது ஒரு கோர இரவாகவே கழிந்து போயிற்று.

கல்முனையைச் சேர்ந்த வெதுப்பகம் ஒன்றின் முதலாளி ஒருவர், அவரது மகன், மருமகன் என எமது குழுவில் இருந்தார்கள். அந்த முதலாளி நுளம்புக்கடி தாங்கமுடியாது விடியும் வரை டாம் விளையாடிக் கொண்டிருந்தார். யாருமே முழுமையாக நித்திரை கொள்ளவில்லை. அதைவிட அம்பாறைக் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட ராஜா என்ற லொறிச் சாரதி ஒருவருக்குத் தொண்டைக்குள் சுடுநீரை ஊற்றித் துன்புறுத்தியதால் அவரது கழுத்துப் பாகத்தில் ஏற்பட்ட காயம் காரணமாக இரவில் படுத்துக் குறட்டை விடும்போது ஓர் அசாதாரண பெரிய சத்தம் கேட்கும். அதுவும் பெரிய தொல்லையாக இருந்தபோதிலும் ஒரு மனிதன் அனுபவிக்கின்ற அவஸ்தை என்ற அடிப்படையில் எல்லோரும் சகித்துக்கொண்டோம்.

சிறைச்சாலையில் இருந்த எல்லாக் கைதிகளும் எல்லா வகைத் துன்பங்களையும் அனுபவித்தார்கள். அவர்களின் குடும்பங்களுக்கு அவர்கள் அனுபவித்த துன்பங்கள் நேரடியாகத் தெரியாதிருந்தது பெரிய ஆறுதல்தான். அவை எழுத்தில் விவரிக்க முடியாத வேதனைகள்.

பூசாச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஜவ்பார் என்ற முஸ்லிம் நண்பர் ஒருவர் கூறினார், "சிறைக்குள் வந்த பின்னர் ஊரவங்களின்ர கண்ணே படவில்லை. நான் பல தடவைகள் சவூதிக்குப் போய் வந்தவன். அதனால் சிறைகுள்ளிருந்து விடுதலையாகிப் போகும்போது வான் ஒன்றில் போய் இறங்க வேண்டும். நல்ல சப்பாத்து ஊடுப்பு பெரிய பாக் எல்லாம் கொண்டுபோய் இறங்கினால் ஊரவர்கள் நினைப்பார்கள் ஜவ்பார் வெளிநாட்டிலிருந்து வருகிறான் என்று. யாராவது விசயம் தெரிந்தவன் எந்தக் நிறுவனத்தில் வேலை செய்தாய் என்று கேட்டால் அல் பூசா என்று சொன்னால் ஏதோ உரு புது நிறுவனம் என்று நினைப்பார்கள்" என்றான். அவன் எப்போதும் கலகலப்பாக இருப்பான். "எப்படியோ இவங்கள் எங்களை வெளில விடத்தானே வேண்டும்" என்பான்.

(தொடரும்)

## ராஜபக்சக்கள் ....

ராஜபக்ச குடும்பம் அரசின் 75% பட்ஜெட்டைத் தீர்மானிக்கும் துறைகளைத் தன் கையில் வைத்திருக்கிறது. அவர்கள் வைத்ததுதான் சட்டம் என்ற நிலைமைதான் இன்றைய சூழலுக்குக் காரணம். ஆக, ராஜபக்ச சகோதரர்கள் அகற்றப்படாமல் இலங்கைக்கு மீட்சி இல்லை.

**இந்த இடத்தில் இந்தியா செய்ய வேண்டியது என்ன?**

இலங்கை மக்கள் விரும்பும் ஓர் ஆட்சி அமைவதற்கான சூழல் அங்கே உருவாவதற்கு இந்தியாவும் உதவ வேண்டும். தமிழர்களுக்கு முன்னுரிமை கொடுப்பதாக இலங்கை உறவுக்கான பார்வையை இனியேனும் உருவாக்கிக்கொள்ள வேண்டும். இப்போதுள்ள அசாதாரணச் சூழல் முடிவுக்கு வந்ததும், தற்போது உக்ரைன் பிரச்சினையில் இந்தியாவின் கோரிக்கையைப் போல, இலங்கையில் தமிழின அழிப்பு குறித்த சர்வதேச அளவிலான சுதந்திரமான விசாரணை நடத்தப்பட குரல் கொடுக்க வேண்டும்.

தமிழர்கள் பகுதியில் உள்ள படையினரைத் திரும்பப் பெற அழுத்தம் தரவேண்டும். திரிகோணமலை துறைமுகத்தில் இந்தியாவின் வலுவான இருப்பை நிலைநிறுத்தவேண்டும். சீன ஆதிக்கத்திலிருந்து அந்நாட்டை விடுவிக்கும் வகையிலான நடவடிக்கை எடுக்கவும் இதை ஒரு சந்தர்ப்பமாக இந்தியா பயன்படுத்தலாம். தமிழர்கள் தங்களுடைய எதிர்காலத்தைத் தீர்மானிக்க பொதுக் கருத்தெடுப்பு நடத்தப்பட வேண்டும்; அதற்கான சூழலை இந்தியா உருவாக்க வேண்டும்.

**இனி இலங்கை என்ன செய்ய வேண்டும்?**

தம்முடைய குடிமக்களைச் சமமாக அது பாவிக்க வேண்டும். சமூக நல்லிணக்கம்தான் சமூக அமைதிக்கான அடித்தளம். அதன் மீதுதான் எந்தத் தொழிலையும், பொருளாதாரத்தையும் கட்டியெழுப்ப முடியும்.

# தரமிழக்கும் தமிழ் உறுப்பினர்கள்...?

**மாதவன்**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் தான் ஏன் நாடாளுமன்றில் சிங்கள மொழியில் உரையாற்ற வேண்டிய தேவை இருக்கிறது என்று கீழ்வருமாறு கூறியிருந்தார். தமிழில் பேசும்போது சிங்கள உறுப் பினர்கள் தமக்கு வழங்கப்பட்ட மொழிபெயர்ப்புக்கான கருவியை காதில் கொழுவிக் கொள்ளாது கழற்றி வைத்துவிடுகின்



றனர். சிலர் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உரையாற்றும் நேரத்தைப் பயன்படுத்திச் சிகரெட் புகைப்பதற்கும் சிறுநீர் கழிக்கவும் வெளியேறி விடுகின்றனர். இதனால் நாங்கள் என்ன பேசுகிறோம் என்பதை அவர்கள் செவிமடுப்பதில்லை - என்றிருந்தார்.

சாணக்கியன் கூறுகின்ற விளக்கம் சரியானதுதான். ஆயினும் மொழிபெயர்ப்பவர்கள்கூட வரிக்கு வரி மொழி பெயர்ப்பார்களே தவிர பேசுபொருளை அல்லது அதன் உள்ளார்ந்த அர்த்தத்தை உரியவாறு வெளிப்படுத்துவதில்லை. இதைவிடச் சாணக்கியனின் தாய் சிங்களப் பெண் என்பதால் சாணக்கியனின் தாய்மொழி சிங்களம். அது நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் ஏனைய சிங்கள உறுப்பினர்களுக்கு நன்கு தெரிந்த விடயம்.

நாடாளுமன்றில் தமிழர் தரப்பு உறுப்பினர்களாக மிக நீண்ட காலமாகக் கல்விமான்கள் பலர் இருந்தனர். உறுப்பினர்களின் உரைகள் ஹன்சார்ட் பதிவுப் புத்தகத்தில் பதிவு செய்யப்படுவதால் மூத்த நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜி.ஜிபொன்னம்பலம், செல்வநாயகம், நவரட்ணம், திருச்செல்வம், நீலன் திருச்செல்வம், அமிர்தலிங்கம், சம்பந்தன், தேவநாயகம், செ.ராஜதுரை ஆகியோரின் உரைகள் நாகரீகமான சொற்பிரயோகத்தையும் கண்ணியத்தையும் கொண்டிருந்தன. தாங்கள் மக்கள் பிரதிநிதிகள் என்பதிலும் தமக்கு வாக்களித்த மக்களை நாடாளுமன்றம் என்ற உயரிய சபையில் கேவலப்படுத் தக்கூடாது என்பதிலும் கவனம் செலுத்தினார்கள். தற்போதுகூட சம்பந்தன், சுமந்திரன், அங்கஜன் இராமநாதன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோரிடம் பொறுப்பாகப் பேச வேண்டும் என்ற மனநிலை காணப்படுகிறது.

அதேவேளை அவ்வப்போது தமிழர் பிரச்சினையைத் தீர்க்காது விட்டால் வெடிக்கும், பறக்கும் எனச் சம்பந்தன், மாவை சேனாதிராசா ஆகியோர் அறிக்கை விடுவதும் அது கேலிக் கூத்தாகவும் நடைமுறைச் சாத்தியமாகவும் தெரிவதும் நடக்கிறது. ஆனால் இத்தகைய உரைகளில்கூட அவர்கள் கண்ணியம் தவறி நடந்ததில்லை என்பதையும் ஏற்றுககொள்ளத்தான் வேண்டும்.





**வெட்டிப்பேச்சு உறுப்பினர்கள்**

விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்ட காலத்தில் தமிழருக்கான அரசியல் பிரிவு ஒன்றை நாடாளுமன்றுக்கு அனுப்ப முயன்றபோது 22 உறுப்பினர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற கட்சியின் கீழ் நாடாளுமன்றம் சென்றனர். அவர்களில் சிலர் நாடாளுமன்றிலும் தம்மைப் புலிகளின் அடையாளமாகக் காட்ட நினைத்துக் கடும் போக்கான பேச்சுகளை விசிறி விட்டார்கள். ஒரு தடவை செல்வராஜா கஜேந் திரன், 40 ஆயிரம் படைச் சிப்பாய் களைச் சவப்பெட்டியில் வைத்து அனுப்புவோம் பெறுவதற்குத் தயா ராக இருங்கள் - என்று நாடாளு மன்றில் உரையாற்றினார். இது போன்றதொரு ஆவேசமான பேச் சைப் போராட்டத்தை நடத்திக் கொண்டிருந்த புலிகளின் தலைவர் பிரபாகரன்கூட ஒருபோதும் பேசிய தில்லை.

**சாணக்கியனின் தாய் சிங்களப் பெண் என்பதால் சாணக்கியனின் தாய்மொழி சிங்களம். அது நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் ஏனைய சிங்கள உறுப்பினர்களுக்கு நன்கு தெரிந்த விடயம்**

நாடாளுமன்றத் தேர்தலில் வெல்வது என்பது மக்களின் வாக்குகளால் நடப்பது. இது ஜனநாயக அரசியலுக்கான ஒரு மேடை என்பது தமிழ் உறுப்பினர்கள் பலருக்குத் தெரிந்திருப்பதில்லை. நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்குரிய சிறப்புரிமை என்பது அவரால் பெறப்பட்டது அல்ல. அது மக்களின் வாக்குகளால் கிடைக்கப்பெறுவது. அச்சிறப்புரிமையைத் தவறான வகையில் பயன்படுத்துவது என்பது வாக்களித்த மக்களையும் தான் சார்ந்த கட்சி, இனத்தையும் கேவலப் படுத்துவதாக அமையும்.

தற்போதுள்ள உறுப்பினர்களில் சாணக்கியன், செல்வராசா கஜேந்திரன், சிறிதரன், கலையரசன் ஆகியோர் தாங்கள் மக்கள் பிரதிநிதிகள் என்பதை மறந்துவிடுகின்றனர். இவர்களது உரைகள் சிங்கள மக்களை தமிழர்களுக்கு எதிராகத் திருப்பிவிடும் வகையிலேயே அமைகின்றன.. இதைவிடச் சாணக்கியன் ஏற்கனவே வெற்றிலைச் சின்னத்தில் தேர்தலில் போட்டியிட்டுத் தோற்றவர். அவர் தற்போது தமிழ்த் தேசியம் பற்றிப் பேசுவது பெரும்பான்மைச் சமூகத்தை ஆத்திரமூட்டும். அந்த ஆத்திரம் மெதுவாகத் தமிழ் மக்கள் மீதும் திரும்பும். ஏற்கனவே 30 வருடப் போர், உயிரிழப்புகள், சொத்திழப்புகள் எனப் பலவற்றை ஏற்படுத்தியிருக்கிறது. இனிமேலும் தாம் இறங்குவதற்குப் படுகுழி இல்லை என்ற நிலையில் தமிழ் மக்கள் வாழும்போது தமிழ் உறுப்பினர்களின் போலி வீர உரைகள் சாதாரண பொது மக்களை மேலும் வருத்துவதாக உள்ளது. பாதிக்கப்பட்ட மக்களின் தலைவர்கள் கண்ணியமானவர்களாகவும் மக்கள் மீது பற்றுள்ளவர்களாகவும் விட்டுக்கொடுப்புகள் நிறைந்தவர்களாகவும் புத்திபூர்வமாகச் செயற்படக்கூடியவர்களாகவும் இருக்கவேண்டியது மிக மிக அவசியமாகும். முஸ்லிம் தலைவர்கள் பெருமளவுக்குத் தம்மையும் தமது மக்களையும் பாதுகாக்கக்கூடிய வகையில் நாடாளுமன்ற உரைகளைத் திட்டமிட்டு மேற்கொண்டு வருகிறார்கள். தமிழ்த் தலைவர்கள் இதில் மேம்படவேண்டியிருக்கிறது.





# ராஜபக்சக்களை வீட்டுக்கு அனுப்பினால் நிலமை சீராகுமா...?

**ரவீந்திரன்**

தற்போதைய ஆட்சியாளர்கள் அரசியலில் இருந்து ஒதுங்கி வீட்டுக்குச் செல்லவேண்டும் என்பதைவிட ராஜபக்ச குடும்பம் வீட்டுக்குச் செல்ல வேண்டும் என்கிற கோரிக்கை எல்லா இடங்களிலும் உச்சம் பெற்றிருக்கிறது. ஆனால் இன்று முக்கியமாகப் பேசப்படவேண்டிய விடயம் பொருளாதாரத்தை மறுசீரமைப்பது தொடர்பானது. அதை அரசியல் கட்சிகளோ, பல்கலைக்கழக மாணவர்களோ, சட்டத்துறை சார்ந்தவர்களோ, பொருளாதார நிபுணர்களோ கையில் எடுத்ததாகத் தெரியவில்லை. இந்த விடயத்தைக் கருத்தில் எடுத்தால் மட்டுமே மகிந்த குடும்பம் பதவியில் இருந்தாலென்ன அடுத்ததாக வேறு எவராவது பதவி

**ஒரு நாடு தனது கடன் சுமையிலிருந்து மீள்வதற்குத் தமது உற்பத்திகளை மேம்படுத்துவதும் ஏற்றுமதி வருமானத்தை அதிகரிப்பதும் அவசிய மாகும். இலங்கையின் ஏற்றுமதி வருமானத்தில் முக்கிய இடம்பெறும் தேயிலை ஏற்றுமதியை அதிகரிப்பது உடனடி அவசியம்**

ஏற்றால் என்ன தற்போதைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும்.

**சீனாவின் கடன் பொறி**

வெளிநாட்டு உறவு என்பது நலன்களின் அடிப்படையில் பேணப்படுவது. இதில் படை நோக்கமும் பொருளாதார நோக்கமும் முக்கிய இடத்தைப் பிடிக்கின்றன. சீனாவிடம் பெறப்பட்ட கடன்கள் பெரும்பாலும் 7 தொடக்கம் 8 வீத வட்டியைக் கொண்டன. இந்த அதிகரித்த வட்டி மற்றும் குறுகிய காலத்தில் கடனை மீளளிப்புச் செய்வது என்ற ஒப்பந்தம் போன்ற விடயங்கள் நாட்டைக் கடன்சுமைக்குள் சிக்க வைக்கும். அதுவே இலங்கைக்கு நடந்துள்ளது. அதேவேளை உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி போன்றன வழங்குகின்ற மென் கடன்களுக்கு ஒரு சதவீத வட்டியையும் கடனை மீளளிப்பதற்கு நீண்டகால அவகாசமும் வழங்கப்படும். மட்டுப்படுத்தப்பட்ட அந்தக் கடன் உதவி பேதாது என்பதாலேயே சீனா போன்ற நாடுகளிடம் அதிக கடனைப் பெறுவதில் தற்போதைய ஆட்சியாளர்கள் கவனம் செலுத்தினர்.

**கடன் மீளளிப்புத் தொடர்பான கலந்துரையாடல்**

தற்போதைய நெருக்கடியில் ராஜபக்ச அரசு சீனாவுடனான கடன் மீளளிப்புத் தொடர்பாகக் கலந்தாலோசிக்க வேண்டிய அவசர தேவையுள்ளது. ஏற்கனவே ஒத்துக்கொள்ளப்பட்ட வட்டிவீதத்தைக் குறைப்பது, கடன் மீளளிப்புக்கான காலத்தை நீடிப்பது என முக்கிய விடயங்கள் பற்றிய கலந்துரையாடலை மேற்கொள்ளுமாறு எதிர்ப்புப் போராட்டங்களில் ஈடுபடுபவர்கள் எவரும் வலியுறுத்தவில்லை. ராஜபக்ச குடும்ப அரசியலை ஒழிப்பது மட்டும் தற்போதுள்ள நிலைக்குத் தீர்வாக அமைந்துவிடப்போவதில்லை. இது தெரிந்தாலும் இன்றைய போராட்டங்களில் ஈடுபடுபவர்கள் அதுபற்றிப் பெரிதாக அலட்டிக்கொள்வதில்லை. இந்த நெருக்கடிக்கு மத்தியிலும் சீனா தனது கடனில் ஒரு பகுதியின் மீளளிப்பைத் தள்ளி வைப்பதற்கு இன்னும் சம்மதிக்கவில்லை. அப்படிப்பட்ட நிலையிலும் போராட்டக்காரர்கள் பொருளாதாரத்தைச் சீர்ப்படுத்தும் வழி குறித்து அக்கறைப்படாமல் இருப்பது அவர்களின் உள் நோக்கம் வேறு என்பதையே காட்டுகின்றது.

**உலகச் சந்தை விலை அதிகரிப்பு**

உலகச் சந்தையில் மசகு எண்ணெய்யின் விலை அதிகரித்ததன் காரணமாக இந்தியாவில் பெரிய அளவு நெருக்கடி ஏற்பட்டுள்ளது. ஒரு லீற்றர் பெற்றோலின் விலை இலங்கை ரூபா மதிப்பில் அங்கு 400க்கு மேல் விற்கப்படுகிறது. ஏனைய பொருள்களின் விலையும் பெரியளவில் அதிகரித்து வருகின்றது. இதே நிலையில் புதிதாக இலங்கையில் ஆட்சியமைப்பவர்கள் உலக சந்தை விலையை விடக் குறைந்த விலையில் பொருள்களை வழங்க முடியாத சூழல் ஏற்படும். நாடு முழுதும் எரிபொருள் மூலம் இயக்கப்படும் மின் பிறப்பாக்கிகளை வைத்துத் தொடர்ச்சியாக மின்சாரம் வழங்குவதுகூட நடைமுறைச் சாத்தியமானதல்ல. கூடங்குளம் அனல் மின் நிலையத்திலிருந்து கேபிள்கள் மூலம் மன்னார்ப் பகுதியூடாக மின் சாரம் வழங்குவது குறித்து இந்தியா ஆலோசித்து வருவதாகச் செய்திகள் அடிபடுகின்றன.

**ஏற்றுமதி வருவாயை அதிகரித்தல்**

ஒரு நாடு தனது கடன் சுமையிலிருந்து மீள்வதற்குத் தமது உற்பத்திகளை மேம்படுத்துவதும் ஏற்றுமதி வருமானத்தை அதிகரிப்பதும் அவசிய மாகும். இலங்கையின் ஏற்றுமதி வருமானத்தில் முக்கிய இடம்பெறும் தேயிலை ஏற்றுமதியை அதிகரிப்பது உடனடி அவசியம். தேயிலை உற்பத்திக்குத் தேவையான யூறியா வளங்கள், தொழிலாளர்களின் சம்பள விடயம், அவர்களுக்குத் தேவையான கோதுமை மா, உணவுப் பொருள்களின் மானிய வசதிகள் என்பவற்றை உரியவாறு நிர்ணயிக்கப்பதன் மூலம் ஓராண்டு காலத்துக்குள் தேயிலை உற்பத்தி மூலமான வருமானத்தை அதிகரிக்கச் செய்துவிட முடியும். இந்தத் துறையில் பெருமளவு பணத்தை முதலீடு செய்வதன் மூலம் ஏற்றுமதி வருமானத்தை அதிகரிக்க முடியும்.

ஒரு வருடத்துக்குத் தேவையான எரிபொருளை அரபு நாடுகளில் இருந்து நேரடியாகப் பெறுவது நல்லது. இதன் மூலம் பொருள்களின் தற்போதைய கட்டுமீறிய விலையை ஓரளவுக்காவது மட்டுப்படுத்த முடியும்.

**அரபு நாடுகளில் இருந்து மசகு எண்ணெய் பெறுதல்**

இத்தகைய விடயங்கள் பல நடைமுறைச் சாத்தியமானதாக உள்ளபோதிலும் யார் நாட்டைப் பொறுப்பெடுப்பது என்ற விடயத்தில் ஆளையாள் காட்டிவிட்டுப் பின்னுக்கு நிற்கிறார்கள். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் தரப்புகள் தத்தமது எதிர்கால அரசியலை நடத்துகிறார்களே தவிர மக்களுக்கான மாற்றுத் திட்டங்களை முன்வைக்கவில்லை.

எலி பொறியில் தங்கும் எந்தப்பெரிய பாரத்தையும் அது தொங்கவிடப்பட்டிருக்கும் நூலை நறுக்கி இலகுவாகக் கீழே விழுத்திவிடும் ஆனால் அந்தப் பாரத்தில் தொங்கிய ஒரு மூடையைக்கூட அதனால் தூக்க முடியாது. அதுபோன்றல்லாமல் தற்போதைய போராட்டக்காரர்கள் ராஜபக்சக்களை வீட்டுக்கு அனுப்பிவிட்ட பின்னர் அடுத்த அதிபர் யார் என்பதை முன்வைக்கவேண்டும் அதுவரை தற்போதுள்ள நிலையை மாற்றிவிடமுடியாது.

2019ஆம் ஆண்டு கோட்டாபய ராஜபக்ச அதிபராகும்வரை அதற்கு முன்னதான 4 ஆண்டுகளை எதிர்க்கட்சி வரிசையிலிருந்து பணியாற்றியே கைப்பற்றிக்கொண்டனர். அதேபோன்றதொரு பலமான எதிர்க்கட்சியால் மாத்திரமே தற்போதுள்ள ஆட்சியையும் மாற்றமுடியும். மக்களுக்கு நிம்மதியான வாழ்வையும் ஏற்படுத்த முடியும். முதலில் எதிரணியினர் ஒரு குடையின் கீழ் செயற்பட முயற்சிக்க வேண்டும். அப்போதுதான் பொருளாதாரத்தை மீள் கட்டமைக்க முடியும்.

# வாழ்க்கைக்கு வேறோர் அம்சமும் இருக்கிறது

## சார்லி சாப்ளின் பேட்டி



சார்லி சாப்ளினின் நடிப்பாற்றல், அதன் மூலம் அவர் ஈட்டிய பணம், புகழ் ஆகியவற்றைப் பற்றிப் பேசப்படும் ஒவ்வொரு முறையும், அவர் சிறுவயதில் எதிர்கொண்ட வறுமையைப் பற்றியும் மக்கள் நினைவுகூர்வது உண்டு.

சாப்ளின் 1889இல் லண்டனில் மிக வறுமையான குடும்பத்தில் பிறந்தார். அவரது பெற்றோர் இருவருமே நடிப்புத் துறையைச் சேர்ந்தவர்கள். அப்பா சிறுவயதிலே குடும்பத்தைவிட்டுப் பிரிந்து சென்றுவிட்டார். அம்மா மிக மோசமான உடல்நலம் மற்றும் மனநலப் பாதிப்புக்கு உள்ளானார். அதனால், அவர் காப்பகத்தில் சேர்க்கப்பட்டார்.

சாப்ளினுக்கு சிட்னி என்ற சகோதரர் உண்டு. பெற்றோரின் அரவணைப்பு இல்லாத இந்தச் சகோதரர்கள், சிறுவயதிலே தங்கள் வயிற்றுப்பாட்டைத் தாங்களே கவனித்துக்கொள்ள வேண்டிய நிர்பந்தத்துக்கு ஆளாகினர்.

சாப்ளினுடைய பெற்றோர் நடிப்புத் துறையைச் சேர்ந்திருந்ததாலோ என்னவோ, சாப்ளினுக்கு இயல்பிலேயே நடிப்புத் திறமை இருந்தது. சாப்ளினுக்கு 12 வயதிலேயே மேடை நாடகங்களில் நடிக்கும் வாய்ப்பு கிடைத்தது. சாப்ளினுக்குள் இருந்த நடிப்பாற்றல் அவருக்கான பாதையை உருவாக்கித் தந்தது. 1910 வாக்கில் நடிப்புப் பயணமாக அமெரிக்கா செல்லும் வாய்ப்பு வந்தது. அதையொட்டி, 1913ஆம் ஆண்டு அமெரிக்காவில் உள்ள சினிமா நிறுவனம் ஒன்று சாப்ளினுடன் ஒப்பந்தம் செய்துகொண்டது. இந்த ஆண்டுதான் அவரது வாழ்வின் திருப்புமுனை. சாப்ளினின் திரைப் பயணமும் தொடங்கியது. அப்போது இவருக்கு வயது 25.

சாப்ளினின் முதல் திரைப்படமான 'கிட் ஆட்டோ ரேஸ் இன் வெனிஸ்' (Kid Auto Race at Venice) 1914இல் வெளியானது. இந்தப் படத்தில் தான் 'ட்ராம்ப்' எனும் பெயர் கொண்ட - தொள தொள பேன்ட், இறுக்க மான சட்டை, நீண்ட தொப்பி, சிறிய மீசையுடனான - பாத்திரத் தில் தோன்றினார். இன்றளவும் அந்தப் பாத்திரம் வழியாகவே உலகம் சாப்ளினை நினைவுகொள்கிறது.

தன்னுடைய 25வது வயதில் திரைத் துறைக்குள் நுழைந்த சாப்ளின், 30வது வயதுக்குள் சொந்தமாக ஸ்டுடியோ தொடங்கும் அளவுக்கு வளர்கிறார். இயக்கம், இசை, தயாரிப்பு எனப் பல தளங்களிலும் அவர் உச்சம் தொடுகிறார். சாப்ளினின் காலத்தில் திரைத் துறையில் உச்சபட்ச ஊதியம் பெறும் நடிகராக அவரே விளங்கினார். 'சிட்டி லைட்ஸ்' (1931), 'மார்டன் டைம்ஸ்' (1936), 'தி கிரேட் டிக் டேட்டர்' (1940) போன்ற படங்கள் சாப்ளினை அழியாக் கலைஞனாக வெளிப்ப டுத்தின. நடிப்புத் துறை என்று பார்த்தால் 1903 - 1967 வரையில், அதாவது 64 ஆண்டு காலம் சாப்ளின் இயங்கியுள்ளார்; 1977ஆம் ஆண்டு, தனது 88ஆவது வயதில் காலமானார்.

இந்தப் பேட்டி சாப்ளின் ஊடகங்களுக்கு வெவ்வேறு காலகட்டங்களில் அளித்த பேட்டிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சிறுபேட்டி ஆகும். மாபெரும் ஆளுமை களை அவர்களுடைய உரையாடல் வழியாக மேலும் நெருக்கமாகப் புரிந்துகொள்ளும் வகையில் இங்கே சாப்ளினுடைய உரையாடலைத் தரப்படுகிறது.

**உங்களுடைய 'ட்ராம்ப்' (Tramp) பாத்திரம் உருவான தருணத்தைப் பற்றிச் சொல்ல முடியுமா?**

அவசர நிலையில் உருவானதுதான் அந்தப் பாத்திரம். ஏதாவது வேடிக்கையான மேக்கப்பைப் போட்டுக்கொண்டு வருமாறு கேமராமேன் என்னிடம் கூறினார். என்ன செய்வது என்று எனக்கு எந்தத் திட்டமும் இல்லை. நான் ஆடைப் பிரிவுக்குச் சென்றேன். ஆடைகளைக் கொண்டே ஏதாவது செய்யலாம் என்று போகும் வழியில் எனக்குத் தோன்றியது. அப்படித்தான் தொளதொள பேன்ட், இறுக்கமான கோட், நீண்ட தொப்பி என்ற தோற்றம் உருவானது. கந்தல் கோலம் அதேசமயம் கண்ணியவான்தன்மை. எனக்கு சோகமான, தீவிரமான முகம். என் முகத்தின் இந்தத் தன்மைகளை மறைத்து, நகைச்சுவைத் தன்மையைக் கொண்டுவர வேண்டும் என நினைத்தேன். அப்படியான முயற்சியில்தான் சிறிய மீசையைக் கண்டுபிடித்தேன். அந்த மீசையானது கதாபாத்திரத்தின் குணாதிசயத்தைக் குறிப்பதில்லை. வேடிக்கைத்தன்மையை மட்டும் குறிக்கக் கூடியது.

**குழந்தைமைச் சுதந்திரம் மீதான ஏக்கத்தின் வெளிப்பாடா 'ட்ராம்ப்' பாத்திரம்?**

இல்லை. அது எந்த ஏக்கத்தின் வெளிப்பாடும் இல்லை. ஒரு நகைச்சுவை நடிகருக்குக் குழந்தைத்தனமான விஷயங்களைச் செய்யவேண்டும் என்ற ஏக்கம் இருப்பதாக நான் நினைக்கவில்லை. மக்களைப் பொருத்தவரையில், குழந்தைத்தனமான செயல்பாடுகளை வெளிப்படுத்த முடியாத நிலையில் அவர்கள் இருக்கிறார்கள். நாகரீகம் அவர்களைக் கட்டுப் படுத்துகிறது. அப்படியான சூழலில்தான் அவர்கள் கோமாளியைக் கண்டால் அனுபவிக் கிறார்கள். அது அவர்களுக்குள் அடைபட்டிருந்த சுதந்திரத்தை வெளிகொணர்கிறது. அதை நான் ஏக்கமாகப் பார்க்கவில்லை. அதையும் தாண்டிய ஒன்று அது.

**நவீன காலகட்டத்தில் ட்ராம்புக்கு என்ன இடம் என்று நினைக்கிறீர்கள்?**

அப்படியான ஒரு நபருக்கு இப்போது எந்த இடமும் இல்லை. தற்போது உலகம் கூடுதல் ஒழுங்கு அடைந்திருக்கிறது. ஆனால், உலகம் மகிழ்ச்சியாக இருக்கிறது என்று நான் நினைக்கவில்லை. கச்சிதமான ஆடை அணிந்து, நீள முடி வைத்திருக்கும் சிறுவர்களை நான் பார்க்கிறேன். அவர்களில் சிலர் ட்ராம்பாக ஆக விரும்பலாம். ஆனால், ட்ராம்ப் காலகட்டத்தில் இருந்த பணிவு இப்போது இல்லை. இப்போதைய தலைமுறைக்குப் பணிவு என்றால், என்னவென்றே தெரியாது. ட்ராம்ப் இப்போது பழமையான பாத்திரமாக மாறிவிட்டது. அந்தப் பாத்திரம் வேறொரு காலகட்டத்தைச்

சேர்ந்தது. அதானல்தான் அதைப் போல் இப்போது என்னால் செய்ய முடியவில்லை.

தற்போதைய காலகட்டத்தில் ட்ராம்ப் பாத்திரத்துக்கு இடம் இல்லை என்று சொல்வதற்கு இன்னொரு காரணமும் உண்டு. அது சப்தம். பேசும் படங்கள் வந்துவிட்டன. பேச்சு வந்த பிறகு என்னுடைய கதாபாத்திரம் அங்கு இருக்க முடியாது. ஏனென்றால், ட்ராம்புக்கு என்ன மாதிரியான குரல் இருக்கும் என்று எனக்குத் தெரியாது. அதனால், அது இங்கிருந்து போக வேண்டிய தாயிற்று.

**ட்ராம்பின் சிறந்தத் தன்மை என்று எதை நினைக்கிறீர்கள்?**

அதில் ஒருவித மென்மையான, அமைதியான வறுமை இருக்கிறது. எல்லாவற்றிலும் மிக வேகமாகவும் மிக நுட்பமாகவும் செயல்படும் தன்மையும் அதில் உண்டு. டிராம்ப் என்பதை வெறும் தோற்றமாக மட்டும் நான் பார்க்கவில்லை. அது என் உள்ளுக்குள் இருக்கும் ஒன்றின் வெளிப்பாடு. பார்வையாளர்களின் எதிர்வினையால் நான் உந்தப்பட்டேன் என்றாலும், அவர்கள் பொருட்டு நான் ட்ராம்பை உருவாக்கவில்லை. என்னுள் இருக்கும் ஏதோ ஒன்றுதான் என்னை அவ்வாறு வெளிப்படுத்தத் தூண்டியது.

உங்களுடைய படைப்பைப் பற்றி நீங்கள் விவரிக்கையில் அதை நடனம் என்று கூறுகிறீர்கள். ஏன்?

நான் செய்யும் அனைத்தும் நடனம்தான். 'சிட்டி லைட்ஸ்' (City Lights) படத்தில், பார்வையற்ற பெண்ணுடனான என் சந்திப்பு ஓர் அழகான நடனம்தான். நான் நடனம் என்றுதான் அழைக்க விரும்புகிறேன். பூ விற்றுக்கொண்டிருக்கும் அந்தப் பெண் பார்வையற்றவள் என்று ட்ராம்புக்குத் தெரியாது. இதை 'எடுத்துக்கொள்கிறேன்!' என்கிறான். 'எதை?' என்கிறாள் அவள். 'என்ன ஒரு முட்டாள் பெண்!' என்று அவன் பார்க்கிறான். அப்போது அந்தப் பூ தரையில் விழுகிறது. அவள், 'அது எங்கே விழுந்தது?' என்று தடுமாறுகிறாள். அப்போது அவன் அதைக் குனிந்து எடுத்து சில விநாடிகள் அதைப் பிடித்திருக்கிறான். அப்போது அவள் கேட்கிறாள், 'நீங்கள் கண்டுபிடித்துவிட்டீர்களா சார்?' பிறகுதான் அவனுக்கு புரிகிறது, அவள் பார்வையற்றவள் என்று. அவன் அந்தப் பூவை அவள் முகத்துக்கு நேராக நீட்டி பாவனை செய்கிறான். இது நடனம்தான்.

**சுற்றிச் சுற்றி திரும்பத் திரும்ப நிகழும் காட்சிகள் உங்கள் படத்தில் உண்டு. அப்படியான கற்பனை எப்படி உங்களுக்குத் தோன்றியது? திடீரென்று தோன்றியதா அல்லது திட்டமிட்டு உருவாக்கப்பட்டதா?**

இல்லை. அது திட்டமிட்டு உருவாக்கப்படவில்லை. சிறந்த ஐடியாக்கள் சூழ்நிலையிலிருந்து பிறக்கும். ஒரு நல்ல நகைச்சுவையான சூழல் இருந்தால் அதிலிருந்து பல திறப்புகள் புதிதாக கிடைக்கும். 'தி ரிங்' (The Ring) படத்தில் ஸ்கேட்டிங் காட்சிகளை எடுத்துக்கொள்வோம். எனக்கு ஸ்கேட்டிங் ஷூ கிடைக்கிறது. அதை மாட்டிக்கொண்டு ஸ்கேட்டிங் நிகழ்வில் நான் கலந்துகொள்கிறேன். சுற்றிக்கொண்டே இருக்கிறேன். வேகம் அதிகம் ஆகிறது. தடுமாற்றம் நிகழ்கிறது. பார்வையார்கள் அனைவரும் நான் விழுந்துவிடுவேன் என்றே எதிர்பார்ப்பார்கள். ஆனால், அவர்களது எதிர்பார்ப்புக்கு மாறாக நான் கீழே விழாமல் சிறப்பாக சமாளித்துவிடுவேன். ஒரு ட்ராம்பிடமிருந்து அத்தகைய திறமையை பார்வையாளர்கள் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள்.

**யதார்த்தம் என்பது நகைச்சுவையின் ஓர் அங்கமா?**

நிச்சயமாக. ஓர் அபத்தமான சூழ்நிலையை நீங்கள் யதார்த்தம்போல் அணுகும்போது அது உண்மைபோல் தோன்றுவிடுகிறது. அதேசமயம், அது அபத்தமானது என்பது பார்வையாளர்களுக்கும் தெரியும். அதுதான் அவர்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது.

**குரூரமும் ஓர் அங்கம்தானே?**

குரூரம் என்பது நகைச்சுவையின் அடிப்படைக் கூறு. புத்திசாலித்தனமாகத் தெரிவது உண்மையில் முட்டாள்தனமானது என்பதை நீங்கள் உணர்த்திவிட்டால் பார்வையாளர்கள் அதை ரசிக்கத் தொடங்கிவிடுவார்கள். ஒரு வயதானவர் வாழைப்பழத்தை மிதித்து கீழே விழுந்து தடுமாறுகிறார் என்றால், நாம் சிரிக்க மாட்டோம். அதுவே, மிகையான பெருமிதம் கொண்ட ஒரு செல்வந்தர் வழுக்கி விழுந்தால் நாம் சிரிப்போம். எல்லாச் சங்கடமான தருணங்களும் வேடிக்கையானவை - அவை நகைச்சுவையாக அணுகப்பட்டால். தன்னைப் புத்திசாலியாக நினைத்துக்கொள்ளும் ஒருவர் உணவு விடுதிக்குச் செல்கிறார். ஆனால், அவருடைய காற்சட்டையில் பெரிய ஓட்டை இருக்கிறது. இது நகைச்சுவையாக அணுகப்பட்டால் வேடிக்கையான நிகழ்வாக மாறிவிடும். குறிப்பாக, கண்ணியத்துடன் பெருமிதத்துடனும் செய்யப்பட்டால்.

**உங்கள் நகைச்சுவை காட்சிகள் பெரும்பாலும் உடல் அசைவுகள் சம்பந்தப்பட்டது. படப்பிடிப்பு நிகழ்வின்போது யாருக்கேனும் காயங்கள் ஏற்பட்டு இருக்கிறதா?**

எங்கள் படங்களில் அப்படியான விபத்துகள் நடந்ததில்லை. 'ஈஸி ஸ்ட்ரீட்' (Easy Street) படத்தின்போது மட்டும் எனக்கு காயம் ஏற்பட்டது. மூக்கில் மூன்று தையல்கள் போட வேண்டியதாக இருந்தது.

**அவருடைய காற்சட்டையில் பெரிய ஓட்டை இருக்கிறது. இது நகைச்சுவையாக அணுகப்பட்டால் வேடிக்கையான நிகழ்வாக மாறிவிடும். குறிப்பாக, கண்ணியத்துடன் பெருமிதத்துடனும் செய்யப்பட்டால்**

**நீங்கள் ஒரு நடிகர் என்பதைவிடவும் சிறந்த இயக்குநர் என்று உங்களை நீங்கள் கருதுவதுவதாகக் கூறியுள்ளீர்கள். ஏன் அப்படி நினைக்கிறீர்கள்?**

ஏனென்றால், நான் அப்படி உணர்கிறேன். ஒவ்வொரு நடிகருக்கும், ஒரு பாத்திரத்தைச் சரியாக நடித்துவிட முடியுமா இல்லையா என்ற அச்ச உணர்வு இருக்கும். நடிப்பு என்பது ஒரு காட்சியின் யதார்த்தப் புள்ளியை நோக்கிப் பயணிப்பதும் அதைக் கண்டடைவதும் ஆகும். நீங்கள் சில தருணங்களில் அதை அடைந்துவிடுவீர்கள். சில நேரங்களில் அது கைக்கூடாமல் போகும். ஆனால், ஓர் இயக்குநராக அந்த யதார்த்தப் புள்ளியை நோக்கிப் பயணிக்கையில், அதை அடைந்துவிட முடியும். ஒருவருக்கு நடிக்கத் தெரியும் என்றால், நீங்கள் அவருக்கு நடிப்பதற்கு ஏற்ற பாத்திரத்தை வழங்கினால், அவர் நடித்து விடுவார். ஆனால், இயக்கம் என்பது அப்படியானது அல்ல. எனக்கு இயக்கம் என்பது உணர்வுப்பூர்வமான ஒரு செயல்பாடு.

**முகபாவனை, குரல், அங்க அசைவுகள் என எல்லாம் புறவயமான விஷயங்கள்தானா?**

இல்லை. புறவயம் என்று ஒன்று இல்லை. எல்லாம் அகவயமானது என்றே நான் நம்புகிறேன். ஓர் இயக்குநர் நடிகர்கள் வழியே அந்த அகவயமான உணர்வை வெளிப்படுத்த முயற்சிக்கிறார். அந்த இயங்குமுறைதான் புறவயமானது.

தொழில்முறை நடிகருக்கும், சிறந்த நடிகருக்கும், ஏனைய நடிகர்களையும் எது வேறுபடுத்துகிறது என்றால், தொழில்முறை நடிகரானவர் தான் என்ன செய்கிறோம் என்பதை துல்லியமாகத் தெரிந்திருப்பார். அதை அவர் அதிகாரத்துடன் செய்வார். ஒரு நடிகர் இப்படி தான் செய்வதில் அதிகாரத்துடன் இருந்தால் பார்வையாளர்கள் அவரைக் கவனிப்பார்கள். இல்லையென்றால், அவரைப் பார்வையாளர்கள் கவனிக்க மாட்டார்கள்.


இயக்கத்தைப் பொருத்தவரையில், ஒரு பாத்திரத்தை எப்படி வெளிப்படுத்துவது என்பதை நடிகரிடம் சொல்லத் தெரிந்திருக்கவேண்டும்; நடிகரிடம் அதை நடித்துக்காட்ட தெரிந்திருக்க வேண்டும். அதேசமயம், அவர்களின் ஆளுமையில் இடையீடுசெய்யக்கூடாது. இது மிக அடிப்படையானது.

**நீங்கள் கதை எழுதும் முறையானது, நீங்கள் சொல்லச்சொல்ல ஒருவர் எழுதுவார்... அப்படித் தானே?**

ஆமாம். எனக்கு தோன்றும் கதையை, முதலில் நான் சொல்லச்சொல்ல ஒருவர் எழுதுவார். அதன் பிறகு நான் அதைக் கவனமாகப் படித்துத் திருத்துவேன். கவித்துமான மற்றும் உணர்வுப்பூர்வமான காட்சிகளை நான் தனியாக அமர்ந்துதான் எழுதுவேன்.

**அதை உங்களுக்கு நீங்களே நடித்துப்பார்ப்பீர்களா?**

கண்டிப்பாக. நான் உற்சாகம் ஆகிவிட்டால் என்னால் என்னைக் கட்டுப்படுத்த முடியாது. நான் நடித்துப் பார்க்கத் தொடங்கிவிடுவேன்.



அதாவது, எழுதிக்கொண்டிருப்பீர்கள், ஒரு தருணத்தில் உந்தப்பட்டு அந்தக் காட்சியை நடித்துப்பார்ப்பீர்கள், அதன் பிறகு மீண்டும் சென்று எழுதுவீர்கள்? இப்படி உங்கள் உதவியாளர் முன்னால், அவர்களுக்குக் கதையைச் சொல்லிக்கொண்டிருக்கும்போது நடித்துக்காட்டி இருக்கிறீர்களா?

இது அந்த உதவியாளர்களின் இயல்பைப் பொருத்தது. சில நேரங்களில் அவர்கள் சிறந்த பார்வையாளர்களாக இருப்பார்கள். சில சமயங்கள் தீவிரமான வேலையாட்களாக இருப்பார்கள். பொதுவே, உணவூர்பூர்வமான தருணங்களை நான் தனியே அமர்ந்துதான் எழுதுவேன்.

**தொழில்நுட்ப ரீதியாக எடுத்துக்கொண்டால், நீங்கள் ஒளி அமைப்பு, கேமரா கோணம் குறித்து அதிகம் கவனம் செலுத்துவீர்களா?**

ம்ம்ம்... ஆம். குறைவாகவோ, அதிகமாகவோ வெளிச்சம் இருக்கவேண்டும் என்று நான் விரும்புவேன். நிழல்களை நான் விரும்புவதில்லை. ஆனால், இவையெல்லாம் ஒரு படத்தில் முக்கியமான விஷயங்கள் இல்லை என்று நினைக்கிறேன். நீங்கள் ஒளி அமைப்பிலேயே கவனம் செலுத்திக்கொண்டிருந்தால் வேறு முக்கியமான விஷயங்களை தவறிவிடக்கூடும். கேமராவை எடுத்துக்கோண்டால், நீங்கள் எங்கே இருக்கிறீர்கள் என்பதை காட்டும் வகையில் கேமரா கோணத்தை வைப்பதில் கவனம் செலுத்துவேன். முதலில் கேமரா பின்னால் இருக்கும். அதன் பிறகு க்ளோஸ்அப் நோக்கி நகரும்.

நான் க்ளோஸ்அப் காட்சிகளை இயந்திரத்தனமாகப் பயன்படுத்துவதில்லை. கமா, அடைப்

## வாழ்க்கைக்கு...

புக்குறிகள் போன்ற நிறுத்தற்குறிகளைப் பயன்படுத்துவதுபோல் காட்சிகளுக்கான அழுத்தத்தை உணர்த்தும் வகையிலே க்ளோஸ்அப் காட்சிகளைப் பயன்படுத்து கிறேன். நாம் கடத்த விரும்பும் உணர்வுகளை கேமரா வழியாகத் துல்லியமாகக் கடத்துவ தற்கான வழிமுறைகளைத்தான் தொழில் நுட்பம் என்பதாகப் பார்க்கிறேன்.

தொழில்நுட்பங்களைவிடவும், நடிகரின் நடிப்பிலேயே நான் அதிகம் கவனம் செலுத்து வேன்.

**கத்தரிப்புகளை மிக முக்கியமானது என்று நீங்கள் நினைக்கிறீர்களா?**

ஆமாம், ஆனால், சிறிய அளவிலான கத்தரிப்புகளைத்தான். தந்திரமான கத்தரிப்புக் காட்சிகள் எனக்கு ஆர்வமூட்டுவது இல்லை. ஏனென்றால், எனக்கு மனித உணர்வுகள் மீதுதான் அதீத ஆர்வம். கல்லைக் காட்டுவது, குருதித் துளி விழுவதைத் தனிக் காட்சியாகக் காட்டுவதில் ஆர்வம் இல்லை. நான் நடிப்பை விரும்புகிறேன். நடிப்பின் வழியே உணர்வைக் கடத்துவதுதான் எனக்கு விருப்பமானது. முகம்தான் எனக்கு முக்கியம். பிறர் இந்த அணுகுமுறையைத் தொய்வான ஒன்றாகக் கருதக்கூடும். ஆனால், திரைப்படம் குறித்த என்னுடைய அணுகுமுறை இதுதான்.

**இத்தனை ஆண்டுகள் உங்களை தாக்குப் பிடிக்கச் செய்தது எது?**

என்னுடைய ஆற்றல்தான் என்னை இத்தனை ஆண்டுகள் தாக்குப்பிடிக்கச் செய்துள்ளது என்று நினைக்கிறேன். அடிப்படையில் நான் ஒரு நம்பிக்கைவாதி. அதுதான் என்னை முன்னகர்த்திச் செல்கிறது. என்னுடைய அந்த இயல்பை நான் மிகவும் ரசிக்கிறேன்.

**மேதமை என்று ஒன்று இருப்பதாக நீங்கள் நம்புகிறீர்களா?**

மேதமையைப் பற்றி எனக்குத் தெரியாது. திறமையுள்ள ஒரு நபர், தன் துறையின் மீது உணர்வுரீதியாகக் கூடுதல் பற்றுடன் இருக்கும்போது தன் துறை சார்ந்த தொழில்நுட்பத்தில் கூடுதல் நிபுணத்துவம் பெற முடியும் என்று நினைக்கிறேன். ஒவ்வொருவரும் ஏதோவொரு விதத்தில் பரிசளிக்கப்பட்டவர்கள்தாம். சராசரி மனிதன் தினமும் செய்யும் கற்பனையற்ற வேலைகளை இந்தக் கணக்கில் சேர்க்கக்கூடாது. மேதை என்பவன் அந்த வேலையை வித்தியாசமாகச் செய்பவன். நன்றாகவும் செய்பவன். அதுதான் வேறுபாடு.

**இதுவரையில் யாரும் செய்திராத ஒன்றை நீங்கள் செய்திருக்கிறீர்கள். இனியும் அதைப் போல் ஒன்றை மற்றொருவரால் செய்ய முடியாது. அது முற்றிலும் தனித்துவமானது...**

ஆமாம். தனித்துவமானதுதான். ஆனால், அதை மேதமை என்று சொல்ல வேண்டாம். மேதமை என்பது பசாங்குத்தனமான சொல்லாகும். அது எதையும் குறிப்பதில்லை. நீங்கள் ஓவியத் துறையில் பல மேதைகளைப் பார்த்திருப்பீர்கள். அவர்கள் அவர்களது வேலையை நன்றாகச் செய்திருக்கிறார்கள். அடிப்படையில் அவர்கள் கலைஞர்கள். மேதை என்று குறிப்பிடக் கூடியவர்கள் மற்ற கலைஞர்களைவிட சற்று சிறந்தவர்கள். அவ்வளவுதான்.



**நீங்கள் 'தி கிரேட் டிக்டேட்டர்' (The Great Dictator) படத்தை உருவாக்கியதற்கான காரணம் என்ன?**

அது மிக வெளிப்படையானது. ஜெர்மன் சிறைக்கூடங்களில் கைதிகள் மிக மோசமான சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டனர். அதுதான் ஹிட்லரைப் பற்றிய நமது முதல் அறிதல். அடுத்ததாக, சிறுபான்மை மக்கள் மீதும் அவருடன் உடன்படாத மக்கள் மீதும் தாக்குதல் நடத்தினார். அவர் வென்றிருந்தால், உலகம் இன்னும் ஆயிரம் ஆண்டுகளுக்கு நாஜிக்களின் பிடியில் இருந்திருக்கும். அதை நீங்கள் நினைத்துக்கூடப் பார்க்க முடியாது.

**ஒவ்வொரு நாள் காலையிலும் வேலையைத் தொடங்கும்போது எப்படி உணர்வீர்கள்?**

உண்மையில் அது சவாலான விஷயம். நான் இரவு நேரத்தில் வேலைசெய்வது இல்லை. மறுநாள் செய்ய வேண்டிய வேலையைக் குறித்துப் படுக்கை நேரத்தில் யோசிப்பதும் இல்லை. நாளை என்ன செய்யப்போகிறோம் என்பது குறித்த திட்டங்களை அன்றைய பணி முடிவில் பேசிவிட்டு கலைந்துவிடுவோம். சில சமயங்களில் நான் மிகவும் களைப்பு அடைந்துவிடுவேன். இதனால், மறுநாள் குறித்த திட்டம் எதுவும் இருக்காது. ஆனால், எனக்குத் தெரியும், தூங்கி எழுந்து மறுநாள் ஸ்டுடியோவுக்குச் செல்லும்போது நான் உற்சாகமாகிவிடுவேன் என்று! ஒரு புதிய ஐடியா உற்சாகத்தை ஏற்படுத்திவிடும். என்னுடைய உற்சாகம்தான் என்னைச் செயல்பட வைக்கிறது. அதுதான் என்னுடைய ரகசியம்.

**உங்கள் வாழ்க்கைப் பயணம் சார்ந்து என்ன மாதிரியான பயம் உங்களுக்கு இருந்தது?**

நான் இளமையாக இருந்தபோது எனக்கு எந்த பயமும் இருந்ததில்லை. வாரத்துக்கு ஐந்து டாலர்கள் இருந்தால், நான் வெளியே சுற்றுவேன். பப்புகளில் வயலின் வாசித்து பணம் ஈட்டுவேன்.

**உங்கள் கற்பனையைத் தூண்டும் விஷயங்கள் எவை?**

என் கற்பனையைத் தூண்டும் விஷயங்கள் நிறைய உள்ளன. ஆனால், அவற்றையெல்லாம் கதையாக எழுதிவிட மாட்டேன். வாழ்க்கையில் நிறைய துக்கம் இருக்கிறது, உலகில் நிறைய பிரச்சினைகள் இருக்கின்றன. ஆனால், வாழ்க்கைக்கு வேறோர் அம்சமும் இருக்கிறது என்பதைக் காட்டும் ஒரு படத்தை உருவாக்குவதுதான் எனக்கு விருப்பமானது. வாழ்க்கை என்றால் என்ன என்ற கேள்வியை அல்ல, வாழ்க்கையின் சாத்தியங்களையே நான் காட்ட விரும்புகிறேன்!

---

இந்த வார சமையல்

## முருங்கங்காய் பத்தியக் கறி



உடல் நலம் குன்றிய காலத்திலும் மகப்பேற்றின் பின்னரும் பத்தியக் கறிளை நாடுவது தமிழ்ச் சமூகத்தில் வழமையானது. முருக்கங்காய், கத்தரிக்காய் ஆகிய மரக்கறிகளிலும் மீன்களிலும் இந்தப் பத்தியக் கறிகளை ஆக்குகின்றனர். மரக்கறிகளில் கத்தரிக்காயைவிட முருக்கங்காயில் பத்தியக் கறியை ஆக்குவது ருசியானதாகவும் ஆரோக்கியமானதாகவும் இருக்கிறது. முருக்கங்காய் காமத்தை அதிகரிக்கச் செய்யும் என்கிற கருத்துருவாக்கம் தமிழ்ச் சினிமாவால் கொண்டுவரப்பட்டது. ஆனாலும் முருங்கையின் இலை தொடங்கி, காய், பூ என எல்லாமே அதிக ஊட்டச் சத்துகளைக் கொண்டவை ஆதலால் முருக்கங்காய்க் கறியை நம்மவர்கள் தவிர்ப்பதில்லை. மிளகாய்த்தூளை இட்டு முருங்கக்காயில் கறி ஆக்குவது நம் மவர்களின் வழமையானாலும் பத்தியக்கறியை அவ்வப்போதுதான் வைக்கிறார்கள். அத்தகைய பத்தியக்கறி பற்றி இந்த வாரம் பார்ப்போம்.

**தேவையான பொருள்கள்...!**

முருங்கங்காய்கள் 3, அரைத்தெடுப்பதற்குச் சின்னச் சீரகம் 50 கிராம், மல்லி 50 கிராம், மிளகு ஒரு தேக்கரண்டியளவு, உள்ளி 4 துண்டுகள், இஞ்சி - ஒரு சிறிய துண்டு, செத்தல் மிளகாய்கள் 2, உப்பு தேவைக்கேற்ப. இவற்றோடு தேங்காய்ப்பால் சிறிதளவு. இத்தோடு சின்னவெங்காயங்கள் 10, கரைத்த புளி அரைக் கப், கறிவேப்பிலை ஒரு கெட்டு.

**எப்படிச் சமைப்பது...?**

பிஞ்சான முருங்கங்காய்களே இதற்கு உகந்தவை. முதலில் முருங்கங்காய்களைச் சீவிச் சுத்தப்படுத்திக் குறுக்காக நறுக்கி இரண்டாக்கிக் கொள்ளவேண்டும். புளிக்கரைசல், தேங்காய்ப்பால், முருங்கங்காய்த் துண்டுகள், நறுக்கிய வெங்காயம், உப்பு ஆகியவற்றைச் சட்டி ஒன்றில் வைத்து அவித்து அது வெந்துவர அரைத்து வைத்துள்ள மிளகு, சீரகம், மல்லி, உள்ளி, இஞ்சி, செத்தல்மிளகாய்கள் உள்ளிட்ட கலவையை இதனுடன் சேர்க்க வேண்டும். சேர்த்துக் கொதித்ததும் கறிவேப்பிலையையும் சேர்த்து இறக்கினால் பத்தியக்கறி தயார்.

# மலையைக் கடந்து வந்த கரடி

ஆலிஸ் மன்ரோ

தமிழில் இல. சுபத்ரா



ஃபியோனா தன் பெற்றோரின் இல்லத்தில் வசித்து வந்தாள். அவளும் க்ராண்ட்டும் பல்கலைக்கழகத்திற்குச் சென்றுவந்த நகரத்தில் அது இருந்தது. மிகப்பெரிய அவ்வீடு, கூண்டுவடிவ வெளித்தள்ளிய ஜன்னலைக்கொண்டிருந்தது. விரிப்புகள் தரையில் கலைந்து கிடக்க, காபிக் கோப்பைகளின் அடிவளையங்கள் மேசையின் மேற்பூச்சில் தழும்புகளாய்ப் படிந்திருக்கும் அவ்வீட்டினை ஒழுங்கற்றதும் சொகுசானதும் எனக் க்ராண்ட் எப்போதும் கருதியிருக்கிறான். ஐஸ்லாந்திய குணாதிசயங்கள் கொண்ட அவளது அம்மா, ததும்பும் வெண்கூந்தலையும் தீவிர இடதுசாரி அரசியலையும் வரித்தவர். நகரின் முக்கியமான இதய சிகிச்சை மருத்துவரான அவளது அப்பாவிற்கு, மருத்துவமனையில் நல்ல மரியாதை இருந்த போதிலும் வீட்டில் பணிவுடன் இருப்பதையே விரும்பினார், மனைவியின் நீண்ட விசித்திரமான வசைபாடல்களைத் தலைக்குள் ஏற்றிக்கொள்ளாமல் புன்னகையுடன் கேட்டுக்கொள்வார். ஃபியோனா தனக்கென்று ஒரு காரும் சில காஷ்மீரி ஸ்வெட்டர்களும் கொண்டிருந்தாள் எனினும் எந்த மகளிர் சங்கத்திலும் அவள் உறுப்பினராகவில்லை. அவளது அம்மாவின் அரசியல் செயல்பாடுகளே அதற்குக் காரணமாக இருக்கக்கூடும். இல்லையென்றாலுமே அவளுக்கு அதிலெல்லாம் அதிகம் ஆர்வம் இல்லை.

'நான்கு கிளர்ச்சித் தளபதிகள்' பாடலையோ சில நேரங்களில் 'சர்வதேசம்' பாடலையோ ஒலிப்பதிவுக் கருவியில் மிகச் சப்தமாகப் பாடிப் பதிவுசெய்ய அவள் விரும்பினால் என்றாலும், மகளிர் சங்கங்களை அவள் வெறும் நகைச்சுவையாகத்தான் கருதினாள், அரசியலும் அவளுக்கு அப்படித்தான். யாரேனும் விருந்தினர் வந்தால் இவ்வாறு பாடுவதன் வாயிலாக அவர்களைச் தர்மசங்கடப்படுத்த முடியும் என அவள் கருதினாள். சுருள் முடியும் சோபையான தோற்றமும் கொண்ட அயல்நாட்டினன் ஒருவன் அவளை நேசித்தான்- ஆனால் அவள் அவனை விஸிகோத் எனக் கூறிவிட்டாள். வேறு சில மரியாதைக்குரிய பதற்றமான இடையீட்டாளர்களுக்கும் அதே நிலைதான். அவள் அவர்கள் அனைவரையும் கேலி செய்தாள், க்ராண்ட்டையும்கூட. அவனது சிறுநகரத்தின் சொல்லாடல்களைக் கிண்டலாகத் திரும்பச் சொல்வாள். குளிர்ந்த, பிரகாசமான ஒரு நாளில் ஸ்டான்லி துறைமுகக் கடற்கரையில் வைத்து அவள் அவனிடம் காதலைச் சொன்னபோது அவள் ஏதோ விளையாடுகிறாள் என்றுதான் நினைத்தான். அவர்களது முகத்தில் மணற்துகள்கள் அழுத்திக்கொண்டிருக்க அலைகள் அவர்களது காலடியில் சரளைக்கற்களைக் கொணர்ந்து குவித்துக்கொண்டிருந்தன.

'அது மகிழ்ச்சியானதாக இருக்கும் என நீ நினைக்கிறாயா?' என ஃபியோனா உரத்துக் கேட்டாள். 'நாம் திருமணம் செய்துகொண்டாள் அது மகிழ்ச்சியைத் தரும் என நீ நினைக்கிறாயா?' அவன் அதை ஏற்றுக்கொண்டு ஆமாம் எனப் பதிலுக்குக் கத்தினான். அவன் ஒருபோதும் அவளிடமிருந்து விலக விரும்பியதில்லை. அவளிடம் வாழ்க்கைக்கான ஒளி இருந்தது.

வீட்டிலிருந்து அவர்கள் கிளம்பிய அந்த நொடியில்தான் ஃபியோனா சமையலறையின் தரையில் ஒரு கறையைக் கவனித்தாள். அன்று காலையில் அவள் அணிந்திருந்த மட்டமான, வீட்டுக்குள் அணிந்துகொள்கிற கறுப்புக் காலணியிலிருந்து அது அங்கு பட்டிருக்க வேண்டும். வழக்கமான எரிச்சலுடனும் கோபத்துடனும் 'இப்படிக் கறைபடுத்துவதை அது நிறுத்திவிடும் என நான் நினைத்தேன்' எனக் கூறியபடி வண்ண மெழுகுப் பென்சிலின் கறைபோல் தரையில் படிந்திருந்த அதனைத் துடைத்தாள்.

தன்னுடன் இப்போது அதை எடுத்துக்கொள்ளாததால் இனிமேல் அவள் இவ்வாறு செய்ய வேண்டியதே இருக்காது என்றும் குறிப்பிட்டாள்.

'இனி எப்போதுமே நான் கிளம்புவதற்குத் தயாராக இருப்பேன் என நினைக்கிறேன்' என்றாள் அவள். 'அல்லது, பாதி தயாராக. ஒரு விடுதியில் தங்கியிருப்பது போல.'

பயன்படுத்திய பழைய துணியை அலசியவள், கைகழுவும் தொட்டியின் அடியில் இருந்த அலமாரியின் கதவினுள்ளே அதனைக் காய வைத்தாள். அடுத்ததாகத் தனது பொன்-பழுப்பு நிற, ரோமக் கழுத்துப்பட்டை கொண்ட மேலங்கியையும் பிரத்யேகமாகத் தைக்கப்பட்ட இளமஞ்சள் கால்சட்டையையும் அணிந்துகொண்டாள். கழுத்தை மூடிய கம்பளிச் சட்டைக்கு மேல் அவள் இவற்றை அணிந்தாள். உயரமான, குறுகிய தோள்களைக்கொண்ட எழுபது வயதுப் பெண் ஃபியோனா. என்றாலும், நிமிர்ந்த நேர்த்தியான தோற்றமும் நீண்ட கால்களும் பாதங்களும் மென்மையான மணிக்கட்டும் கணுக்கால்களும் கொண்ட அவளுக்கு, சற்று சிரிப்பை வரவழைக்கும் சிறிய காதுகள். வெள்ளெருக்கம் பஞ்சை ஒத்த அவளது கூந்தல் இளம்பொன்னிறத்திலிருந்து வெண்ணிறமாகியிருந்தது. அந்த மாற்றம் எப்போது நிகழ்ந்ததென்பதை க்ராண்டால் துல்லியமாக நினைவுகூர முடியவில்லை. அவளது அன்னையைப் போல இப்போதும் அவள் அதனைத் தோள்வரை தழுவவிட்டிருந்தாள். (ஒரு சிறிய நகரத்தில் மருத்துவர் ஒருவரின் வரவேற்பாளராகப் பணியாற்றிய க்ராண்ட்டின் அம்மாவை அதுதான் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. ஃபியோனாவின் வீட்டின் நிலவரத்தைவிட, அவளது அம்மாவுடைய நீண்ட வெண்முடிகள்தான் அரசியல் பற்றியும் அணுகுமுறைகள் பற்றியும் அவள் அறிந்துகொள்ள வேண்டியவை பற்றி எச்சரித்தது.) மற்றபடி, நேர்த்தியான வடிவமும் நீலமணிக் கண்களுமாக ஃபியோனா அவளது அன்னைக்கு எந்த விதத்திலும் தொடர்பற்றிருந்தாள். சற்றே வளைந்த உதடுகளைக்கொண்ட அவள் அவற்றைச் சிவப்புப்பூச்சு கொண்டு மிகைப்படுத்தியிருந்தாள். வீட்டை விட்டு வெளியே கிளம்பும்முன் அவள் கடைசியாகச் செய்துகொள்கிற காரியமாக அதுதான் எப்போதும் இருக்கும்.

அன்று அவள் கச்சிதமாக அவளைப் போலவே தோற்றமளித்தாள்- வெளிப்படையானவளாகவும் குழப்பம் மிகுந்தவளாகவும் - அவளின் இயல்புப்படி இனிமையானவளாகவும் சிடுசிடுப்பு மிக்கவளாகவும்.

ஒரு வருடத்திற்கு முன்னதாக வீடெங்கும் சிறிய சிறிய மஞ்சள் காகிதக் குறிப்புகள் ஒட்டப்பட்டிருப்பதை க்ராண்ட் கவனித்தான். அது ஒன்றும் புதிதல்ல. விஷயங்களைக் குறித்து வைக்கிற பழக்கம் ஃபியோனாவிற்கு எப்போதுமே உண்டு - வானொலியில் அவள் கேட்ட ஒரு புத்தகத்தின் பெயரை, அன்றைய நாளில் முடித்தாக வேண்டிய வேலைகளை.. அவளது காலை நேர அட்டவணைகூட ஒட்டப்பட்டிருக்கும். அதன் துல்லியம் எப்போதும் அவனை மர்மமாகவும் நெகிழ்வாகவும் உணரச் செய்யும்: 7 யோகா. 7:30 - 7:45 பற்கள், முகம், கூந்தல். 7:45 - 8:15 நடை. 8:15 க்ராண்டும் காலை உணவும்.

ஆனால் இந்தப் புதிய குறிப்புகள் மாறுபட்டவை: சமையலறையின் இழுப்பறை மேலே - வெட்டுக்கருவிகள், பாத்திரம் துடைக்கும் துண்டுகள், கத்திகள் என எழுதி ஒட்டப்பட்டிருக்கும். வெறுமனே அதைத் திறந்து பார்த்து உள்ளே என்ன இருக்கிறதென அவள் அறிந்துகொண்டால் போதாதா?

இன்னும் மோசமான விஷயங்கள் நடந்தேறின. நகரத்திற்குச் சென்றவள் ஒரு தொலைபேசிச் சாவடியிலிருந்து க்ராண்டிற்கு அழைத்து வீட்டிற்கு எப்படி வருவதென வினவினாள். சமவெளியைக் கடந்து வனத்திற்குத் தனது வழக்கமான நடைக்குச் சென்றவள், வேலிப் பாதையின் வழியாக தேவையில்லாமல் நீண்டதூரம் நடந்து வீடு வந்தாள். வேலிகள் எப்போதும் எங்கேனும் இட்டுச் சென்றுவிடும் என்பதை அடையாளமாகக் கொண்டு அவள் வீடு வந்ததாகக் குறிப்பிட்டாள். வேலியைப் பற்றிச் சொல்லும்போது, அதைக் கண்டறிவதே ரொம்பச் சிரமமாக இருந்தது என ஒரு நகைச்சுவையைப் போலச் சொன்னாள். ஆனால் தொலைபேசி எண்ணை நினைவு வைப்பதில் அவளுக்கு எந்தச் சிரமமும் இருக்கவில்லை.

'பயப்படுவதற்கு எதுவும் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை' என்று கூறிய அவள், 'நான் கொஞ்சம் கொஞ்சமாக என் நினைவுகளை இழக்கப்போகிறேன் என நினைக்கிறேன்' என்றாள்.

தூக்க மாத்திரை எதுவும் எடுத்துக்கொள்கிறாளா என அவன் கேட்டான்.

'இருக்கலாம், ஆனால் நினைவில்லை' என்றாள். பிறகு இத்தனை அலட்சியமாக பதில் சொல்வதற்கு மன்னிப்புக் கோரியவள், 'அப்படி எதுவும் நான் எடுத்துக்கொள்ளவில்லை. இனிதான் நான் மாத்திரைகள் சாப்பிட வேண்டும் போல. விட்டமின் மாத்திரைகள்' என்றாள்.

விட்டமின்கள் உதவவில்லை. வாசலில் நின்றபடி தான் எங்கே செல்ல நினைத்தோம் என்பதை நினைவுகூர முயல்வாள். காய்கறிகள் வைத்துவிட்டு அடுப்பைப் பற்றவைக்கவோ காபிப் பாத்திரத்தில் நீர் ஊற்றவோ மறந்துபோனாள். நாம் எப்போது இந்த வீட்டிற்கு வந்தோம் என க்ராண்ட்டிடம் வினவினாள்.

'கடந்த வருடமா அதற்கு முந்தைய வருடமா?'

'பன்னிரண்டு வருடங்களுக்கு முன்பு' என்றான் அவன்.

'அவள் எப்போதுமே சற்று இப்படி இருந்திருக்கிறாள்' என க்ராண்ட் மருத்துவரிடம் சொன்னான். ஃபியோனாவின் ஆச்சரியங்களும் மன்னிப்புக் கோரல்களும் இப்போதெல்லாம் வழக்கமான ஒரு நடைமுறையாக மாறி வருவதை அதிர்ச்சியை வெளிக்காட்டிக்கொள்ளாமல் மருத்துவரிடம் க்ராண்ட் சொல்ல முயன்றதில் தோல்வியே எஞ்சியது. ஏதோ ஒரு எதிர்பாராத சாகசத்திற்குள் கால் இடறி குதித்துவிட்டது போலவும் அல்லது விரைவிலேயே க்ராண்ட்டும் வந்து இணைந்துகொள்வான் என அவள் நம்பிய ஒரு விளையாட்டிற்குள் இருப்பதுபோலவும்.

'ம், சரி. ஆரம்பத்தில் அது சில விஷயங்களில் மட்டும் இருக்கலாம். நம்மால் கணிக்க முடியாது. இல்லையா? சிதைவடைவதில் இருக்கிற ஒழுங்கின் அடிப்படையைக் காணும்வரை நம்மால் எதையும் சொல்லமுடியாது.'

சற்றுக் காலத்திலேயே அதற்கு என்ன பெயர் சூட்டுவதென்பதெல்லாம் ஒரு பொருட்டே இல்லாமல் ஆகிவிட்டது. அதன்பிறகு ஃபியோனா தனியே வெளியே செல்லாத போதும், ஒருமுறை வணிக வளாகத்தில் க்ராண்ட் வேறுபுறம் திரும்பியிருந்த போது காணாமல் போய்விட்டாள். பல கட்டடங்கள் தாண்டி சாலையின் நடுவே நடந்துகொண்டிருந்த அவளை ஒரு காவலன் கண்டு நிறுத்தினான். அவளது பெயரை அவன் கேட்டபோது உடனே சொல்லிவிட்டாள். அடுத்து அவன் அவளிடம் பிரதம மந்திரியின் பெயரைக் கேட்டான்.

'இதுகூட உனக்குத் தெரியவில்லையென்றால், இளைஞனே, நீ இப்படிப்பட்ட பொறுப்பான பணியில் இருக்கவே கூடாது' என்றாள்.

சிரித்தான் அவன். ஆனால் அதன்பிறகு, போரிஸையும் நடாஷாவையும் அவன் பார்த்திருக்கிறானா என வினவுகிற தவறைச் செய்துவிட்டாள் அவள். இரு ரஷ்ய வேட்டை நாய்கள் அவை. பலகாலம் முன்பு ஒரு நண்பருக்கு உதவும்பொருட்டு அவற்றைத் தத்தெடுத்து பின் அவற்றின் வாழ்காலம் முழுவதும் தன்னை அவற்றிற்கு அர்ப்பணித்துக் கொண்டாள். தற்போது அவை இறந்துவிட்டன. அவற்றை அவள் தத்தெடுத்துக்கொண்டது அவளுக்குக் குழந்தைகள் பிறக்க வாய்ப்பில்லை என்பதை அவர்கள் கண்டறிந்த காலத்திலாய் இருக்கலாம். அவளது குழாய்களில் ஏதோ அடைப்போ திருகலோ - க்ராண்ட்டிற்கு இப்போது நினைவில்லை. பெண்களின் இதுசார்ந்த உறுப்புகளைப் பற்றிச் சிந்திப்பதை அவன் எப்போதுமே தவிர்த்து வந்திருக்கிறான் அல்லது அது அவளது அம்மா இறந்த பிறகாகவும் இருக்கலாம். அந்த நாய்களின் நீண்ட கால்களும் வழுவழுப்பான ரோமமும் ஒடுங்கிய நளினமான பிடிவாதமான முகமும் அவற்றை அவள் நடைக்கு அழைத்துச்சென்ற போது மிகப் பொருத்தமாக இருந்தன. அப்போது பல்கலைக்கழகத்தில் (அரசியல் கறையைத் தாண்டி அவனது மாமனாரின் பணம் அவனை அங்கு வரவேற்றிருந்தது) தன் முதல் வேலையில் சேர்ந்த க்ராண்ட்டும்கூட ஃபியோனாவின் இதுபோன்ற ஒரு விசித்திரமான விருப்பத்தின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டு போஷித்து பராமரிக்கப்பட்டு வளர்க்கப்பட்ட தேர்வாகவே சிலரால் கருதப்பட்டிருக்கலாம். நல்லவேளையாக பல காலங்களுக்கு அவன் அதனை உணர்ந்திருக்கவில்லை.

மார்கழி மாதத்தில் மெடோலேக்கில் யாரும் அனுமதிக்கப்படக் கூடாதென்கிற சட்டம் இருந்தது. நிறைய உணர்வுரீதியான ஆபத்துகளுக்குச் சாத்தியமானதாக இருந்தது விடுமுறைக் காலம். எனவே அவர்கள் அந்த இருபது நிமிடப் பயணத்தை ஜனவரியில் மேற்கொண்டனர். அவர்கள் நெடுஞ்சாலையை அடையும் முன்னதாக கிராமத்துச் சாலை தற்போது உறைந்துவிட்டிருந்த சதுப்புப்பகுதிக்குள் கடந்து சென்றது.

ஃபியோனா, 'அட, நினைவிருக்கிறது' என்றாள்.

'நானும் அதைப் பற்றித்தான் நினைத்துக்கொண்டிருந்தேன்' என்றான் க்ராண்ட்.

'அது நிலவொளியில் என்பது மட்டும்தான் வேறுபாடு' என்றாள்.

பௌர்ணமிகளில் கருமைபடிந்த பனியில் அவர்கள் பனிச்சறுக்கிற்குச் சென்ற காலங்கள் பற்றிக் குறிப்பிடுகிறாள். கடும்பனிக்காலத்தில் மட்டுமே ஒருவர் வரமுடிகிற இந்த இடத்தில் குளிரில் மரக்கிளைகளும்கூட நடுங்குவதை அவர்கள் கேட்டிருக்கிறார்கள்.

அவளால் அதனை இவ்வளவு சரியாகவும் விரிவாகவும் நினைவுகூர முடிகிறதென்றால், அவள் குறித்து வருந்துவதற்கு எதுவும் இல்லையோ? ஏன் வாகனத்தைத் திருப்பி வீட்டிற்கே செலுத்திவிட முடியவில்லை அவனால்?

மேற்பார்வையாளர் அவனுக்கு விளக்கிய இன்னொரு விதிமுறையும் இருந்தது. புதிதாகக் குடிவருகிறவர்களை முப்பது நாட்களுக்கு யாரும் வந்து பார்வையிடக்கூடாது. பலருக்கும் அங்கே தங்களை நிலைநிறுத்திக்கொண்டு இயல்பாக அந்தக் காலம் தேவைப்பட்டது. இந்த விதிமுறையைச் செயல்படுத்துவதற்கு முன்பாக அங்கே கெஞ்சல்களும் அழுகைகளும் ஆங்காரங்களும் நிரம்பியிருந்தன, விருப்பத்துடன் அங்கே வந்தவர்களும்கூட இதற்கு விதிவிலக்கில்லை. மூன்றாவது நான்காவது நாட்களிலேயே அவர்கள் அழத்தொடங்கி வீட்டிற்கு அழைத்துச்செல்லச் சொல்லிக் கெஞ்ச ஆரம்பித்துவிடுவார்கள். இதனைக் கண்டு சில உறவினர்கள் அவர்களை வீட்டிற்கு அழைத்துச் சென்றால் நிலைமை முன்பைவிட மோசமாகத்தான் ஆகும். ஆறு மாதங்களிலோ அல்லது சில வாரங்களிலேயோ மீண்டும் அத்தனை பிரச்சினைகளையும் எதிர்கொள்ள நேரிடும்.

'ஆனால் முதல் மாதத்தில் அவர்களை அவர்கள் போக்கிலேயே விடும்போது அமைதியானவர்களாக மகிழ்ச்சியானவர்களாக ஆகிவிடுகிறார்கள்' என்றார் மேற்பார்வையாளர்.

**மார்கழி மாதத்தில் மெடோலேக்கில் யாரும் அனுமதிக்கப்படக் கூடாதென்கிற சட்டம் இருந்தது. நிறைய உணர்வுரீதியான ஆபத்துகளுக்குச் சாத்தியமானதாக இருந்தது விடுமுறைக் காலம். எனவே அவர்கள் அந்த இருபது நிமிடப் பயணத்தை ஜனவரியில் மேற்கொண்டனர்**



பல வருடங்களுக்கு முன்பு திரு. ஃபகூஹரைக் காணும்பொருட்டு இவர்கள் மெடோலேக்கிற்குச் சிலமுறை வந்திருக்கிறார்கள்தான். மணமுடிக்காத அந்த முதிய விவசாயி அவர்களுக்கருகே வசித்து வந்தவர். முழுமையடையாத செங்கல் வீடொன்றில் தான் அவர் இந்நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து தனியாக வசித்துவந்தார். ஒரு குளிர்சாதனப் பெட்டியும் தொலைக்காட்சிப் பெட்டியும் கூடுதலாகச் சேர்ந்ததைத் தவிர தொடக்கத்திலிருந்த அதன் தோற்றத்தில் எவ்வித மாற்றமுமே நிகழவில்லை. ஆனால் அதன்பிறகு அது இல்லாமலாகி, டொரொண்டோவிலிருந்து வார இறுதிகளில் மட்டும் வந்து தங்கும் ஒரு குடும்பத்தினரின் பகட்டான தோற்றம்கொண்ட மாளிகையாக மாறிவிட்டிருந்தது. இந்நூற்றாண்டின் நடுப்பகுதிக்குப் பிறகுதான் உருவாகியிருந்தபோதும் பழைய மெடோலேக்கும் அப்படித்தான் இல்லாமலாகி விட்டிருந்தது. குவிமாடம் கொண்ட இந்தப் புதிய கட்டடம் விலாசமானதாய் இருந்தது, அதன் காற்றில் மெல்லிய இனிய பைன் மணம் கமழ்ந்தது. நடைபாதையினோரம் இருந்த பெரிய பெரிய மண்பாண்டங்களில் பசுஞ்செடிகள் அடர்த்தியாக முளைத்து எழுந்திருந்தன.

என்றபோதிலும், அவளை நேரில் பார்க்காமல் கழிக்க வேண்டியிருந்த அந்த நீண்ட ஒரு மாதம் முழுவதும் அவன் பழைய மெடோலேக்கில்தான் ஃபியோனாவைக் கற்பனை செய்துகொண்டான். ஒவ்வொரு நாளும் தொலைபேசியில் அழைத்து அவன் க்றிஸ்டி என்கிற செவிலியுடன்தான் உரையாட விரும்பினான். இவனது தொடர்ச்சியான அழைப்புகளைக் கண்டு அவள் சற்றே ஆச்சரியமடைந்தது போல் தோன்றினாலும், அவன் பேச நேர்ந்த வேறெந்த செவிலியையும்விட இவளே முழுமையான அறிக்கைகளை அவனுக்குச் சொன்னாள்.


முதல் வாரத்தில் ஃபியோனாவிற்கு ஜலதோசம் பிடித்தது என்று சொன்ன அவள் புதிதாக இங்கே வருகிறவர்களுக்கு இது சகஜம்தான் என்றும் கூறினாள். 'உங்கள் குழந்தைகள் பள்ளிக்குச் செல்லத் தொடங்குவதைப் போலத்தான்' என்றும் கூறினாள். 'முற்றிலும் புதிதான கிருமிகளுக்கு மத்தியில் விடப்பட்டிருப்பதால் ஆரம்ப காலத்தில் அவர்களுக்கு நிறையத் தொந்தரவுகள் ஏற்படத்தான் செய்யும்' என்றாள் க்றிஸ்டி.

அதன்பிறகு ஜலதோஷத்திலிருந்து தேறினாள். மாத்திரைகள் நிறுத்தப்பட்டிருந்தன. அங்கே வந்த புதிதில் இருந்த அளவிற்கு இப்போது அவளுக்குக் குழப்பங்கள் இல்லை. (இப்போதுதான் மாத்திரைகள் பற்றியும் குழப்பங்கள் பற்றியும் முதன்முதலாக க்ராண்ட்டிடம் சொல்கிறார்கள்.) அவளது பசி சீராக இருந்தது, சூரிய ஒளிபடும் கண்ணாடி அறையில் அமர விரும்பினாள். போலவே, அவள் சில நட்புகளையும் ஏற்படுத்திக்கொண்டிருக்கிறாள் என்றாள் க்றிஸ்டி.

யாரேனும் தொலைபேசினால் இயந்திரமே பதில் சொல்லும்படி செய்தான். வெளியில் அவர்கள் எப்போதேனும் சந்தித்துக்கொண்ட நபர்கள், அண்டைவீட்டார் இல்லை, இவர்களைப் போலவே பணிஓய்வு பெற்று கிராமத்தின் வெவ்வேறு பகுதிகளில் வசித்த அவர்கள் அவ்வப்போது சப்தமின்றி வெளியேயும் சென்றனர். இப்போது ஃபியோனாவும் இவனும்கூட அதுபோன்ற ஒரு பயணத்தில் இருப்பதாகத்தான் அவர்கள் நினைத்துக்கொள்வார்கள். உடற்பயிற்சிக்காக க்ராண்ட் பனிச்சறுக்கு மேற்கொண்டான். நீலவிளிம்புகளாலான பனி அலையை எல்லையாகக்கொண்ட ஒரு கிராமத்தின் அருகே வானத்தை வெளிர்சிவப் பாக்கியபடி சூரியன் கீழிறங்குவதைப் பார்த்தபடி, வீட்டிற்குப் பின்புறமிருந்த வெளியில் அவன் திரும்பத் திரும்பப் பனியில் சறுக்கினான். அதன்பிறகு, இருண்டு கொண்டிருக்கும் வீட்டிற்குத் திரும்புகிற அவன் தொலைக்காட்சியில் செய்திகளை ஓடவிட்டபடி இரவுணவைத் தயாரிப்பான். பொதுவாக அவர்கள் இருவரும் இணைந்துதான் இரவுணவைத் தயாரிப்பார்கள். ஒருவர் பானங்களையும் ஒருவர் கனலையும் ஆயத்தமாக்கியபடி அவனது வேலையைப் பற்றியும் (பழம்பெரும் நார்ஸ் ஓநாய்கள் - குறிப்பாக உலகத்தின் முடிவில் ஓடினை விழுங்குகிற மதிப்புமிக்க ஃபென்ரிர் ஓநாய்- பற்றி அவன் ஒரு ஆய்வுக்கட்டுரை எழுதிவந்தான்) ஃபியோனா அன்று என்ன வாசித்தாள் என்பது பற்றியும் உரையாடுவார்கள். ஒரே மாதிரியான அந்த நாளில் அவர்கள் தனித்தனியாக உணர்ந்த மாறுபட்ட வண்ணங்களைப் பகிர்ந்துகொள்வார்கள். அவர்களுக்கிடையேயான உயிரோட்டம் ததும்பும் மிக நெருக்கமான தருணங்கள் அவை. உறங்கும்முன் படுக்கையில் உணரும் ஐந்து அல்லது பத்து நிமிட இனிமையான தருணங்களும் இருக்கத்தான் செய்தன. பெரும்பாலும் அவை கலவியில் முடியாவிட்டாலும் கலவிக்கான சாத்தியங்கள் இன்னும் ஓய்ந்துவிடவில்லை என்னும் நம்பிக்கையை அளித்து வந்தன.

(தொடரும்)

# கொழுப்பைச் சேர்த்துக் கொல்லாதீர்கள்



கணேசன்

சமீப காலமாக மக்கள் மத்தியில் பரிச்சயமான மருத்துவ வார்த்தைகளில் ‘ஃபட்டி லிவர்’ (FATTY LIVER) ஒன்றாகிவிட்டது. முன்பெல்லாம் 40 வயதைக் கடந்தவர்களுக்கு மட்டுமே வரக் கூடியதாக இருந்த இந்தச் சிக்கல், இப்போது குழந்தைகளுக்கும் வருகிறது என்பதுதான் நம்மை கவனிக்க வைக்கிறது.

**ஃபட்டி லிவர்!**

பெயரே நோயைச் சொல்கிறது. கொழுப்பு மிக்க கல்லீரல்! இது எப்படி ஏற்படுகிறது? எதற்கும் அசராத கல்லீரல், இரண்டு விஷயங்களில் ‘ஆட்டம்’ காண்கிறது. ஒன்று, மது. மற்றொன்று, கொழுப்பு. மதுவில் இருக்கும் ஆல்கஹால் எப்படி பலசாலி கல்லீரலையும் நோஞ்சான் ஆக்கி, நம்மை சாவுக் குழிக்குள் தள்ளுகிறது என்பதைச் சென்ற வாரம் பார்த்துவிட்டோம். ஆல்கஹால் அல்லாத ஃபட்டி லிவர் பிரச்சினைக்கு நாம் சாப்பிடும் சீனி பிளஸ் கொழுப்பு மிகுந்த உணவுகள்தான் முக்கியக் காரணம்.

உடலில் உள்ள அதிகப்படியான கொழுப்பைச் சேகரித்து வைப்பதே கல்லீரல்தான். அவசரத்துக்கு உடலுக்கு சக்தியை வழங்க இயற்கை தந்திருக்கும் ஏற்பாடு இது. இப்படிச் சேகரிக்கப்படும் கொழுப்பு ஒருகட்டத்தில் கல்லீரலுக்கு எதிரியாகிவிடுகிறது என்பதுதான் கவனிக்க வேண்டியது. 'ஆற்றில் போட்டாலும் அளந்து போடு' என்று சொல்லியிருக்கிறார்கள். 'வயிற்றில் போடும் சோற்றில்' இதை நாம் மறந்துவிடுகிறோம். அதன் விளைவுதான் ஃபட்டி லிவர்!

நம் முன்னோரை நினைத்துப்பாருங்கள். காட்டிலும் மேட்டிலும் கடுமையாக உழைப்பார்கள். ஆனாலும், மூன்று வேளை சாப்பாடே அன்றைக்கெல்லாம் அரிது. நாமோ உடல் உழைப்பும் இல்லாமல், உடற்பயிற்சியும் செய்யாமல், மூன்று வேளையும் வயிறு முட்ட சாப்பிடுகிறோம். இது போதாது என்று இடையிடையே நொறுக்குத்தீனி, வார இறுதி பார்ட்டி, மாதம் ஒரு பஃபே விருந்து. அதிலும் ஃபாஸ்ட் ஃபுட், பாக்கெட் ஃபுட், ரெடிமேட் ஃபுட், ரெட்மீட், கோர்ன் சிரப், ஜெல்லி, கேக், சிப்ஸ், ஐஸ்கிரீம், செயற்கை இனிப்புகள், குளிர் பானங்கள் என நமது உணவுமுறை முற்றிலும் மாறிவிட்ட பிறகு, உடல் பருமன் பிரச்சினை அதிகமாகிவிட்டது. ஆல்கஹாலை வாழ்நாளில் ஒருமுறைகூடத் தொடாதவருக்கும் உடல் பருமனால் ஃபட்டி லிவர் வரலாம். எப்படி?

**கொழுப்பாக மாறும் இனிப்பு**

வழக்கமாக, காலையில் ஐந்து இடியப்பம் சாப்பிடுகிறீர்கள். குழம்புக்குப் பதிலாக சிக்கன் குருமாவை ஊற்றிவிட்டால் போதும், அன்றைக்கு மட்டும் இடியப்பக் கணக்கு எட்டாகி விடும். அதேசமயம் உடலுழைப்பு கூடவில்லை. உடற்பயிற்சியும் செய்யவில்லை. அப்படியானால், இடியப்பத்தால் அதிகமாகிப்போன மாவுச்சத்து கொழுப்பாக மாற்றப்பட்டு கல்லீரலில் சேமிக்கப்படும். சிக்கனில் இருக்கும் கொழுப்பும் அங்கே வந்து சேரும். மாலையில் கோப்பி, தேநீருக்கு பதிலாக மென்பானம் குடிக்கிறீர்கள். அதிலுள்ள ஃபிரக்டோஸ் எனும் இனிப்பு கல்லீரலுக்கு வரும்போது, கொழுப்பாக மாறிவிடும்.

இப்படியான ஒரு தவறான உணவுப் பழக்கத்துக்கு அடிமையாகிறீர்கள் என்றால், இதன் விளைவாக அனுதினமும் அதிகரிக்கும் கொழுப்பை முதலில் தொடைக்கும் அப்புறம் இடுப்புக்கும் கல்லீரல் அனுப்பிவைக்கும். அடுத்த கட்டமாக வயிற்றுக்கு அனுப்பும். அங்கே ‘தொப்பை’ தொடங்கும்.

இன்ச் டேப் வைத்து இடுப்புச் சுற்றளவை அளந்தால், ஆண்களுக்கு 88 செ.மீ., பெண்களுக்கு 80 செ.மீ. இருக்கவேண்டும். இந்த அளவைத் தாண்டினால் ஆபத்துக்கு அழைப்பிதழ் அனுப்பிவிட்டோம் என்று அர்த்தம். இந்த நேரத்தில் சுதாரித்துக்கொண்டு உணவைக் குறைத்து, உடற்பயிற்சி செய்து, உடற்பருமனைக் கட்டுப்படுத்தினால் ஃபட்டி லிவர் வராமல் தடுக்கலாம். இல்லையென்றால், தான் சேகரித்த கொழுப்பை இடுப்புக்கும் தொடைக்கும் சளைக்காமல் அனுப்பிக்கொண்டிருந்த கல்லீரல், ஒரு கட்டத்தில் அலுத்துப் போய், தன்னிடமே வைத்துக்கொள்ளும். அப்போதுதான் ஃபட்டி லிவர் தலைகாட்டும்.

**மன அழுத்தம் முக்கியக் காரணம்!**

இந்தப் பிரச்சினைக்கு, மிக முக்கியக் காரணியாக தற்போது வளர்ந்து வருவது மன அழுத்தம்! நீங்கள் ஆரோக்கிய உணவைத்தான் சாப்பிடுகிறீர்கள். துரித உணவை நினைத்துப் பார்ப்பதே இல்லை. உடலையும் ஃபிட்டாக வைத்திருக்கிறீர்கள். மதுவைத் தொடுவதில்லை. என்றாலும், கடுமையான மன அழுத்தம் இருக்கிறது என்றால், நீங்கள் அழைக்காமலேயே வந்துவிடும் ஃபட்டி லிவர்! எப்படி? மன அழுத்தம் காரணமாக சில ஹார்மோன்கள் எக்குத்தப்பாக சுரந்து, காய்ச்சி ஆறவைத்த பாலில் ஆடை கட்டுவதைப்போல கல்லீரலில் கொழுப்பைச் சேர்த்து வைக்கும்.

ஃபட்டி லிவர் பிரச்சினைக்கு அடுத்த காரணம், சர்க்கரை நோய். இதில் இன்சுலின் சரியாகச் சுரக்காது என்பதால், குருதியில் இருக்கிற சர்க்கரை செல்களுக்குள் நுழைய முடியாது. அதுபோல் தேவைக்கு மேல் உள்ள கொழுப்பு அமிலங்களும் குருதியில் தேங்கும். இவற்றைக் கல்லீரல் தன் பக்கம் இழுத்துக்கொள்ளும். இதுவும் ஓர் அளவுக்குத்தான். அதற்குள் சர்க்கரை நோயைக் கட்டுப்படுத்திவிட்டால், ஃபட்டி லிவருக்கு இடமில்லாமல் போகும். தவறினால், ‘கிரேட் ஒன் ஃபட்டி லிவர்’ (GRADE I FATTY LIVER) தலை எடுப்பதைத் தடுக்க முடியாது.

**அது என்ன ’கிரேட் ஒன் ஃபட்டி லிவர்’?**

உணவிலிருந்து வருகிற கொழுப்பு மொத்தமும் கல்லீரலில் சேரும் தொடக்கநிலைக்கு 'கிரேட் ஒன் ஃபட்டி லிவர்' என்று பெயர். பெண்கள் ஃபேசியல் செய்யும்போது சில கிரீம்களை முகத்தில் பூசிக்கொள்வதைப்போல, கல்லீரலின் மேற்புறம் மட்டுமே கொழுப்பு படியும் நிலை இது. இது எந்தவோர் அறிகுறியையும் வெளிக்காட்டாமல், எந்த வழியிலும் ஆரோக்கியத்தைக் கெடுக்காமல் ‘அமைதி’யாக இருக்கும். வேறு காரணத்துக்காக வயிற்றை ஸ்கேன் செய்யும்போது, ஃபட்டி லிவர் இருப்பது எதேச்சையாகத் தெரியும்!

இந்த நேரத்தில் நாம் விழிப்படைந்து விட வேண்டும். ‘கிரேட் ஒன்’னுக்குக் காரணம் தெரிந்து சிகிச்சை எடுக்கவேண்டும். இல்லையென்றால், இது 'கிரேட் டூ'வுக்குத் தாவிவிடும். இரண்டுக்கும் என்ன வித்தியாசம்? 'கிரேட் டூ'வில் கல்லீரலில் அநேக பாதிப்பு இருக்கும். ஆனாலும் உயிருக்கு ஆபத்து இருக்காது. என்ன காரணம்?

இதுவரை மேற்பூச்சாக இருந்த ‘கொழுப்புக் கோஷ்டிகள்’ கல்லீரலுக்குள் ஊடுருவுவதால் அங்கே அழற்சியும் வீக்கமும் உண்டாகின்றன. கல்லீரல் செல்கள் இருக்கும் இடத்தில் ஆங்காங்கே குவியல் குவியலாகக் கொழுப்பு செல்கள் இடம் பிடிக்கின்றன. வீட்டில் சமையல் அறையெங்கும் விருந்தாளிகள் அமர்ந்துவிட்டால், சமையல் எப்படி நடக்கும்? அப்படித்தான்,

**இன்ச் டேப் வைத்து இடுப்புச் சுற்றளவை அளந்தால், ஆண்களுக்கு 88 செ.மீ., பெண்களுக்கு 80 செ.மீ. இருக்கவேண்டும். இந்த அளவைத் தாண்டினால் ஆபத்துக்கு அழைப்பிதழ் அனுப்பிவிட்டோம் என்று அர்த்தம்**

# நாடு வேறை நாங்கள் வேறையோ?



கதிரேசன் காத்தவராயன்

அண்டைக்கதிலை செல்லத்தம்பியற்றை பெட்டையின்ரை கலியாண வீடு... போகலாமெண்டால் ஊரடங்குச் சட்டத்துக்கை எங்கையப்பா போகவெளிக்கிடுகிறியள் எண்டு சண்டை. சரி பிறகொருநாளைக்குப் போகலாந் தானே எண்டு செய்தியளைப் பாக்கவெண்டு ரீவிக்குக் கிட்டவாப் போக "நாட்டு நடப்பே தெரியாதனீங்கள் ரீவியைப் பாத்து என்னதான் செய்யப்போறியள்?" எண்டு சிரிச்சாள் என்ரை பேத்தி... எல்லாருந்தான் சிரிச்சினம்... கறன்ற் இல்லையெண்டது அப்பதான் நினைவுக்கு வந்துது. சமாளிச்சுக்கொண்டு வெளியாலை வந்தன்.ஏ

"உந்தக் கறன்றாலை பெரிய பிரச்சனை.... ஏ..பி...சீ..டீ... பாடமாக்கி நேரம்பாத்து சீய்க் இதுகுமொரு வாழ்க்கையே?" எண்டு புலம்பிக் கொண்டு சம்பர் வந்தார். "என்னப்பா சம்பு புலம்புறாய்?" எண்டு கேட்டதுக்கு "பின்னையென்ன கதிரேசண்ணை! உந்தக் கறன்ரை நம்பி ஏதாலுஞ் செய்யக்கூடியதாக் கிடக்கே? உங்கை உதிலை தம்பற்றை பெடி சலூனுக்குப் போய் பாதி வெட்டினபடி கறன்ற் நிண்டுபோச்சாம்... மிசினாலையல்லே வெட்டுறவங்கள்... எஞ்சினை இழுக்க வெளிக்கிட்டு அது சரி வராமல் கத்திரிக்கோலாலைதான் சமாளிச்சு விட்டவங்களாம்.... வேத்துப்போய் நனைஞ்சபடி போறான் பெடி" எண்டார் சம்பர்.

"உப்பிடிக் கனக்கப் பிரச்சனை... அண்டைக்கு மருமேன் தன்ரை மோட்டச்சயிக்கிளுக்கு சேவிஸ் போடவெண்டு போயும் உப்பிடித்தான்.... கறன்ற் வரும்வரைக்கும் கறாஜ்சிலை காவலிருந்ததான் வந்தார்" எண்டன் நான். "அது கிடக்கட்டுமண்ணை என்னை வாவெண்டுபோட்டு வெளிக்கிடாமல் நிக்கிறியள்... கலியாணத்துக்கு வரயில்லையோ?" எண்டார் சம்பர். நான் வாய் திறக்கமுன்னம் மனிசிதான் சொல்லிச்சுது.. "இவர் வெளிக்கிட்டவர்... கேவியுவல்லே? நாங்கள்தான் மறிச்சனாங்கள்."

"சம்பர் பிலத்தாச் சரிச்சார்... எடியக்கா... எங்களுக்குக் கேவியு போடேலுமோ? உங்கை உதிலை தியாகுவின்ரை வீடு குடிபூரல் மேளத்தோடை படங்கொண்டு போறாங்கள்.... செல்லத்தம்பியற்றை ரண்டு பஸ் மண்டபத்துக்குப் போட்டுது... அடுத்தது வெளிக்கிடுறத்துக்கு அரை மணித்தியாலமாகுமாம்..." எண்டு என்னையும் மனிசியையும் பாத்தார். நான் டக்கெண்ட வெளிக்கிட்டுக்கொண்டு அந்தாளோடை போய் பஸ்சிலை ஏறிவிட்டன்.

றோட்டைப் பாத்தா ஊரங்குச் சட்டமெண்டதை நம்புகிற மாதிரியே இல்லை. வழக்கம் மாதிரியேதான்... "எரிபொருள் இல்லையெண்டுறாங்கள், ஆனால் இவ்வளவு வாகனங்கள் என்னப்பா தண்ணியிலையே ஓடுதுகள்?" எண்டார் சம்பர். "அதண்ணை எங்களுக்கு எல்லாம் பழக்கமல்லே..." எண்டு கனகம்மா கதைக் குள்ளை வந்தா. கனகம் கதைச்ச உடனையே செல்லாச்சிக்குஞ்சி "ஓஓஓ.... பின்னையென் னப்பா எத்தினை வருசமாப் பழக்கமான விசயம் சொல்லு பாப்பம்?" எண்டா.

"உண்மைதானணை" எண்டா கனகம். "என்னத்தைத்தான் சொன்னாலும் எவ்வளவைத்தான் அனுபவிச்சாலும் எல்லாத்தையும் மறந்தல்லே போகிடுறம்; அப்படியல்லே?" எண்டு நான் சொல்ல உண்மைதான் எண்டு ஆமோதிச்சினம். "கறன்ரே இல்லாமலுக்கு எவ்வளவு காலம் வாழ்ந்தனாங்கள்... இப்பகோதாரி கண்டறியாததுகளைப் பழகிச் சோம்பேறியளாயல்லே போட்டம்" எண்டார் சம்பர்.

"அது இல்லை, இது இல்லை எண்டு ஒப்பாரி வைக்கிறம். ஆனால் இஞ்சை என்னதான் நடக்கேல்லை? கலியாண வீடு செத்த வீடு" எண்டு நான் சொல்லிக்கொண்டிருக்க "ஏனப்பா கோயிலுகளைப் பாரன்" எண்டா செல்லாச்சிக் குஞ்சி. "எங்களுக்குப் பழக்கமெண்டது சரிதான், இப்ப பாரன் கிரிபத் குடுத்துக் கொண்டாடினவையும் பழகீனமல்லே?" எண்டா கனகம்... "என்னவெண்டாலும் சனமல்லே அதுகும் கஸ்டப்பட்ட சனமல்லே கஸ்டப்படுகுது.." எண்டார் சம்பர்.

"பழக்கமெண்டதுக்காக தலை கீழாயல்லே நிக்கப்பாக்கிறம். அளவு கணக்கெண்டு கண்மண் தெரியாமலுக்கல்லே கூத்தடிக்கிறம்... காசு கிடக்கு எண்டதும் கஸ்ரம் தெரியாமலுக்கு வாற காசு எண்டிறதும் பெரிய பிரச்சனையல்லே" எண்டு நான் சொன்னதுக்கு செல்லாச்சிக்குஞ்சிக்கு கோவம் வந்திட்டுது. "என்ன கதிரேசு பேக்கதை பறையிறாய்? கிடக்கேக்குள்ள சில வழிக்கிறதும் பிழையே? ஒரு நேரக் கஞ்சிக்கு வரிசையிலை நிண்டு சாகேக்குள்ள ஆராலும் வந்தவையே? இல்லைத் தட்டிக் கேட்டவையே?" பழஞ்சீலை கிழியிற மாதிரி புறுபுறுதான்...

மண்டபம் வந்திட்டுது இறங்குங்கோவன் எண்டுகொண்டு இறங்கிவிட்டன்.

---

## கொழுப்பைச்...

இப்போது கல்லீரலின் செயல்பாடு குறைந்து செரிமானக் கோளாறுகள் ஏற்படும். வயிறு வலிக்கும். வாந்தி வரும். காமாலை எட்டிப்பார்க்கும். அத்தோடு சிரமங்கள் நின்றுகொள்ளும். இதற்காக பயப்படத் தேவையில்லை.

**பரிசோதனைகள் என்ன?**
**சிகிச்சைகள் என்ன?**

ஏதோ 'கிரேட் டூ ஃபட்டி லிவர்' என்றதும் கல்லீரலே கெட்டுவிட்டதோ என்று அதிர்ச்சி அடைய வேண்டாம். கொழுப்பின் காரணமாக கல்லீரலில் நேர்ந்திருக்கும் பாதிப்பைத் துல்லியமாக அறிவதற்கு என்சைம் பரிசோதனைகள் இருக்கின்றன. அத்துடன் 'லிவர் பயாப்சி'யும் கைகொடுக்கிறது. பயாப்சி எடுக்கப் பயப்படுபவர் களுக்காகவே 'ஃபைப்ரோஸ்கேன்' (FIBROSCAN) எனும் நவீன சோதனை இப்போது வந்துள்ளது. இதன் மூலம் நோயைக் கணித்து வாழ்க்கைமுறை மாற்றங்கள், தகுந்த மாத்திரை, மருந்துகள், வைட்டமின் இ கலந்த ஆன்டிஆக்ஸிடென்டுகள், ஃபிளவினாய்டு நிறைந்த காய்கறிகள், பழங்கள் போன்றவற்றைச் சாப்பிட்டு 'கிரேட் டூ'வை 'ஜீரோ கிரேட்' ஆக்கிவிடலாம்.

ஆனால், இப்போதாவது நீங்கள் 'திருந்தி' விடவேண்டும். இல்லையென்றால், 'கிரேட் திரி ஃபட்டி லிவர்' எனும் பேராபத்தைச் சந்திக்க வேண்டியது வரும். 'கிரேட் திரி'யில், இதுவரை கல்லீரலில் அழற்சி ஏற்பட்ட இடங்களில் தழும்பு கள் தோன்றி, சுருங்கும். தேங்காய்க்குள்ளே இருக்கிற 'பருப்பி'ல் அதன் வெளிப்பக்கம் இருக்கிற நார்கள் இடம்பிடித்து விட்டால் எப்படி இருக்கும்? கற்பனை செய்துபாருங்கள். அப்படித்தான் கல்லீரல் இப்போது இருக்கும்.

இதற்கு 'ஃபைப்ரோசிஸ்' என்று பெயர். இதுவே நாளடைவில் 'சிரோசிஸ்' எனும் கல்லீரல் சுருக்க நோய்க்குக் கொண்டு சென்று உயிருக்கு உலை வைக்கும். ஆனால், நவீன தொழில்நுட்பத்தில், இந்த நோய்க்குக் 'கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை' (LIVER TRANSPLANTATION) செய்து உயிரைக் காப்பாற்றவும் வசதி இருக்கிறது என்பது ஆறுதல்.

எனினும், அதற்கு ஆகும் செலவு அதிகம். சிரமங்களும் கூடுதல். ஆரோக்கியத்தில் அக்கறை கொண்டால் இத்தனை துன்பங்கள் தேவையே இல்லை. மதுவை மறந்து, எடையைக் குறைத்து, சர்க்கரை நோயைச் சரிசெய்துவிட்டால் போதும், கெட்டுப்போன கல்லீரலும் உடம்பின் காவல்காரராக மாறிவிடும்!

தடுக்கும் மந்திரங்கள் பத்து

1. உடல் எடையைச் சரியாகப் பேண வேண்டும்.
2. கொழுப்பு மிகுந்த உணவுகளான ரெட் மீட், ஃபாஸ்ட் ஃபுட், பாக்கெட் ஃபுட் போன்றவற்றைக் குறைத்துக்கொள்ளுங்கள்.
3. நொறுக்குத் தீனிகளை ஓரங்கட்டுங்கள்.
4. கீரைகள், பழங்கள், காய்கறிகள் தேவைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்.
5. மதுவை விலக்குங்கள்.
6. தினமும் ஓர் உடற்பயிற்சி அவசியம்.
7. மன அழுத்தம் ஆகாது.
8. 6 - 8 மணி நேரம் இரவுத் தூக்கம் தேவை.
9. ஒமேகா 3 சத்துள்ள மீன் உணவுகளைச் சேர்த்துக்கொள்ளுங்கள்.
10. நீரிழிவை நெருங்க விடாதீர்கள்.

**சிந்தாமணி**




# பெற்றோல் சிக்கனம் இனிக் கட்டாயம்...!

எரிபொருள்களுக்கான விலைகள் எகிறிவிட்டிருக்கின்ற காலப்பகுதி இது. அவற்றுக்கான விலைகள் அதிகரித்திருக்கின்றனவே தவிர தேவை குறைக்கப்படவில்லை. அதனால் - அதிகரித்த விலைவாசியால் பலரும் அல்லல்படத் தொடங்கியிருக்கிறார்கள். குறிப்பாகப் பெற்றோல் பாவனையை அதிகம் உள்ளீக்கின்ற வாகனக்காரர்கள் அதிகமாக இருப்பதால் பெற்றோலைச் சிக்கனமாகப் பயன்படுத்தவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

அதெப்படி...? பெற்றோலைச் சிக்கனமாகப் பயன்படுத்த முடியும்...? என்று உங்கள் புருவங்கள் உயரலாம். ஆனால் அது சாத்தியமான ஒன்றுதான். பெற்றோல் பாவனையாளர்களும், பெற்றோலைத் தமக்குரிய எரிபொருளாகக் கொண்டியங்கும் வாகனங்களும் அதிகமாகக் காணப்படுகின்ற சூழலில் பெற்றோலைச் சிக்கனமாகப் பயன்படுத்தக்கூடிய சில வழிமுறைகள் குறித்துப் பார்ப்பது பொருத்தமாக இருக்கும்.

**இயந்திர உராய்வுச் சீராக்கியைப் பேணுதல்**

இயந்திர உராய்வைக் கட்டுப்படுத்தும் விதத்தில் அல்லது உராய்வை ஆரோக்கியமாகப் பேணும் விதத்தில் இயந்திரத்துக்கு இடப்படுகின்ற உராய்வு நீக்கி எண்ணெய்யைக் கவனித்துச் செயற்படுவது என்பது பெற்றோல் சிக்கன விடயத்தில் முதன்மையானது. அதாவது இஞ்சின் ஒய்ல் எனப்படுகின்ற உராய்வு நீக்கி எண்ணெய்யை அதன் தரம் முற்றிலும் இழப்பதற்கு முன்னதாகவே மாற்றிக்கொள்வதன் மூலம் அந்த இயந்திரத்தின் ஆரோக்கியத்தைப் பேணுவதோடு அது உள்ளீர்க்கும் பெற்றோலின் அளவையும் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியும். அவ்வாறல்லாத சந்தர்ப்பங்களில் - அதாவது இஞ்சின் ஒயிலை அதன் தரம் இழக்கும்வரை மாற்றாமல் வைத்திருந்தால் இயந்திரம் சூடாகின்ற தன்மை அதிகரிக்கும். அதன் காரணமாக அது மேலதிக எரிபொருளை உள்ளீர்த்து எரித்து வெளியேற்றும். எனவே பெற்றோல் சிக்கன விடயத்தில் இஞ்சின் ஒயிலை முதன்மையாகக் கவனிக்கவேண்டும். குறிப்பிட்ட கிலோ மீற்றர்கள் வரையில் அதன் பாவனை தரம் குறையாமல் இருக்கும். அதைக் கவனித்து ஒயிலை மாற்றிவந்தால் மேலதிக எரிபொருளை வாகனம் நுகர்வதைத் தடுக்க முடியும்.

**வளிச்சீராக்கியைச் சுத்தமாகப் பேணுதல்**

எரிபொருளை மிச்சப்படுத்துவதில் இரண்டாவது முக்கியபங்கு வளிச்சீராக்கிக்கு உண்டு. இயந்திரத்துக்குத் தேவையான வளியை வடித்துக் கொடுக்கின்ற பங்கை அது ஆற்றுகின்றது. எயார் பில்டர் எனப்படுகின்ற அதில் போய்ப் படிகின்ற தூசு, துணிக்கைகள் அதன் செயற்படு தன்மையைக் குறைக்கின்றன. அதுமட்டுமன்றி அவை அந்த வடிகட்டியினூடாக இயந்திரத்துக்குள் நுழையவும் முற்படுகின்றன. இதனால் காற்று வடிகட்டியின் செயற்பாட்டில் தடங்கல்கள் ஏற்படுகின்றது. அதன் காரணமாக வழமைக்கு மாறான செயற்பாட்டை எதிர்கொள்கின்ற இயந்திரம் எரிபொருளை மேலதிகமாக உள்ளீர்க்கிறது. எனவே வளிச்சீராக்கி எனப்படுகின்ற எயார் பில்டரைச் சுத்தம் செய்வதும் அது பாவனைக் காலத்தைத் தாண்டியதாக இருந்தால் மாற்றம் செய்வதும் கட்டாயமானது. அதன் மூலம் இயந்திரத்தின் உறுதியைப் பேணுவதோடு பெற்றோல் சிக்கனத்தையும் பேண முடியும்.

> **எயார் பில்டர் எனப்படுகின்ற அதில் போய்ப் படிகின்ற தூசு, துணிக்கைகள் அதன் செயற்படு தன்மையைக் குறைக்கின்றன. இதனால் காற்று வடிகட்டியின் செயற்பாட்டில் தடங்கல்கள் ஏற்படுகின்றது. அதன் காரணமாக வழ மைக்கு மாறான செயற்பாட்டை எதிர் கொள்கின்ற இயந்திரம் எரிபொருளை மேலதிகமாக உள்ளீர்க்கிறது**

**சக்கரங்களின் காற்று மற்றும் செய்ன்**

வாகனத்தின் சக்கரங்களில் தேவையான அளவுக்குக் காற்றைப் பேணுதலும் சக்கரங்களைச் சுற்றச் செய்கின்ற குட்டிச் சக்கரங்கள் மற்றும் செயின் ஆகியவை எந்நேரமும் உராய்வு நீக்கி எண்ணெய்யைக் கொண்டிருப்பதாகப் பேணுவதும் கட்டாயமானது. உராய்வு நீக்கி எண்ணெய்யைக் கொண்டிராத மற்றும் தேவைக்கேற்ப காற்றைக் கொண்டிராத சந்தர்ப்பங்களில் அவற்றைச் சுற்றச்செய்வதற்கு இயந்திரம் அதிக வலுவைப் பிறப்பிக்கவேண்டி ஏற்படும். இதனால் அது வழமைக்கு மாறாகச் சூடாகும். எனவே எரிபொருள் நுகர்வு அதிகரிக்கும். இத்தகைய காரணங்களைச் சீர்செய்து வாகனப் பராமரிப்பை மேற்கொள்வதன் மூலம் இயந்திரத்தின் பெற்றோல் பாவனையைச் சிறந்த முறையில் தக்க வைத்துக்கொள்ளமுடியும். இதனால் பெற்றோல் சிக்கனத்தை ஓரளவுக்காவது பேண முடிவதோடு மோட்டார் வாகனங்கள் மற்றும் உதிரிப்பாகங்களுக்கான இறக்குமதிக் கட்டுப்பாடுகளுக்கு மத்தியில் எமது வாகனத்தையும் சிறந்த முறையில் பராமரித்துக் கொள்வதாக இருக்கும்.

# நம்மவூர்ச் சுத்துமாத்து

## கையொப்பங்களைக் களவாடுவது

**பிரேமச்சந்திரன் - பளை**

உயர் அதிகாரிகளின் செயலர்கள், நிர்வாக உத்தியோகத்தர்கள், எழுதுநர்கள் ஆகிய பதவிகளில் இருப்பவர்கள் தமது உயர் அதிகாரிகளின் ஒப்பங்களைக் களவாடும் நுட்பமான சுத்துமாத்து ஒன்று நிறுவன மட்டத்தில் தமிழர் மத்தியில் இருந்து வருகிறது. தமது உயர் அதிகாரிகளால் ஒப்பமிடாது தவிர்க்கப்பட்ட கடிதங்களையும், "இந்தக் கடிதத்தைப் பார்த்தால் சேர் சைன் பண்ணமாட்டார்" என்று வரையறுக்கப்பட்ட கடிதங்களையும் அந்த உயர் அதிகாரிகளுக்குத் தெரியாமல் ஏனைய கடிதங்களுடன் செருகி வைத்துக் களவாக ஒப்பம் வாங்கும் சுத்துமாத் துப்பரவலாக நடந்து வருகிறது.

இதைவிடத் தொழில்நுட்ப அலுவலர்கள் பலர் தமது திணைக்களத்துக்கும் பணிக்கும் நேர்மையாக இருக்காது ஒப்பந்தகாரர்களுடன் நெருக்கத்தைப் பேணி அவரது ஒப்பந்த வேலைகளில் இன்னும் எவ்வளவு பணத்தை மேலதிகமாகப் பெற வாய்ப்புண்டு எனக் கணக்குப் பார்த்து மேலதிக வேலை ஒன்று செய்யப்பட்டது என்று காட்டி (அது மண் ணுக்குள் அல்லது கொங்கிறீட்டுக்குள் செய் யப்பட்டது என்று பொய் கூறி) உயர் அதி காரிகளின் ஒப்பத்தைப் பெற்றுச் சம்மதம் காட்டிவிடுகிறார்கள். இதைவிடக் கணக்காளரிடம் வேறு விதமான கணக்குகளைக் காட்டி ஒப்பம் பெறுவது என்றும் பல வழி களில் உயர் அதிகாரிகள் பலர் ஏமாற்றப் படுகின்றனர்.

தமக்குத் தெரிந்தவர்கள், பழக்கமானவர்களது வேலை வாய்ப்புக் கடிதங்கள், பதவியுயர்வுக் கடிதங்களும் இவ்வாறு களவாக ஒப்பம் வாங்குவதற்காகக் குறிப்பிட்ட அலுவலர்கள் கையூட்டுப் பெறுவதும் சில இடங்களில் பாலியல் லஞ்சம் கோருவதும் நடக்கிறது. இவை உயர் அதிகாரிகளுக்கு இவை தெரிந்திருப்பதில்லை. இவ்வாறான நேர்மையற்ற அலுவலர்கள் பரவலாகப் பல திணைக்களங்களிலும் உள்ளார்கள். இதை மிக இலகுவாகக் கண்டுபிடிக்க வேண்டுமாயின், "அவரைப் பிடித்தால் லேசாகச் செய்து தருவார்" எனத் திணைக்களங்களில் நம்பப்படும் ஒருவரை நோக்கி விரலை நீட்ட முடியும். இந்தக் கள்ளவேலைகளில் ஆண்களுக்கு நிகராகப் பெண்களும் ஈடுபடுகின்றனர்.

இதைவிடக் கொடுமை என்னவென்றால் அவ்வாறான ஏமாற்றுப் பேர்வழிகளை அல்லது நேர்மையற்றவர்களைச் சுழியன், மண்டைக்காய், புகுந்து விளையாடக்கூடியவன் என்றெல்லாம் பட்டப் பெயர் வைத்துச் சிறப்பித்து எல்லோரும் அழைப்பதுதான்.

# தமிழ்த் தலைவர்கள் பிச்சைக்காரர்கள் அல்லர்

ரவீந்திரன்

தமிழ்த் தலைவர்கள் பிச்சைக்காரர்கள் என்று விழித்திருக்கிறார் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் சிறி சற்குணராசா. தந்தை செல்வாவின் 124ஆவது பிறந்த தின நிழகழ்வில் தமிழ் அரசுக் கட்சியினர் மத்தியில் அவர் இதனைத் துணிவாகக் கூறியிருக்கிறார். போர் முடிந்து 12 ஆண்டுகள் சென்ற பின்னரும் வன்னியில் ஆயிரக்கணக்கான விதவைப் பெண்கள் மிகவும் துன்பமான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கின்றனர் என்பதையும் அவர்களைத் தமிழ் அரசியல்வாதிகள் கண்டுகொள்ளவில்லை என்பதையும் அரசியல்வாதி அல்லாத ஆறுதிருமுருகன் மக்களுக்கு அதிகம் சேவை செய்திருக்கிறார் என்பதையும் ஓர் ஒப்பீட்டாக வைத்தே அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்திருக்கிறார்.

பேராசிரியர் கூறும் இத்தகைய பிச்சைக்கார அரசியல் அணுகுமுறையையும் மனநிலையையும் தந்தை செல்வாவில் இருந்தே தொடர்ந்து வருகின்றது. பெரும் தலைவரான ஒரு கிறிஸ்தவ மேட்டுக்குடித் தமிழரான அதுவும் ஒரு சட்டத்தரணியான தந்தை செல்வா அரசியலைப் பகுதிநேரமாகவே தொடக்கத்தில் செய்தார். கொழும்பில் நியல் எஸ்ரேட் நிறுவனம் ஒன்றை நடத்திப் அரசியலுக்கு வரும் முன்னரே பெருந்தொகைப் பணம் சம்பாதித்திருந்தார். சிங்களத் தலைவர்களைப்



புரிந்துகொள்ளாது இரண்டு ஒப்பந்தங்களில் ஒப்பங்களையிட்டபோதிலும் அவை குழம்பிப்போனால் என்ன செய்வது என்ற மாற்றுத் திட்டத்தைத் தந்தை செல்வாவும் கொண்டிருக்கவில்லை.

சாதாரண கிராமவாசி ஒருவர் கடவுளிடம் மன்றாடுவதுபோல "இனித் தமிழரைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்" என இறுதியில் அவர் கூறியது அவரிடம் அரசியல் எதிர்காலத் திட்டம் இல்லாதிருந்தமைக்கான சான்று. இது தமிழ் அரசுக் கட்சியினருக்குத் தெரிந்திருந்தாலும் மேட்டுக்குடி அரசியலுக்காகத் தந்தை கூறிய தமிழரை இனி கடவுள்தான் காப்பாற்றவேண்டும் என்ற கருத்தைத் தீர்க்க தரிசனமாக சாமி தூக்குவதுபோல தோளில் தூக்கி வைத்திருப்பது அபத்தமானது.

### தமிழரையும் சிங்களவரையும் ஏமாற்றிய தந்தை

தந்தை செல்வா ஒரு கனவான் அரசியல்வாதியாக இருந்தாரே தவிர, மக்கள் மத்தியில் இறங்கி வேலை செய்தவரில்லை. கொழும்பிலிருந்து கோட் சூட்டுடன் காரில் புறப்பட்டு மதவாச்சி வாடி வீட்டுக்குச் சென்று (அரச றெஸ்ற் ஹவுஸ்) ஓய்வெடுத்துவிட்டு யாழ்ப்பாணப் பயணத்தைத் தொடரும்போது வேட்டி சால்வையுடன் காரில் ஏறுவதும் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு செல்லும்போது மதவாச்சி வரை வேட்டி சால்வையுடன் பயணம் செய்து அங்கிருந்து புறப்படும்போது கோட் சூட்டுடன் புறப்படுவதும் என்று ஒரே பயணத்தில் தமிழரையும் சிங்களவரையும் ஏமாற்றியிருந்தார் என்பதையும் முதலில் தமிழ் மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். இதுவும் வாக்குப் பிச்சைக்கான ஒரு வழிமுறைதான்.

### சாகும்வரை பதவி வகிப்பது

தமிழ் அரசுக் கட்சியில் இன்று வரை காணப்படுகின்ற மிகப் பெரிய பலவீனம் சாகும் வரை நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கவேண்டும் என்று ஆசைப்படுவது. இதைத் தொடக்கி வைத்தவர் தந்தை செல்வாவே. 'தந்தையின் வழியில் பயணிப்பது என்பது இந்த வயோதிபத் தலைமைத்துவத்தைத் தொடர்வதையும் சேர்த்தே அரசியல்வாதிகளால் கூறப்படுவதாகவே கொள்ளப்படவேண்டும். தந்தை செல்வா வயோதிபத்துக்கு அப்பால் பார்க்கின்சன் நோயாளியாக இருந்தபோதிலும் கூட்டத்தில் பேச முடியாது அனுங்கும்போதும் தளபதி அமிர்தலிங்கமே அதை மக்களுக்குக்கூறினார். தந்தை செல்வா அப்படிச் சொல்கிறார். இப்படிச் சொல்கிறார் என்றும் அடித்தும் இடித்தும் ஆணித்தரமாகவும் கூறுகிறார் என்றும் அமிர்தலிங்கம் கூற அதைக்கேட்டுக் கைதட்டி உணர்ச்சி வசப்பட்டு வாக்களை உருவாக்கியவரே தந்தை செல்வாதான்.

அவர் உயிருடன் இருக்கும்போது 1958 இனக்கலவரம், 1977 இனக் கலவரம் என இரண்டு கலவரங்களையும், கல்லோயா போன்ற விவசயத் திட்டங்கள் மூலம் தமிழர் நிலங்களைக் கபளீகரம் செய்த அரச ஆக்கிரமிப்பும் நடந்தன. அவற்றைக் கண்ணால் கண்ட பின்பும் வெறும் கனவான் ஒப்பந்தங்களாலும் நாடாளுமன்ற உரைகளாலும் தமிழரது பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என நம்பியது பிச்சைக்காரத்தன அரசியலின் உச்சம். அல்லது தமிழ் மக்களின் மன நிலையை வைத்து அவர் வாக்கு அரசியல் செய்தார் என்றும் சொல்லலாம்.

**தமிழ் அரசுக் கட்சியில் இன்று வரை காணப்படுகின்ற மிகப் பெரிய பலவீனம் சாகும் வரை நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கவேண்டும் என்று ஆசைப்படுவது. இதைத் தொடக்கி வைத்தவர் தந்தை செல்வாவே**

தனது மூப்புக் காரணமாக அரசியலில் இருந்து ஓய்வுபெற்று



இரண்டாம் நிலைத் தலைவர்களை உருவாக்கி இளம் தலைவர்களைக் களமிறக்கி கட்சியை மறுசீரமைக்க தந்தை செல்வா முயன்றிருந்தால் இன்றுவரை 89 வயதில் சம்பந்தனும், அதற்குச் சற்றுக் குறைந்த வயதில் விக்னேஸ்வரனும், தமது ஓய்வுக் காலத்தில் நாடாளுமன்றம் சென்றிருக்க முடியாது. யார் யார் தேர்தலில் நிற்கமுடியாது எனத் தமிழ் அரசுக் கட்சியில் ஒரு வரையறையைத் தந்தை செல்வா முன்வைக்காதது மிகப் பெரிய குறைபாடாகும்.

### வட்டுக்கோட்டைத் தீர்மானம்

1970-1977 காலப்பகுதியில் சிறிமவோ பண்டாரநாயக்காவின் மூடிய பொருளாதாரக் கொள்கையால் தமிழ் மக்கள் அதிகம் உழைத்தார்கள். வளமாக வாழ்ந்தார்கள். கல் வீடுகளும் ஏனைய வளங்களையும் தமது உழைப்பால் பெற்றுக்கொண்டார்கள். ஓர் உச்சமான வாழ்க்கை வாழ்ந்த சூழலில் ஜெ.ஆர். ஜெவர்த்தனவுடன் சேர்ந்து அமிர்தலிங்கம், செல்வா ஆகியோர் தமிழரின் பொருளாதாரத்தை உடைக்கும் திறந்த பொருளாதாரக் கொள்கைக்கு ஆதரவளித்தார்கள். 1970ஆம் ஆண்டுத் தேர்தலில் ஜெ.ஆரும் அமிர்தலிங்கமும் தோல்வி அடைந்திருந்த நிலையில் மறுபடியும் காலூன்றுவதற்காக போட்ட திட்டமே வட்டுக்கோட்டைத் தீர்மானமாகத் தமிழீழம் என அறிவிக்கப்பட்டது.

தமிழர் பொருளாதாரத்தில் மேம்பட்டு விட்டார்கள் இனித் தனிநாடு கேட்பார்கள் அவர்களின் பொருளாதாரத்தை உடைப்பதற்குத் திறந்த பொருளாதாரத்தையும் கொண்டு வரவேண்டும் என்று ஜெ.ஆர். கருதியிருக்கக்கூடும். தந்தை செல்வாவும் அமிர்தலிங்கமும் 'தமிழீழம்' என்ற ஒன்றைக்காட்டி தேர்தலில் வெற்றி பெற்ற வருடமே அவர்கள் பார்த்திருக்க 1977 இனக்கலவரத்தை நடத்தி மதவாச்சி, அனுராதபுரம் நிகவெரெட்டிய, நொச்சிகாமம் ஆகிய பகுதிகளில் இருந்த தமிழர்களின் கடைகள், கொள்வனவு மையங்கள், அரிசி ஆலைகள் என எல்லாவற்றையும் இல்லாது செய்தார். அதன் தொடர்ச்சியாகவே திறந்த பொருளாதாரக் கொள்கையை அறிமுகப்படுத்தினார் என்பதையும் கவனத்தில்கொள்ள வேண்டும்.

மூடிய பொருளாதாரத்தை இல்லாது செய்து தமிழருக்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியதில் தந்தை செல்வாவுக்கும், அமிர்தலிங்கத்துக்கும் தமிழ் அரசுக் கட்சிக்கும் பங்கிருந்தது என்பதை மறுக்கமுடியாது.

### தமிழ் மக்களைப் பிச்சைக்காரர்கள் ஆக்கினார்கள்

நல்லாட்சி என்று கூறப்பட்ட அரசு பதிவியிலிருந்தபோது பன்னாட்டு வர்த்தகக் கண்காட்சி ஒன்று யாழ்ப்பாணம் முற்றவெளியில் நடந்தது. அதில் தலைமை அதிதியாக அப்போதைய தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க கலந்துகொண்டு உரையாற்றினார். "முதலீட்டாளர்களைத் தேடி யாழ்ப்பாண மக்கள் அலையவேண்டிய அவசியம் இல்லை. கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பல கோடி ரூபா சொத்துக்களை வைத்திருக்கின்றனர். அவர்களே பெரு முதலீட்டாளர்களாகப் பங்களிப்பு வழங்குவார்கள்" எனப் பகிரங்கமாக அறிவித்தபோது தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா உட்பட வேறு சில உறுப்பினர்களும் மேடையிலிருந்து அதை ஒரு பெருமையாக ஏற்றுக்கொண்டார்கள்.

ரணில் விக்கிரமசிங்க பேசிய பின்னர் "எங்களிடம் எங்காலை காசு. நாங்கள் நாடாளுமன்ற உறுப்பினர் சம்பளத்தில் மிகவும் கஸ்ரமான வாழ்க்கை வாழ்ந்துகொண்டிருக்கிறோம். தலைமை அமைச்சர் எதை வைத்து இவ்வாறு கூறினார் நாங்கள் பிரதமர் கூறும் அளவுக்கு வசதியானவர்கள் அல்ல" என

நட்சத்திரா

# ஏன்...? அப்படி...?

13

## தென்னை மரங்களின் கீழ் வேறு மரங்களை நடக்கூடாது...!



தென்னை மரங்களின் கீழ் வேறு மரங்கள் ஒன்றையும் நடக்கூடாது என்றுகூறி எந்தவொரு மரத்தையும் தென்னைகளுக்குக் கீழாக நடுவதைத் தவிர்த்துக்கொள்கின்றனர். அது ஏன்...? அதற்கு என்ன காரணங்கள் சொல்லப்படுகின்றன...? அவ்வாறு நடுவது தவறானதுதானா...? என்றெல்லாம் தேடிப்பார்த்தால், தென்னை மரம் ஆலமரம் போல கீழே எதையும் வளரவிடாது தடுக்கும் மரமல்ல என்பது தெரியவரும்.

தென்னை மரங்களுக்குக் கீழாக வேறு மரங்களை நட்டால் தொன்னோலை, தேங்காய், பாளைகள் விழுந்து அவற்றுக்குப் பாதிப்புகள் ஏற்படும். அதைவிடத் தென்னையின் நிழல் காரணமாகச் சூரிய ஒளி கிடைப்பது குறைவாக இருக்கும். ஆனாலும் தென்னை உயர்ந்தால் கீழுள்ள தாவரங்களுக்குச் சூரிய ஒளிப் பாதிப்பு ஏற்படாது. தென்னை மரம் உயர்ந்து வளர்ந்ததும் அதற்குக் கீழாகச் சிறுவேர்களை ஓடக்கூடிய மரங்களை, தாவரங்களை நாட்டிப் பயன்பெற முடியும். தவிர தென்னைகளுக்குக் கீழாக வேறு மரங்களை நடக்கூடாது என்று எவ்வித தடைகளும் இல்லை.

தற்போது நவீன விவசாயத்தில் பச்சைவீட்டு விளைவு (கிறீன் ஹவுஸ் எபெக்ட்) என்றொரு விடயம் இருக்கிறது. அதற்குச் சமமானதொரு பயனே தென்னை மரங்களுக்குக் கீழாகத் தாவரங்களை நடும்போதும் கிட்டும். இது இயற்கையான பச்சை வீட்டு விளைவும் கூட. தென்னைகளுக்குக் கீழாகச் சாதாரணமாக மரக்கறி, பூக்கன்றுகள் என நடுவதைவிட கறுவா, வாழை, அன்னாசி போன்றவற்றை நடுவது பயன்தரவல்லது. தென்னை மரங்களின் அடிப் புறத்திலிருந்து 5 அடி தூரத்தில் வாழை மரங்களை நடமுடியும். தென்னை மரத்திலிருந்து தென்னோலை விழும்போது அதன் அடி மட்டை பாரமாக இருப்பதால் மட்டை மரத்திலிருந்து கழரும்போது மட்டையின் அடிப்பாகம் தென்னையின் அடிப்புறத்திலேயே விழும். ஓலை நிலத்தில் குத்திய பின்னரே தென்னோலை ஏதோ ஒரு பக்கத்துக்குச் சாயும். கீழே வாழை மரத்தை நட்டால் அது வாழை மரத்தில் சாய்ந்திருக்குமே தவிர வாழை மரத்தை முறிக்காது. இதன்போது வாழையிலையின் மேற்பகுதி எங்காவது முறிந்தால் அதை மட்டும் வெட்டிவிட முடியும். எனவே தென்னையின் கீழ் எதுவுமே நடக்கூடாது என்பதைவிட வாழை மரத்தை நட்டு நல்ல பயனைப்பெற முடியும். ■

---

## தமிழ்த் தலைவர்கள்...

எவரும் கூறவில்லை. கிடுக்குப்பிடி பிடிக்கவில்லை. இடித்துரைக்கவும் இல்லை. மறுநாள்கூடக் கூட்டமைப்பினர் ரணிலின் கருத்தை மறுதலித்து ஊடகச் சந்திப்பு நடத்தவும் இல்லை. தந்தை செல்வா தனது கட்சி சார்பாக உறுப்பினருக்கு விட்டுச் சென்றது செய்தொழிலே தெய்வம் என்பதாகிவிட்டது. அதைச் செய்து கொண்டே நாடாளுமன்ற உறுப்பினர்களாக வலம் வந்து அவ்வப்போது அறிக்கை விட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

அதைவிட மேல் தட்டு மக்கள் மட்டுமே நாடாளுமன்றம் செல்லத் தகுதியானவர்கள் என்பதையும் வலியுறுத்தி மூத்த தலைவர்களுக்கு மூப்பு வந்தாலும் தானாக எழுந்து நடக்க முடியாவிட்டாலும் கைத்தாங்கலில் நாடாளுமன்றம் போய் வந்தால் போதும் என்பதன் மூலம் சொகுசு வாழ்க்கையையும் வசதிகளையும் சாகும்வரை தக்க வைத்துக்கொள்ளும் வழிமுறைகளையும்கூடக் கண்டடைந்திருக்கிறார்கள்..

2020 தேர்தலில் கூட்டமைப்பினர் செல்வாக்கை இழந்ததற்கும் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர், செயலர் உட்படப் பலர் தோற்கடிக்கப்படுவதற்கும் தந்தை, செல்வாவின் தூர நோக்கின்மையே காரணம். துணைவேந்தர் சிறிசற்குணராஜாவின் உரையில் தமிழ்த் தலைவர்கள் பிச்சைக்காரர்கள் அல்லர் அவர்கள் தமக்கு வாக்களித்த தமிழ் மக்களையே பிச்சைக்காரர்கள் ஆக்கிவிட்டனர் என்று ஒரு சிறு திருத்தம் செய்யவேண்யது அவசியம் ஆகிறது.



# போர்க் குற்றவாளியாக புதினுக்கு தண்டனை கிடைக்குமா?

ஏப்ரல் மாதத்தின் தொடக்கத்தில் உக்ரைனின் கீவ் மற்றும் அதன் அருகில் இருக்கும் புச்சா நகரங்களில் இருந்து ரஷ்யப் படைகள் பின்வாங்கியதும், உக்ரைன் மீதான ரஷ்ய ஆக்கிரமிப்பின் கோரமான முகத்தை இந்த உலகம் உணரத் தொடங்கியது.

புச்சா நகரத்தில் இருந்து சுமார் 410 பொதுமக்களின் உடல்களை உக்ரைனிய படைகள் கண்டெடுத்தன. கண் டெடுக்கப்பட்டவர்களின் கை,கால்கள் பின்னால் கட்டப் பட்டு, தலையில் சுடப்பட்டுக் கொல்லப்பட்டிருந்தனர். பெண் கள் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டு எரிக்கப் பட்டிருந்தனர். இந்தக் கொலை வெறியில் இருந்து குழந்தை களும் தப்பிக்க முடியாமல் போனதுதான் பெரும் சோகம்.

இந்தக் கொலைகள் குறித்து கருத்து தெரிவித்திருந்த அமெரிக்க அதிபர் ஜோ பைடன், "இந்தப் படுகொலைகள் தொடர்பாக ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின் போர்க்குற்ற விசாரணையை எதிர்கொள்ள வேண்டியது இருக்கும்" என்று கூறினார். புதினை "போர்க்குற்றவாளி" என அழை த்த பைடன், புச்சா படுகொலைகளை இனப்படுகொலை என அழைக்கவில்லை.

ஆனால், உக்ரைன் அதிபர் விளாடிமிர் ஜெலன்ஸ்கியோ, "இறந்தவர்கள் அனைவரும் இனப்படுகொலைக்கு இரை யானவர்களே, அவர்கள் (ரஷ்யர்கள்) இந்த நாடு மற்றும் மக்கள் அனைவரையும் அழித்தொழிக்க விரும்புகிறார்கள்" என்று கூறியிருந்தார்.

சில நேரத்தில் போர்க்குற்றமும் இனப்படுகொலையும் ஒரே நேரத்தில் நிகழ்த்தப்பட்டிருந்தாலும், சர்வதேச சட்டத்தின் கீழ் அவற்றுக்குள் வேறுபாடுகள் இருக்கின்றன என்பதை ஆய்வறிஞர்கள் விளக்குகின்றனர்.

'போர்க்குற்றம் என்றால் என்ன?' என்ற சிக்கலான கேள் விக்கான பதிலையும், 'விளாடிமிர் புதின் ஏன் உண்மையான, உடனடியான குற்ற விசாரணைக்கு உட்படுத்தப்பட மாட் டார்?' என்பது இங்கே விளக்கப்படுகிறது.

போர் குற்றம் என்றால் என்ன? - சர்வதேச சட்டத்தின்படி போர்க்குற்றம் என்பது நீண்ட விளக்கத்தைக் கொண்டது. இது இரண்டு நாடுகளுக்கு இடையில் நடக்கும் போர் மற்றும் அமைதிக்கான ஒப்பந்தங்களை அடிப்படையாகக் கொண்டே தீர்மானிக்கப்படுகின்றன. இந்த ஒப்பந்தங் களுக்குள் சர்வதேச சட்டங்கள் எளிதில் தனது ஆளுமையை செலுத்த முடியாது.

பொதுவாக போர்க்குற்றங்கள் என்பதை, "அதிகப்படியான அழிவு, துன்பம் மற்றும் பொதுமக்களின் உயிரிழப்பைக் குறிக்கும்" என்கிறார் மனித உரிமைகள் மற்றும் சட்ட அறி ஞரான ஷெல்லி இங்க்லிஸ். மேலும் அவர், "பாலியல் வன் கொடுமை, சித்திரவதை, கட்டாய இடப்பெயர்ச்சி போன்ற பிற நடவடிக்கைகளும் போர்க்குற்றமாக கருதப்படும்" என் கிறார்.

ஷெல்லி இங்க்லிஸ் கூற்றுப்படி, ரஷ்யா நீண்ட போர்க்குற்ற வரலாற்றைக் கொண்டிருக்கிறது. குறிப்பாக, சிரியாவில் நடந்த போரில் ரஷ்யா நேரடியாகவே பொது மக்கள் மீது தாக்குதல் நடத்தியது. அதைப்போலவே ஜோர் ஜியா மற்றும் கிரீமியாவில் நடந்த மோதல்களிலும் நடந்து கொண்டது.

உக்ரைனில் இனப்படுகொலை மற்றும் போர்குற்றங்களில் ஈடுபடுகிறாரா புதின்? - "ரஷ்யா நேரடியாக பொதுமக்களைத் தாக்கிக் கொலை செய்வதன் மூலம் போர்க்குற்றங்களைச் செய்கிறது என்பதற்கு தெளிவான சான்றுகள் உள்ளன" என்கிறார் மனித உரிமைகள் மற்றும் இனப்படுகொலைகள் தொடர்பான ஆய்வறிஞர் அலெக்சாண்டர் ஹின்டன்.

மாசி மாதம் 24ஆம் நாள் உக்ரைன் மீது தாக்குதல் நடத் தத் தொடங்கிய ரஷ்ய படைகள், சுமார் ஆயிரத்து 417 பொதுமக்களை கொலை செய்தும், 2 ஆயிரத்து 38 பேரைக் காயப்படுத்தியும் இருக்கும் என்று ஐக்கிய நாடுகள் சபை மதிப்பிட்டுள்ளது.

"ஒரு தேசிய, கலாசார, மதரீதியான இனக்குழுக்களை பகுதி யாகவோ, முழுவதுமாகவோ அழித்தொழிப்பதே இனப்படு

53

ஐயங்கொண்டான் சுவாமிகள்

# எமையறிதல்



எந்தவொன்றுக்கும் ஆசைப்படுகின்றோம். அது என்ன? எனக்கும் அதற்குமான தொடர்பென்ன? எனக்கது தேவைதானா? என்கிற எந்தவொரு தீர்மானத்துடன்தான் அலைகின்றோமா? எதற்காக என்றோ ஏன் என்றோ கேள்வி எதுவுமேயற்ற இலக்கற்ற போக்கில் அலைகிறோம். இறுதியில் எல்லாம் முடிந்துவிட்டது என்ற நிலையில் ஓய்ந்து விழுந்து போகிறோம். முடிவு என்பதே கற்பனைதான். அப்படியெனில் வாழ்க்கைக்கு முடிவு இல்லையா? மறுபிறப்பென்பது உண்மையா? சாகாவரம் என்கிற ஒன்று உள்ளதா?

வாழும்போது தேவைகளைச் சுருக்குதல் என்பதை எந்தளவிற்கு விளங்கி வைத்திருக்கிறோம்? ஆசைகளைக் குறைத்தல் துறத்தல் என்பன தொடர்பான எமது விளக்கம் என்ன? தேவை என்பதும் ஆசை என்பதும் ஒன்றா? வேறுவேறானதா? எப்போதாவது எண்ணியிருக்கிறோமா? தேவை இன்றி யமையாதது. தேவைக்கு மேலதிகமானதே ஆசை.

வாழ்வதற்கான அடிப்படை தேவை. உடல் மனம் இரண்டுமே நல்ல நிலையில் இயங்குவதற்கானது தேவை. ஆனால் மனம் என்பதனது நிலையில் ஆசை உருக்கொள்கிறது. பசி என்கிற ஓர் உணர்வானது உணவினால் நிறைக்கப்படக்கூடியது. அது உடல் சார்ந்தது. உணவு எத்தகையது என்பதை மனம் தீர்மானிக்க முயலும்போதுதான் பிரச்சனை உருவாகிறது. பசிக்கு சோறு போதுமானது. மனம் புரியாணியைக் கேட்கிறது. சோறு தேவை. புரியாணி ஆசை.

குளிர்சாதனப்பெட்டி என்பதை ஒரு எடுத்துக்காட்டாக எடுத்தால் எஞ்சிய உணவைப் பழுதடையாது பேணி அடுத்தவேளை உண்ணுவதற்காக பயன்படும்போது தேவையாக இருக்கிறது. ஐஸ்கிறீமை வைத்துப் பேணுதல் ஆசை அல்லது ஆடம்பரம். எமது தெரிவுதான் முக்கியமாகிறது. ஆசை நல்லதா கெட்டதா? கெட்டது என்றே எமது மரபணுவில் புகுத்தியிருக்கிறது ஆன்மீகம். ஆசையைத் துற என்கிற ஆன்மீகம்தான் இறைவன் திரு வடியடைதல் சொர்க்கம் சேர்தல் என்றும் ஆசை காட்டுகின்றது. இது குறித்து எப்போதாவது எண்ணியிருக்கிறோமா?

ஆசை என்பதைத் துறந்துவிட்டு எதைத்தான் சாதிக்கப்போகிறோம்? ஆசைக்கு எல்லையிடுவதில் கவனம் செலுத்துவதைப் பற்றிக் அக்கறைப் படாமல் ஆசையைத் துற என்று அடக்க முயல்கிறோம். ஆசை எதிர் தேவை என்பதை சரிவர விளங்கிக் கொள்வோமானால் பிரச்சினைகளைத் தவிர்க்க முடியும். தேவை என்பதை அடைவதற்கான உந்துதலை ஆசை என்பதனது துணையின்றி மேற்கொள்ள முடியுமா?

எந்வொரு தேவையையும் ஈடுசெய்ய முயற்சி என்கிற ஒன்று கட்டாயமானது. தேவை என்கிற இலக்கு நோக்கிய எத்தனிப்பிற்கு இலக்கு மீதாக ஆசைப்படுதல் தவிர்க்கப்பட்டால் முயற்சியில் ஒரு நம்பிக்கை ஏற்படுமா? உத்வேகம் ஏற்படுமா? இலக்கு எப்படி கைக் குக் கிட்டும்? அப்படியே கிட்டியிருந்தாலும் எதிர்பார்த்தவாறான விளைவை ஏற்படுத்தியிருக்குமா? அப்படியான நிலைதான் அங்கலாய்ப்பாக மாறிவிடுகிறது. நிம்மதி என்று அலைகிற மாயமான் கைக்குக் கிட்டுமா? அண்மித்தாவது வருமா?

ஆக ஆசை துறத்தல் என்கிற ஒரு விடயமே ஏமாற்று வித்தைதான். ஆசைகளைக் கட்டுப்படுத்துதல் அல்லது மட்டுப்படுத்துதல் என்கிற விடயத்தில் கவனமெடுக்கலாம். ஏனெனில் இயல்புக்கோ யதார்த்த தத்துக்கோ உட்படாத ஆசைகள் அனேகமாக எதிர் விளைவுகளையே தந்துவிடக்கூடும் என்பதை நினைவிற்கொள்வது அவசியம். நான் என்கிற விடயம் போலவேதான் ஆசை என்பதும். நியாயமற்ற அல்லது யதார்த்தமற்ற போதனைகளால் குழப்பப்பட்டிருக்கிறோம் என்பதே உண்மையானது.

ஆசைப்படுதல் என்பது தவறல்ல என்பது மட்டுமல்ல ஆசையானது தேவையை மட்டுமே போதியளவில் நிறைவுசெய்யும் வகையிலேயே அமையவேண்டும் என்பதும் உண்மையே. இதனை நாம் மனங்கொள்ள வேண்டுமெனினும் மனம் என்கிறதுதான் எல்லாமே. ஆசையெது தேவையெது என்கிறதை வகை பிரிப்பதற்கு முடியாது மனம் தடுமாறுகிறது. கடந்தகால அடைசல்களால் நிறைக்கப்பட்ட மனதால் வேறெதைத்தான் செய்ய முடியும்?

மனதைத் துப்புரவாக்கும் பணியே தேவையாக உள்ளது. மனம் சுயமாக யதார்த்தமாக சிந்திக்கவும் செயல்களை முன்னெடுக்கவும் ஆசைப்படுவதும் முயற்சியெடுப்பதும் தவிக்கப்படலாமா? சிந்திப்போம்.

---

## போர்க் குற்றவாளியாக...

கொலை என்றால், இனப்படுகொலையில் ரஷ்யா ஈடுப்பட்டுள்ளதற்கான அறிகுறிகள் உள்ளன" என்கிறார் ஹிண்டன். ரஷ்யா செய்துள்ள பெரிய அளவிலான மனித உரிமை மீறல்களின் வரலாறு இனப்படுகொலைகளுக்கான முன்னறிவிப்பேயா கும். உள்நாட்டு அரசியல் எழுச்சி, எதிரிகளை கொடூரமானவர்களாகச் சித்தரித்து, இனப்படு கொலையை நியாயப்படுத்தும் பரப்புரை ஆகியவை இனப்படுகொலைக்கான இன்னபிற அறிகுறிகள். இந்த அனைத்து வகையிலும் நடவடிக்கைகளை ரஷ்யா மேற்கொண்டுள்ளது.

ரஷ்யா இனப்படுகொலை நடவடிக்கையில் ஈடுபட்டதா? - "குழந்தைகள் உள்பட ஆயிரக்கான உக்ரைனியர்களை ரஷ்யா வலுக்கட்டாயமாக தனது நாட்டிற்கு கடத்தியது. பொதுமக்கள் மீது குறிவைத்து தாக்கியிருக்கிறது. ஒரு மகப்பேறு மருத்துவமனையை குண்டு வீசித் தாக்கியுள்ளது" என்கிறார் ஹிண்டன்.

உக்ரைனில் ரஷ்யா இனப்படுகொலை நிகழ்த்துவதற்கான ஆபத்துக்கள் நிறைய உள்ளன. அல்லது, அங்கு ஏற்கெனவே இனப்படுகொலையைத் தொடங்கியிருக்கலாம்.

போர்க்குற்றத்திற்காக புதின் தண்டிக்கப்படுவாரா? - உக்ரைனில் போர்க்குற்றங்கள் நிகழ்த்தியதற்காக, புதின் சிறைதண்டனை அனுபவிப்பதோ, அதிகாரத்தில் இருந்து தூக்கி எறிப்படுவதோ உடனடியாக நடந்துவிடாது. காரணம், சர்வதேச அளவிலான போர்குற்ற நடவடிக்கைகளை விசாரிக்க மூன்ற சட்ட அமைப்புகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

அவை: சர்வதேச நீதிமன்றம், சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் மற்றும் சிறப்பு சர்வதேச போர் தீர்ப்பாயங்கள்.

கடந்த காலங்களில் அரசியல் தலைவர்கள் நிகழ்த்திய போர்க் குற்றங்களை விசாரித்து, அவர்களுக்கு தண்டனையையும் இந்த அமைப்புகள் வழங்கியுள்ளன. இதில் லிபிரியாவின் முன்னாள் அதிபர் சார்லஸ் டைலருக்கு வழங்கப்பட்ட தண்டனையும் அடங்கும்.

அரசியல் அறிவியல் அறிஞர்களான ஜோசப் ரைட் மற்றும் ஏபெல் எஸ்க்ரிபா, "இந்த மூன்று அமைப்புகளின் மூலம் ஒருவர் மீதான குற்றச்சாட்டை நிரூபிப்பது என்பது நம்ப முடியாத அளவிற்கு கடினமானதாகவும், நேரம் எடுத்துக்கொள்வதாகவும் இருக்கும். உக்ரைனில் புதினின் நடவடிக்கைளின் மீது இந்த மூன்று சர்வதேச அமைப்புகளும் பெரிய தாக்கத்தை ஏற்படுத்த முடியாது" என்கின்றனர் இருவரும்.

புதின் மீது நடவடிக்கை எடுக்கப்படாது என்பதற்கான முக்கியமான காரணம், சர்வதேச நீதிமன்றம் அரசுகளின் நடவடிக்கைகளில்தான் கவனம் செலுத்துகிறதே தவிர புதின் மாதிரியான தனிப்பட்ட தலைவர்களின் மீது இல்லை.

மற்றொரு காரணம், சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் ரஷ்யா உறுப்பினர்களாக இல்லை. அதனால், அதன் அதிகார வரம்பு ரஷ்யாவின் மீது ஆதிக்கம் செலுத்த முடியாது. மேலும், சர்வதேச நீதிமன்றத்திற்கெனத் தனியான காவல் படை இல்லை என்பதால், குற்றஞ்சாட்டப்பட்டவர்களை விசாரணைக்காக நீதிமன்றத்திற்கு அழைத்து வர மற்ற நாடுகளின் உதவியையே அவை நாட வேண்டியிருக்கிறது.

"புதின் ஆட்சியில் நீடிக்கும் பட்சத்தில், அவரைக் கைது செய்வது என்பது ஒருபோதும் நடக்காது" என்று கூறும் ரைட் மற்றும் ஏபெல் எஸ்க்ரிபா, "புதினை ஒரு போர்க்குற்றவாளி என்று அழைப்பதும், அவர் மீது போர்க்குற்றம் சுமத்துவதும் பொதுமக்கள் மீதான தாக்குதல்களை தடுக்கத் தவறிவிடும் என்பதற்கும் சில சான்றுகளும் உள்ளன. ஒரு மோதல் முடிவுக்கு வந்தவுடன் தண்டனையின் வாய்ப்புகளை எதிர்பார்த்துக் காத்திருக்கும் தலைவர்கள், மீண்டும் சண்டையை நீடிக்க ஓர் ஊக்கத்தைப் பெறுகிறார்கள். அட்டூழியங்களுக்குத் தலைமை தாங்கும் தலைவர், தான் பதவியை விட்டு வெளியேற்றப்படுவதை தவிர்ப்பதற்காக, முன்பைவிட மிருகத்தனமான வழிமுறைகளையும், அதிகமான அட்டூழியங்களையும் பயன்படுத்துவதற்கான வலுவான உந்துதலை கொண்டிருப்பார்" என்கிறார்கள்.

போம்பியூ ஃபபிரா பல்கலை.யின் அரசியல் மற்றும் சமூக அறிவியல் இணைப்பேராசிரியர் ஏபெல் எஸ்க்ரிபா ஃபோல்ச், நெவார்கிலுள்ள ரட்ஜர்ஸ் பல்கலை.யின் மானுடவியல் துறை பேராசிரியர் மற்றும் இனப்படுகொலை மற்றும் மனித உரிமைகள் ஆய்வு மையத்தின் இயக்குநர், அலெக்சாண்டர் ஹிண்டன், பென் மாநிலத்தின் அரசியல் அறிவியல் பேராசிரியர் ஜோசப் ரைட் மற்றும் டேட்டன் பல்கலைக்கழகத்தின் மனித உரிமைகள் மையத்தின் நிர்வாக இயக்குநர் ஷெல்லி இங்லிஸ் ஆகியோரிடம் 'தி கான்வர்சேஷன்' அரசியல் மற்றும் சமூகம் பகுதிக்கான செய்தி ஆசிரியர் எமி லிபெர்மன் எடுத்த பேட்டியின் தமிழ் வடிவம் இது.




# த லோங் குட்பாய்

2020ஆம் ஆண்டில் வெளியாகிய குறும்படம் "த லோங் குட்பாய்". அனைல் கரியா இதை இயக்கியிருக்க, ரிஷ் அஹமட், நிக்கிதா ஷாதா, ரிஷ் ஷாத், அம்ரீன் ரஷியா, சுதா பஷர், அஷ் மரா ஹப்ரில்லா உள்ளிட்ட பலர் நடித்தி ருக்கிறார்கள். ஒஸ்கார் விருதை வென்ற சிறந்த குறும்படமான அது பலரது கவனத்தையும் பெற்றது.

**கதை**

லண்டனின் வெம்ளி பகுதியில் ஆசியக் குடும்பம் ஒன்று திருமண நிகழ்வுக்காகத் தயாராகிக் கொண்டிருக்கிறது. வீடே பரப்பரப்பாக இயங்கிக்கொண்டிருக்க, அந்த இரைச்சல்களுக்கு இடையே சிறுவன் நாஸும், ரிஸ்வானும் (ரிஷ் அகமத்) நடனம் ஆடிக் கொண்டிருக்கிறார்கள். இதைக் கண்ட வீட்டிலிருந்த பெரியவர்கள் சத்தம் போட, வீட்டைச் சுத்தம் செய்வதற்கான பணியில் இறங்கிய ரிஷ்வானும், நாஸும் அந்த வீட்டின் ஹோலை அடைத்துக் கொண்டிருந்த பெரிய நாற்காலியை மேலே எடுத்துச் செல்ல முடிவு செய்கிறார்கள். குறுகிய படிக்கட்டுகளின் வழியே ரிஷ்வான் நாற்காலியைத் தூக்கிக் கொண்டுச் செல்ல, "உங்களுக்கு எல்லாம் ஒரு சர்ப்ரைஸ்" என்று மணப்பெண்ணின் அறையை நாஸ் திறக்கிறான். மாடியிலுள்ள அந்த அறைதான், அந்த வீட்டின் பெரிய அறை. கையில் நாற்காலியுடன் ரிஷ்வானைப் பார்த்ததும் "இங்கு இடமில்லை, நாற்காலியை இங்கு வைக்க முடியாது... வேறு இடத்துக்கு எடுத்துச் செல்லுங்கள்" என்று அங்கிருந்தவர்கள் கூற, ரிஷ்வானோ "இதுதான் இந்த வீட்டின் பெரிய அறை... இங்கேயே வைக்க முடியாதா?" என்று கடிந்துகொண்டு அருகிலுள்ள அறைக்கு நகர்கிறான்.

சிறுவன் நாஸ் அருகே இருந்த சிறிய அறையில் நாற்காலிக்கான இடத்தை ஏற்படுத்திக் கொடுக்க, ரிஷ்வான் அந்த நாற்காலியை அங்கு வைக்கிறான். அப்போது அந்த அறையின் ஜன்னல் வழியே பெரும் அலறல் சத்தமும், துப்பாக்கிச் சூடும் கேட்கிறது. ரிஷ்வான் ஜன்னலை எட்டிப் பார்க்கிறான். உடனே சிறுவன் நாஸைக் கீழே 'போ' என்று ரிஷ்வான் கத்தும் நொடியிலேயே ஒரு பெரிய வான் வேகமாக தனது வீட்டுக்கு முன் வந்து நிற்பதை ரிஷ்வான் பார்க்கிறான்... அந்த நொடியிலிருந்து எல்லாமே மாறுகிறது..! அதற்குப் பிறகு என்ன அசம்பாவிதங்கள் நடந்தன என்பதுதான் கதை.

**சிறுவன் நாஸ் அருகே இருந்த சிறிய அறையில் நாற்காலிக்கான இடத்தை ஏற்படுத்திக் கொடுக்க, ரிஷ்வான் அந்த நாற்காலியை அங்கு வைக்கிறான். அப்போது அந்த அறையின் ஜன்னல் வழியே பெரும் அலறல் சத்தமும், துப்பாக்கிச் சூடும் கேட்கிறது**

**இயக்கமும் நடிப்பும் கதைக்கருவும்**

அனைல் கரியா இயக்கி, ரிஷ் அகமத் எழுதி நடித்த இந்தக் குறும்படம் 12 நிமிடங்க ளையுடையது. தொடங்கி முடியும் வரை அனைத்துக் காட்சிகளும் பரப்பரப்பாகச் செல்கின்றன. கதையின் எழுத்தாளர் பாகிஸ்தான் - பிரிட்டன் கலப்பு என்பதால் பாகிஸ்தான் - இந்தியக் கலாச்சாரம் படத்தில் பிரதிப்பலிக்கிறது. இதனால், படம் கலாச்சார ரீதியாக நெருக்கத்தை ஏற்படுத்துகிறது. படத்தில் பிரிட்டனைச் சேர்ந்த பாகிஸ்தான் மற்றும் இந்திய வம்சாவளிகள் இணைந்து நடித்துள்ளனர்.

பிரிட்டனில் நிலவும் வலதுசாரி இனவெறியால் எவ்வாறு ஆசிய - பிரிட்டன் மக்கள், பாதிக்கப்படுகிறார்கள், பிளவுபடுத்தப்படுகிறார்கள், அவர்களின் வாழ்க்கை எவ்வாறு கேள்விக்குட்படுத்தப்படுகிறது என்பதெல்லாம் பரப்பரப்பான காட்சிகள், இசை, பாடல் வழியே பார்வையாளர்களுக்கு கடத்தப்பட்டுள்ளது.

படத்தின் இறுதிக் கட்டத்தில் காலில் குண்டடிப்பட்டு வீதியில் சரிந்து கிடக்கும் ரிஷ்வானிடம், "நீங்கள் எங்கிருந்து வந்திருக்கிறீர்கள்?" என்று ஒரு குரல் கேட்கும். அந்தக் குரலுக்கு ரிஷ்வான் அளிக்கும் பதில்தான் பார்வையாளர்களுக்குக் கூறும் வலுவான செய்தி. அந்தக் காட்சியில் "நீங்கள் ஏன் என்னை வெறுக்கிறீர்கள்?" என்று நாடற்றவர்களின் குரலாக ரிஷ்வானின் குரல் இருக்கும்.

மதத்தால், நிறத்தால், இனத்தால், பாலினத்தால் உலக முழுவதும் பிளவுகள் அரங்கேறிக் கொண்டிருக்கிறது. இந்தப் பிளவுகளால் ஒவ்வொரு நாளும் வன்முறைகள் அப்பாவி மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்படுகின்றன. இந்தச் சூழலில் 'தி லாங் குட்பை' போன்ற குறும்படங்களுக்கு ஒஸ்கர் போன்ற உலக அரங்கில் அங்கீகாரம் கிடைத்தது வரவேற்புக் குரியது. இங்கே குறிப்பிட்டவற்றைத் தாண்டி பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய உள்ளடக்கத்தைக் கொண்டது இந்தக் குறும்படம்.



# புலிகளே முதன் முதலில் மல்டி பரல் பாவித்தார்கள்

**கமலநாதன்**

சமரக்கோன் பண்டா. இவர் திருகோணமலை தம்பலகாமத்தைச் சேர்ந்தவர். 1995ஆம் ஆண்டு இலங்கைத் தரைப்படையில் இணைந்தார். பல்வேறு தாக்குதல்களில் பங்கெடுத்த இவர் போரில் தனது கால் ஒன்றை இழந்தவர். ரஜ யூரி யூப் தளத்தில் தனது அனுபவங்களைப் பதிவு செய்திருக்கிறார் அவர்.

நான் தம்பலகாமத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவன். 1984க்குப் பின்பான காலப்பகுதியில் எமது கிராமத்தவர்கள் பலரைப் புலிகள் கொன்றார்கள். இவர்களில் பலர் வாள்களாலும் கூரிய ஆயுதங்களாலும் தாக்கப்பட்டுக் கொல்லப்பட்டனர். நான் மாணவனாக இருந்த காலத்தில்



மாலை 6 மணிக்கு முன்னதாக இரவுச் சாப்பாட்டைச் சமைத்து எடுத்துக்கொண்டு ஊர் மத்தியில் ஓரிடத்தில் இரவைக் கழிப்போம். முழு மக்களும் தமது பாதுகாப்புக்காக அங்கேயே இருப்பர். எங்கள் வீடுகளில் படுத்தால் புலிகள் வந்து கொல்வார்கள் என்ற பயம் இருந்தது. அவ்வாறு தங்கியிருந்த ஒருசிலர் புலிகளால் கடத்திச் செல்லப்பட்டுக் கொல்லப்பட்டார்கள். எனது உறவுக்காரர்கள் பலரை நான் இவ்வாறு இழந்திருக்கிறேன். இதில் எனது பாடசாலை அதிபரையும் இழந்தேன். இந்தச் சம்பவம் என்னை மிகவும் பாதித்தது. அதன் பின்னரே படையில் சேர வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது.

1995இல் ரஜபா படைப்பிரிவில் இணைந்தேன். மாதுரு ஓயா படை முகாமில் வைத்துப் பயிற்சி வழங்கப்பட்டது. அங்கு சென்றபின்னர்தான் படையில் பல்வேறு பிரிவுகள் இருப்பதை அறிந்து கொண்டேன். நான் எனது விருப்பின்பேரில் காலாற் படையில் இணைந்துகொண்டேன். இந்தப் படையணியின் வேலை தொடர்ந்து போரிடுவது மட்டுமே. எமக்கு 3 மாதப் பயிற்சி முடிந்த பின்னர் யாழ்ப்பாணம் படை நடவடிக்கைக்கு அனுப்பப்பட்டேன். எனது முதல் கடமைக்கான பகுதி குப்பிளான், சுன்னாகம் பகுதிகள். அங்கு பணியாற்றியபோது புலிகள் படையினரின் சீருடையை அணிந்தவாறு படையினரைப்போல வந்து தாக்குவார்கள். புலிகள் திடீரென எமது படை யணிகளைச் சுற்றி வளைப்பார்கள். இத்தகைய தாக்குதல்களை எதிர்கொண்டபோது ஒரு சமயம் ஏறத்தாழ தொலைந்துவிட்டோம். எங்கு போவது எத்திசையில் போகிறோம் என்று கூடத் தெரியாதிருந்தது. தொடர்புகளின்றியும் உணவு, தண்ணீர் இல்லாமலும் இருந்தோம். எங்காவது கிடைக்கின்ற அழுக்கு நீரை எம்மி டமிருந்த சுத்திகரிப்பு மாத்திரையை இட்டுக் குடித்தோம். 3ஆம் நாள் இரவு 3 மணியளவில் புலிகளின் அரண் ஒன்றை உடைத்து வெளியேறினோம்.

**ஆணையிறவுத் தாக்குதல்**

ஆணையிறவுப் படை முகாம் தாக்குதலின் போது மீட்பு நடவடிக்கைக்காகச் சென்றோம். இந்தத் தாக்குதலை நன்கு திட்டமிட்டு அதிகாலை 3 மணிக்கு தொடங்குவது என்று தீர்மானிக்கப்பட்டது. அன்றைய தினமே இரவு ஒரு மணி யளவில் புலிகள் தாக்குதலைத் தொடங்கினார்கள். நான் இரண்டு பனை மரங்களுக்கிடையில் எல்.என்.பி துப்பாக்கியுடன் முதன்மை வீதியைக் குறுக்கறுக்கும் புலிகளைச் சுட்டேன். அவர்கள் நானிருக்கும் இடத்தை அடையாளம் கண்டு ஜி.பி.எம் துப்பாக்கியால் தாக்கினார்கள். அப் போது எனது தோளின் மேலிருந்த பையில் சூடு பிடித்தது. என்னிடமிருந்த உணவுப்பொருள் கள், அத்தியவசியப் பொருள்கள் சிதறின. நூலிழையில் உயிர் தப்பினேன்.

**புலிகள் மல்டி பரல் அடித்தார்கள்**

அப்போதெல்லாம் படையினரிடம் ஆட்லறி எறிகணை மாத்திரமே இருந்தது. அதன் தாக்கம் எவ்வாறு இருக்கும் என்பது எமக்குத் தெரிந்திருந்தது. ஆட்லறி எறிகணை ஏவும் முதல் சத்தம் கேட்டுச் சற்றுநேரம் கழித்து உரிய இடத்தில் விழுந்து வெடிக்கும். ஆனால் இந்தப் போரில் ஆட்லறியைவிடச் சற்று வித்தியாசமான சத்தம் கேட்டது. பின்னர்தான் எமக்குத் தெரிய வந்தது அது மல்டி பரல் தாக்குதல் என்று. இந்தத் தாக்குதலை முதன்மை வீதியின் இருமருங்கிலும் புலிகள் மேற்கொண்டார்கள். அதனால் சற்றும் எதிர் பாராமல் படையினரில் அதிகம் பேர் இறந்தார்கள்.

2 ஆயிரமாம் ஆண்டில் விஜயபா படையணியில் அதிக சிப்பாய்கள் இறந்தார்கள். அதற்குக் காரணம் புலிகளிடமிருந்த மல்டி பரல் ஆயுதமே.

**அளம்பில் தாக்குதல்**

அளம்பில் பகுதியில் 14ஆவது விஜயபா படையணியில் சேவையாற்றியபோது எனக்குக் காயம் ஏற்பட்டது. காயமடைந்த அன்றைய தினம் காலையிலேயே எனக்கு மனதில் குழப்பமான நிலையிருந்தது. அன்று காலை நான் சாப்பிடவும் இல்லை. இளநீர் ஒன்றைக் குடித்துவிட்டு இருந்தேன். புலிகள் பிக்கப் வாகனம் ஒன்றில் எமது காவலரணுக்கு அருகில் வரும் சத்தம் கேட்டது. நாமிருந்த பகுதியில் தாக்குதலை நடத்தினார்கள். நாம் எதிர்த் தாக்குதலை நடத்தியபோது தூரத்திலிருந்து மல்டி பரல் அடித்தார்கள். ஒரு பலா மரத்தில் பட்டுவந்த குண்டொன்று எனது காலிலும் பட்டது. காலின் கீழ்ப்பகுதி சாப்பாத்துடன் தொங்கிக் கொண்டிருப்பதைக் கண்டேன். உடனேயே பல கிலோ மீற்றர் தூரம் காடுகளுக்கூடாகக் காவிச் சென்று முதலுதவி செய்துவிட்டு அனுராதபுரம் படை மருத்துவமனைக்கு அனுப்பினார்கள். பின்னர் ராகம மருத்துவமனைக்கு மாற்றப்பட்டேன். அங்கு எனது கால் துண்டிக்கப்பட்டது. தற்போது ஓய்வுநிலையில் வாழ்கிறேன்.

இந்தப் போரில் ஆட்லறியைவிடச் சற்று வித்தியாசமான சத்தம் கேட்டது. பின்னர்தான் எமக்குத் தெரிய வந்தது அது மல்டி பரல் தாக்குதல் என்று. இந்தத் தாக்குதலை முதன்மை வீதியின் இருமருங்கிலும் புலிகள் மேற்கொண்டார்கள். அதனால் சற்றும் எதிர் பாராமல் படையினரில் அதிகம் பேர் இறந்தார்கள்

## நெருக்கடிக்குத்...

நெருக்கடி நிலையிலும் நாடாளுமன்றத்தில் வழக்கம் போல அரசியல் பேசப்படுகின்றதே தவிர நெருக்கடியிலிருந்து வெளிவருவதற்கான யோசனைகளோ தீர்வுகளோ முன்வைக்கப்படாமை கவலையளிக்கின்றது என்று சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன வியாழக்கிழமையன்று தெரிவித்தார்.

நடந்து முடிந்த நாடாளுமன்ற அமர்வுகளில் இந்த ஆட்சியும் அரச தலைவரும் பதவி விலகவேண்டும் என்கிற கோரிக்கையையே எதிர்க் கட்சிகள் கடுமையாக வலியுறுத்தின. அதற்குப் பதிலிறுத்து தாம் பதவி விலக முடியாது என்கிற நிலைப்பாட்டை ஆட்சித் தரப்பினர் கூச்சலிட்டனர்.

இன்றைய நெருக்கடிகளுக்குக் காரணமான அரச தலைவர் பதவி விலகினால் மட்டுமே பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற் கான ஆட்சியாளர்களின் முயற்சிகளுடன் சேர்ந்து ஒத்துழைக்க முடியும் என்று ஜேவிபி வலியுறுத்தியது.

அரச தலைவர் ஆட்சிமுறையை உடனடியாக ஒழித்துவிட்டு நாடாளுமன்றத்தின் ஊடாகத் தீர்வைத் தேடலாம் என்று ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்தியது.

நாட்டின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணாமல் இந்த நெருக்கடியில் இருந்து மீள முடியாது என்பதால் அதற்கான முழு முயற்சிகளையும் மேற்கொள்ளவேண்டும் என்று தமிழ்க் கட்சிகள் வலியுறுத்தின.

எந்தவொரு கட்சியும் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கான திட்ட வரைவுகளையோ, யோசனைகளையோ முன்வைக்கவில்லை.

## இலங்கைக்கு...

பொதுத் தொண்டுகளுக்கு வழங்குவது இவரது வழக்கம். கொரோனா பெருந்தொற்றுக் காலத்தில் இவர் பல தடவைகள் அரசு உதவி நிதிக்குத் தன்னிடம் இருந்த பணத்தையெல்லாம் வழங்கியிருக்கிறார்.

இவ்வாறு அவர் வழங்கிய தொகை மட்டும் இந்திய மதிப்பில் 4 லட்சத்துக்கும் அதிகம் என்று மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் தெரிவிக்கின்றது. இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி பற்றி அறிந்த பூல்பாண்டி தற்போது தன்வசம் இருந்த 20 ஆயிரம் ரூபாவை இலங்கையில் பாதிக்கப் பட்டுள்ள மக்களுக்கு வழங்குமாறு கூறி மதுரை மாவட்ட ஆட்சியரிடம் கையளித்துள்ளார்.

# 2048ஆம் ஆண்டுடன் உலகின் எந்தக் கடலிலும் ஒரு மீன்கூட மிஞ்சாது

தெய்வி


நம்மில் அநேகர் கடல் உணவு உண்பவர்கள். அதிலும் நான்கு பக்கங்களும் கடலால் சூழப்பட்ட இலங்கைத் தீவின் மக்களில் பலருக்கும் நாளாந்தம் மீன் இல்லாமல் உணவு உள்ளே இறங்காது. அதிலும் வடக்கு, கிழக்கில் தமிழர்கள் வாழும் பகுதிகளில் மீன்பிடி கணிசமான மக்களின் தொழிலாகவும் உள்ளது.

இலங்கைக் கடல் எல்லைக்குள் யார் மீன்பிடிக்க முடியும் என்கிற பிரச்சினை இந்தியர்களுக்கும் இலங்கையர்களுக்கும் இடையே நீண்டகாலமாகவே இருந்து வருகின்றது. சீனர்களுக்கும்கூட இங்கே மீன்பிடிப்பதற்கு அனுமதி வழங்கப்படுகின்றது. இருந்தாலும் மீன்பிடிப் பிரச்சினை தீர்ந்தபாடில்லை. அதற்குக் காரணம் உலகம் முழுவதும் உள்ள மீனுக்கான கேள்விதான்.

மனிதனின் மீன் தேவைக்காகக் கடல் எப்படியெல்லாம் கொள்ளையடிக்கப்படுகின்றது என்பதை பட்டவர்த்தனமாக வெளிப்படுத்தி வந்திருக்கின்றது சீஸ்பரஸி (SEASPIRACY) என்கிற ஆவணப் படம். நெட்பிளிக்ஸ் இணையத் தளத்தின் வெளியீடாக வந்துள்ள இந்தப் படத்தைப் பார்த்தால் தொண்டைக்குள் பெரியதொரு மீன் முள் மாட்டிக்கொண்ட அவஸ்தை ஏற்படுகின்றது.

அப்படியொரு அதிரவைக்கும் ஆவணப்படத்தை எடுத்து வெளியிட்டிருக்கிறார் பிரித்தானிய ஆசாமி அலி தப்ரிஸி (ALI TABRIZI).

ஏகப்பட்ட தகவல்கள், பல கடல்களில் - கப்பல்களில் என்று ஒடித்திருந்து மேற்கொண்ட ஆராய்ச்சிகள், பொது அமைப்புக்கள் - அரச அமைப்புக்கள் என்று பலவற்றை நேரில் சென்று நாக்கைப் பிடுங்குவதுபோல கேட்ட கேள்விகள் என்று பரந்துபட்ட ஆதாரங்களை சேகரித்துவந்து, "இதோ பாருங்கள், இனியும் நீங்கள் இந்த மீனை சாப்பிடத்தான் போகிறீர்களா" - என்று, கோப்பைக்குள் வைத்த கையை பிடித்துவைத்து கேள்விகேட்பதுபோல இந்த ஆவணப்படத்தை தயாரித்திருக்கிறார்.




## திகிலை ஏற்படுத்தும் ஆவணப்படம்

சீஸ்பிரசி (SEASPIRACY) ஆவணப்படத்தின் அடிநாதம், வர்த்தக மீன்பிடிக்காக (COMMERCIAL FISHING) கொள்ளையடிக்கப்படுகின்ற கடல் வளங்களும் மனித குலம் கடலின் காலனாக மாறியிருப்பதும் பற்றியது.

இது அநேகரால் காலத்துக்குக் காலம் ஓதப்படுகின்ற விடயம்தானே என்று பலர் எண்ணலாம். ஆனால், இந்த ஆவணப்படம் நடு உச்சியில் நச் சென்று அடித்திருக்கின்ற தகவலில் முக்கியமானது, தற்போதைய வர்த்தக மீன்பிடியானது, உலகளாவிய ரீதியில் இப்படியே போய்க்கொண்டிருந்தால், 2048 ஆம் ஆண்டுடன் உலகின் எந்தக்கடலிலும் ஒரு மீன்கூட மிஞ்சாது என்பது.

இது நம்பமுடியாத தகவல்தான். ஆனால், பல்வேறு ஆதாரங்களுடனும் சேகரித்த தகவல்களுடனும் கடல்சார் நிபுணர்களின் துயரமான எதிர்கூறல்களுடனும் இந்த விடயங்களை முன்வைக்கிறார் ஆவணப்பட இயக்குனர்.

வணிக ரீதியான மீன்பிடியில் வெறிகொண்டுள்ள தற்போதைய உலகம், இப்போது ஆண்டொன்றுக்கு இரண்டு லட்சத்து எழுபதினாயிரம் கோடி மீன்களை பிடித்துத் தின்கிறது. இன்னொரு வகையில் சொல்லப்போனால், நிமிடமொன்றுக்கு ஐம்பது லட்சம் மீன்கள் சட்டிக்குப்போகின்றன. உலகின் எந்தத்துறையிலும் இவ்வளவு கொடூரமான எண்ணிக்கையில் எந்த உயிரினமும் கொலைசெய்யப்படுவதில்லை என்கிறார்கள் சூழலியல் ஆய்வாளர்கள்.

பிளாஸ்திக் மற்றும் ஏகப்பட்ட கழிவுப்பொருட்களால் கடலை சாக்கடையாக்கி, நினைத்துப்பார்க்க முடியாத அளவுக்கு, கடலுயிரிகளை அடியோடு அழிக்கின்ற மனிதன், பிளாஸ்திக்கினால் சூழல் மாசுபடுவதாக மாத்திரம் அழுகுணியாட்டம் போட்டுக்கொண்டிருந்தாலும், அதைவிட, வணிக ரீதியான மீன்பிடியினால்தான் அதிகம் கடலை அழித் துத்தொலைக்கிறான் என்று விம்முகிறார்கள் கடற் பாதுகாப்பின் மீது கரிசனை கொண்ட ஆராய்ச்சியாளர்கள்.

பெரிய பெரிய கப்பல்களிலும் ட்ரோலர் இயந்திரப் படகுகளிலும் சென்று கதற கதற கடலை சூறையாடுவதை முழுநேர திருட்டுத்தொழிலாகவே மேற்கொண்டுவருகிறார்கள் பல பெரு நிறுவனங்கள் என்று ஆதாரத்துடன் நிரூபிக்கிறது ஆவணப் படம். அதுமாத்திரமல்ல, கடற்பாதுகாப்பு என்று, பெயருக்கு வகை தொகையில்லாத சட்டங்களையும் அதனைப்பாதுகாப்பதற்கு ஏகப்பட்ட அமைப்புக்களையும் நிறுவிவைத்துள்ள எந்த அரசும் இதயசுத்தியுடன், கடலைப் பாதுகாப்பதில்லை என்றும் இவர்களின் ஆசீர்வாதத்துடன்தான் மொத்தக்கடலும் சாம்பராகிக்கொண்டிருக்கிறது என்றும் அம்பலாமாக்குகிறது.

மீன் உணவு உண்பது மாமிசம் உண்பதைவிட நல்லது என்கிற கருத்துக்கள் அனைத்துக்கும் பின்னாலுள்ள மொக்குத் தத்துவங்களை உரித்து, இவையெல்லாம் எவ்வளவு பெரிய பொய்கள் என்று, கடலின் அலை திறந்து காட்டுகிறார் இயக்குநர் அலி தப்ரிஸி.

மீன்கள் மற்றும் கடலுயிரிகளின் மீதான மனிதனின் இன அழிப்பு இவ்வாறு இயந்திர வேகத்தில் தொடர்கிறது என்றால், மறுபுறத்தில் இந்தக் கடற்சமனிலை குலைவதால், நீருக்கு அடியில் உள்ள கடற்காடுகள் நடுங்கவைக்குமளவில் அழிந்துகொண்டுவருவதாக இன்னொரு தகவலையும் தருகிறார் இயக்குநர்.

தரையில் மரங்கள், தாவரங்கள், காடுகள் ஆகியவை எவ்வாறு கரியமில வாயுவை (Co2) உள்ளெடுத்து, சுத்தமான உயிர்வாயுவை (O2) மானிட குலத்தின் தூய சுவாசத்திற்காக உவந்தளிக்கின்றனவோ, கடலும் இதேபோன்ற தொழிற்பாட்டினை பல மடங்குகளில் செய்துகொண்டிருக்கிறது. அதாவது, உலகின் 93 வீதமான கரியமில வாயு கடலடிக் காடுகளில்தான் கடற்தாவரங்களினாலும் பாசிப் படலங்களினாலும் பவளங்களினாலும் சேகரிக்கப்படுகிறது. இயந்திரங்களின் துணையோடு மூர்க்கமாக மேற்கொள்ளப்படுகின்ற மீன்கொள்ளையினால், கடற்தாவரங்கள் ஏக்கர் கணக்கில் அழிக்கப்பட்டு, கடலடியில் சேகரமாகியுள்ள கரியமிலவாயு, உமிழ்ந்து வெளித்தள்ளப்படுகின்ற பேரபாயம் கொஞ்சம் கொஞ்சமாக அதிகரித்து வருகிறது என்று படம் போட்டு சொல்கிறது இந்த ஆவணப்படம்.

இதனை, மேலும் விளக்கமாகக் கூறும்போது, கடலடிக் காடுகளில் சேகரிக்கப்படுகின்ற இந்த 93 வீத கரியமிலவாயுச் சேகரத்திலிருந்து ஒரு வீதம் இழக்கப்பட்டால்கூட, அது 970 லட்சம் கார்களிலிருந்து வெளியிடப்படுகின்ற புகைக்கு சமன் என்கிறார் அலி தப்ரிஸி. தற்போது, இந்தக் கடலடிக் காடுகள், முரட்டுத்தனமான மீன்கொள் ளையினால், வருடமொன்றுக்கு 390 கோடி ஏக்கர் என்கின்ற ரீதியில் அழிந்துவருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இது, கிரீன்லாந்து, நோர்வே, பின்லாந்து, டென்மார்க், பிரித்தானியா, ஜேர்மனி, பிரான்ஸ், ஸ்பெய்ன், போர்த்துக்கள், இத்தாலி, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளின் மொத்த நிலப்பரப்பளவுக்கு ஈடானது.

இது மாத்திரமல்ல, உலகெங்கிலுமுள்ள அனைத்து கடல்களிலும் மேற்கொள்ளப்படுகின்ற மீன் பண்ணை என்ற புலுடா விளையாட்டு, பெருமுதலாளிகளால் வருடக்கணக்கில் கடலடிமைகளாக கொண்டு செல்லப்படுகின்றவர்களின் உயிரை உறைய வைக்கும் கதைகள், குருதி சிந்தும் கடலின் குரூர அனுபவங்கள் அத்தனையையும் இந்த ஆவணப்படம் சாட்சியங்களாக்குகிறது.

இந்த ஆவணப்படம் பல அரசுகளுக்கு - பல அமைப்புக்களுக்கும் - பல வணிக முதலைகளைக்கு - பல கடலடி முதலாளிகளுக்கு - பிடரியைப் பொத்தி அடித்திருக்கிறது.ஆர்வமுள்ளவர்கள் - ஆர்வமில்லாதவர்கள் அனைவரும் ஒன்றரை மணித்தியாலங்கள் நேரமொதுக்கி பார்க்கவேண்டிய மிக மிக முக்கியமான ஆவணம். ■

இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ கஸ்தூரியார் வீதியிலுள்ள கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09.04.2022 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு :0214927781